விலை : 20.00
பக்கங்கள்: பதினாறு+பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 10 ஞாயிற்றுக்கிழமை (27.09.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.No : 021 222 5392
(C-2308)

## வெளிநாட்டு தலைவர்களுடன் ஜனாதிபதி பல சுற்றுப் பேச்சு

## இலங்கை விடயம் தொடர்பில்

(நியூயோர்க்)—

**ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிநாட்டு அரச தலைவர்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார். சுமார் 10 இற்கும் மேற்பட்ட தலைவர்களுடன் ஜனாதிபதி பேசியுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 70ஆவது கூட்டத் தொடர் இலங்கை நேரப்படி நேற்றுமுன் தினம் இரவு 7.30இற்கு ஆரம்பமானது.

2015 ஆம் ஆண்டுக்கான மாநாட்டின் நிரந்தர அபிவிருத்தி மாநாடு, பரிசுத்த பாப்பரசரின் உரையுடன் ஆரம்பமாகியது.

இலங்கை ஜனாதிபதி உள்ளிட்ட 150இற்கும் மேற்பட்ட நாடுகளின அரச தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திரிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் நேற்று முன்தினம் இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இரண்டு நாடுகளின் பங்குபற்றுதலுடன், சார்க் வலயத்தை அபிவி

15ஆம் பக்கம் பார்க்க

## ஜி.கே.வாசன் உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் தலைமையில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும், மனித உரிமை மீறுதல் குறித்து சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும், இலங்கையில் தமிழர்

16ஆம் பக்கம் பார்க்க

## திலீபனுக்கு நேற்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழ் மக்கள் சார்பில் ஐந்து அம்ச கோரிக்கைகளை இந்தியாவிடம் முன்வைத்து உண்ணா விரதமிருந்து உயிரிழந்த தியாக தீபம் திலீபனின் இருபத்தியெட்டாவது நினைவு தினம் யாழ்.பல்கலைக் கழகத்தில் நேற்றைய தினம் மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

16ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க தீர்மானத்தில் மறைமுக கலப்பு நீதிமன்றம்

### தயான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச தீர்மானத்தில் மறைமுகமாக கலப்பு நீதிமன்ற விசாரணை வலியுறுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் ராஜதந்திரி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டதாக தென்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதவான்கள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்களின் ஒத்துழைப்புடன் இலங்கை நீதிமன்ற பொறிமுறைமையின்கீழ் விசாரணை நடத்தப்பட வேண்டுமென இரண்டாம் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## இன்று அரிதான சந்திர கிரகணம்

மிகவும் அரிதான சந்திர கிரகணம் இன்று ஏற்படவுள்ளதாக வானியல் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

30 வருடங்களுக்கு பின்னர், இப்படியான சந்திர கிரகணம் ஒன்று ஏற்படவுள்ளதாக நாஸா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சந்திரகிரகணம் இலங்கையர்களும் காணக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் பிரகாசமான மற்றும்

15ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரி-மோடி சந்தித்துப் பேச்சு!



(நியூயோர்க்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் நியூயோர்க்கில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஐ.நா பொதுச்சபையின் 70ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றுள்ள இந்தியப் பிரதமரும், ஜனாதிபதியும் பக்க நிகழ்வாக இந்தப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

16ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா செயலாளரை சந்தித்தார் மைத்திரி

(நியூயோர்க்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் நாயகம் பான் கீ மூனை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு ஐக்கிய நாடுகளின் பொது அமர்வுக்கு புறம்பாக நியூயோர்க்கில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையின் புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள், மனித உரிமைகள் பேரவை

15ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகளை விடுவியுங்கள் நீதி அமைச்சருக்கு கடிதம்!

(கொழும்பு)

அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது பிள்ளைகளுக்கு பொது மன்னிப்பு அளித்து, அவர்களை உடனடியாக விடுதலை செய்து-தங்களின் உண்மையான நல்லாட்சி மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு அரசியல் கைதிகளின விடுதலைக்கான மக்கள் அமைப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல் கைதிகளின் உறவினர்களான பெற்றோர் மற்றும் மனைவி, பிள்ளைகளாகிய தாம்

15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வடக்கு கிழக்கில் மக்கள் எழுச்சி

### மக்கள் சக்தி அமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் படுகொலைக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வடக்கு கிழக்கில் நாளை முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை பூரண எழுச்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அழைப்பை மக்கள் சக்தி அமைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பின் தலைவர் எம்.குமாரவேல் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நாளை 28ஆம் திகதி முதல் வடக்கு கிழக்கில் பூரண எழுச்சி, ஹர்த்தால் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்

15ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா தீர்மானத்துக்கு பிரித்தானியா பாராட்டு!

(ஜெனிவா)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 30வது கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இலங்கை ஒத்துழைக்க முன்வந்திருப்பது முரண்பாட்டு மரபுக்குத் தீர்வு காணும் மற்றொரு நெருக்கமான நகர்வு என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் தற்போதைய கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா, பிரித்தானியா, மசிடோனியா மற்றும் மொன்ரெனிக்ரோ ஆகிய நாடுகள் தீர்மானம் ஒன்றை முன்வைத்துள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது புரியப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அமைப்பு நீதிபதிகள், விசாரணையாளர்கள் மற்றும் சட்டவாளர்களைக் கொண்ட விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என இந்த தீர்மான வரைவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கவுள்ளதாக

16ஆம் பக்கம் பார்க்க

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தர்மடத்தில் நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு சமையல் வேலைக்கு பெண் பணியாள் தேவை. தங்குமிட வசதியும் உண்டு (சம்பளம் 15000/= வழங்கப்படும்)

**தொடர்பு : 0773611282**

## வேலையாள் தேவை

வாகனத்தில் சென்று ஐஸ்கிறீம் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. (வெளிமாவட்டத்தில் இருந்து வருகை தருபவர்களுக்கு உணவு, தங்குமிட வசதி இலவசம், சம்பளம் 20000/=)

**தொடர்பு : 0774087448**

## வாடகைக்கு

யாழ். நீராவியடி பிறவுண் வீதிக்கு அருகாமையில் வீடு வாடகைக்குண்டு. (1946)

தொடர்புகளுக்கு: 071 627 4916

## காணி விற்பனை

மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தென்னந்தோட்டம், வீடு கட்ட உகந்த இடம். (1902)

**தொடர்பு:-0778730129**

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

### தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2016
### வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| **அன்பொளி கல்வியகம்** | **அன்பொளி கல்வி நிலையம்** |
| யாழ். இந்துக்கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

அனுமதிகளை 28.09.2015 திங்கட்கிழமையிலிருந்து 05.10.2015 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

*சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.*

இயக்குநர்கள்

[சி-2312]

# இலங்கைக்கு ஆதரவாக நான்கு நாடுகள்!

(கொழும்பு)

இலங்கை சம்பந்தமான ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

விவாதத்தின் போது, ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை ஏற்பதா? இல்லையா? என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

குறித்த அறிக்கையில், இலங்கையின் இறையாண்மைக்கு எதிராக முனவைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் ரஷ்யா, சீனா, கியூபா, பாகிஸ்தான் நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இந்த குற்றச்சாட்டுக்களுக்கு எந்த விதத்திலும் இணங்க முடியாது என மேற்படி நாடுகள் மனித உரிமை பேரவையில் தெரிவித்துள்ளன.

குறிப்பாக சர்வதேச நீதிபதிகளை கொண்ட விசாரணைக்கு இந்த நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. அறிக்கை தொடர்பான வாக்கெடுப்பில் 47 நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன.(எ-12)

## வேலையாள் தேவை

விஸ்வமடுவில் இயங்கும் பிரபல அச்சகத்துக்கு Photoshop, CorelDRAW, indesigning வேலை தெரிந்த அனுபவமுள்ளவர்கள் தேவை. மற்றும் அலுவலக உதவியாளரும் தேவை. (ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. தங்குமிட வசதி, உணவு வசதி செய்து தரப்படும்)

தொ.பே :0772487550 — வானவில் கலையகம், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(904)

## பணியாளர் தேவை

01. விற்பனை முகவர்
02. சிட்டை எழுதுநர்
03. கணக்காளர்
04. கணனி அறிவுடையோர்
05. உதவியாளர்

**ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்**

தொ.பே இல : 0773611282

**யாழ் போன் சொப், இல.09, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-2310)

## பதவி வெற்றிடம்

எமது ஆலயத்துக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளது. தகுதியுள்ளவர்கள் விண்ணப்பம் செய்யவும்.

**01. உதவி ஐயா**
**02. மடப்பள்ளி ஐயா**

இருவருக்குமான வெற்றிடம் உள்ளது. எனவே விண்ணப்பம் செய்ய விரும்புவர்கள்

**தலைவர் / செயலாளர்**
**அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்**

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும், இருப்பிட வசதி செய்து தரப்படும். நற்சான்றிதழுடன் விண்ணப்பம் அனுப்பி வைக்கவும்.


0772378734 (சி-2311) கோ.பத்மநாதன்

யாழ் மண்ணில் டியிற்றல் பிறிண்டிங் துறையின் முன்னோடி

# Jana Digital Printing

ஜெனா டிஜிற்றல் பிறிண்டிங்

1 சதுரஅடி பனர் பிறிண்டிங் **30/=**



Name Board பெயர்ப் பலகை **180/=**

அதிரடி விலைக் குறைப்பு

3 வருட உத்தரவாதம்

- பந்தல் பிறிண்டிங்
- டிஜிற்றல் பனர் பிறிண்டிங் (Banner) - 30 ரூபா முதல்....
- பெயர்ப் பலகை (Name Board) - 180 ரூபா
- டிஜிற்றல் ஸ்ரிக்கர்கள் (sticker) - 70 ரூபா
- லைட் பதாகைகள் (Light Boardes) - 450 ரூபா


(C-2321)

மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம். 077 073 1654 / 021 221 3233

# இலங்கை போர்க்குற்றங்கள் குறித்து மகிந்தவே பொறுப்புக்கூற வேண்டும்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் உரிய முறையில் இடம்பெறுவதோடு போர்க்குற்றங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே முற்றுமுழுவதுமாக பொறுப்பு கூற வேண்டியவர் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கையை முன்னிலைப்படுத்தி இனவாதத்தை கட்டவிழ்த்து விட முயற்சிக்கும் பாசிச குழுக்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு சர்வதேச நாடுகளின் நம்பிக்கை பிரகாரம் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும் மூவின மக்களின் உரிமைகளை பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகளை நிறைவேற்ற இந்த சந்தர்ப்பத்தை தேசிய அரசானது உரியவாறு பயன்படுத்தி கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

கொழும்பில் அமைந்துள்ள நவசமசமாஜக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

இலங்கையில் இடம்பெற்றுள்ள போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணை யாளர்களை உள்ளடக்கிய விசேடகலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்து விசாரணைகள் உரிய முறையில் இடம்பெற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதனிடையே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் யுத்த நடவடிக்கையின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய வகையில் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கையை நாம் வரவேற்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


கலை ஆர்வலர்களுக்காக

மீண்டும்

அளப்பருங்கருணை

கொக்குவில் கலாபவனம் வழங்கும்
தாகூரின் சன்னியாசி நாடகத்தையும்,
கவிதைகளையும் கொண்டதொரு

நடன நாடகம்

02, 04 ஒக்ரோபர் 2015
மாலை 6.00 மணி


கூவர் அரங்கம்.
யாழ். மருத்துவபீடம்.

நுழைவுக்கட்டணம் ரூ.500/-

யாழ். மருத்துவபீட பழைய மாணவர் சங்கம்.

(1901)



வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுரக் கோவிலின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது. முற்பகல் 11 மணி தொடக்கம் 12 மணிவரை தேர்ப்பவனி இடம்பெற்றது. சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது ஆயிரக் கணக்கான அடியவர்கள் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

(படங்கள் - கரணவாய், தும்பளைச் செய்தியாளர்கள்)

## ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

அம்பலாங்கொடை பிரதேசத்தில் இருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள் உள்ளிட்ட ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை, வலேவத்தை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து குறித்த ஆயுதங்கள் நேற்று முன்தினம் மாலை கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் இரட்டைக்குழல் துப்பாக்கி, கட்டுத்துவக்கு உள்ளிட்ட துப்பாக்கி வகைகளும், பல்வேறு ரக துப்பாக்கி ரவைகளும் உள்ளடங்கி இருந்ததாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நபரொருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

## கொத்மலை மண்சரிவில் சிக்கி 4 சிறுவர்கள் உட்பட 7பேர் பலி

கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட கொத்மலை, ரம்பொடை வெதமுல்ல பிரிவு லிலிஸ்லேண்ட் தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவில் ஏழு பேர் பலியாகியுள்ளதாகவும் அவர்களது சடலங்கள் கொத்மலை வைத்தியசாலையின் பிரேத அறையிலிருந்து, மரண பரிசோதனைக்காக நாவலப்பிட்டி சட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மீட்பு பணியாளர்களால் நேற்றுமுன்தினம் இரவு வரை 6 சடலங்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில் நேற்று காலை 2 வயதுடைய சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இதற்கமைய உயிரிழந்தவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த லோகநாயகி (48 வயது), காந்திமதி (23 வயது), புவனா (6 வயது), லட்சுமி (67 வயது), சுபானி (9 வயது), மனோஜ் (4 வயது), ரூபினி (2 வயது) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

மேலும் இருகால்களும் உடைந்த நிலையில் செல்லையா கணேசன் (வயது 55) என்பவர் மீட்கப்பட்டு ஆபத்தான நிலையில் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் இவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவ் அனர்த்தத்தில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 30 பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் இடம்பெற்ற இந்த பாரிய மண்சரிவில் 9 வீடுகளை கொண்ட லயனும் (தோட்டக்குடியிருப்பு) சேதமடைந்துள்ளன.

9 வீடுகளில் 7 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாறாங் கற்களுடன் கூடிய மண், வீடுகளை உடைத்துக் கொண்டு முன்பக்கமாக வந்திருக்கின்றன. (இ-7)

## பொலிஸாரின் அணுகுமுறைக்கு எதிராக வழக்கு தொடுக்க முடிவு

சிறுமி சேயா சதெவ்மியின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 17 வயது பாடசாலை மாணவன் தொடர்பில் பொலிஸார் பின்பற்றிய அணுகுமுறைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

மாணவன் தொடர்பில் பொலிஸார் தகவல்களை வெளியிட்ட விதத்திற்கு தாம் கடும் எதிர்ப்பை தெரிவிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் உள்ள 17 வயது பாடசாலை மாணவனுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் அவர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படும் வரை அவர் நிரபராதியாகவே கருதப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## மின்னல் தாக்கி மூன்று பேர் பலி

நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலையினால் இடி, மின்னல் தாக்கம் காரணமாக 24 மணி நேரத்துக்குள் இரண்டு பெண்கள் உள்ளிட்ட 3 பேர் பலியாகியுள்ளனர்.

தொடர்ந்தும் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் சீரற்ற காலநிலையும் இடி மின்னல் தாக்கங்களும் காணப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதனால் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் காலநிலை அவதான நிலையத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

## ரணிலுக்கு எதிராக ஜெனிவாவில் முறைப்பாடு செய்யப்படும்-வாசு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக ஜெனிவாவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் அமைந்துள்ள சர்வதேச நாடாளுமன்றில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது. எதிர்வரும் வாரத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கௌரவத்தை பாதிக்கும் வகையில் பிரதமர் கடந்த காலங்களில் நாடாளுமன்றில் செயற்பட்டார். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை வெளியிட பிரதமர் இடமளிப்பதில்லை.

சில சந்தர்ப்பங்களில் சபாநாயகருக்கும் மறைமுகமாக அழுத்தங்களை பிரயோகிக்கின்றார். இதனால் சபாநாயகரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றார். பிரதமரின் நடவடிக்கையினால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

பிரதமரின் நடவடிக்கைகள் குறித்த காணொலிகள் தேவையென்றால் சர்வதேச நாடாளுமன்ற சங்கத்திற்கு சமர்ப்பிக்க முடியும் என வாசுதேவ நாணயக்கார கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் நாடாளுமன்றில் நடந்து கொள்ளும் விதத்திற்கு எதிராக நாடாளுமன்றின் உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பை வெளியிட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளின் போது ஏதேனும் ஓர் வழியில் எதிர்ப்பை வெளியிட தீர்மானித்துள்ளதாக இந்தக் குழுவினர் அறிவித்துள்ளனர். (இ-7)




**வடக்கு மாகாண இறைவரி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி**

ஆழியெழ சங்கும் வில்லுமெழ திசை
வாழியெழ தண்டும் வாளுமெழ
அண்டம்
மோழையெழ முடிபாதமெழ அப்பன்
ஊழியெழ உலகம் கொண்டவாறே

- ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய்மொழி



சங்கு சக்கரம்,விஸ்ணு,தண்டாயுதம், வாள் ஆகிய ஐந்தும் எம்பெருமான் ஸ்ரீ மகா விஷ்ணுவின் பிரதான ஆயுதங்களாகும். இவற்றைப் பஞ்சாயுதம் என்றும் கொள்வர். அண்ட சராசரங்களையும் காத்து அருள்புரியும் எம்பெருமான் அவற்றை இந்த ஐந்து ஆயுதங்களின் மூலமே செய்வதாக புராணங்கள் கூறும். பஞ்ச ஆயுதங்களுள் முதன்மையானது "ஆழி அல்லது சக்கரம்" ஆகும். இதனை சுதர்சனம் என்றும் அழைப்பர்.

இது பகவானது வலது கையில் இருப்பதால் மகா வீரம் வாய்ந்ததாகும். எதிரிகளை தயவு தாட்சண்யமின்றி அழிப்பதால் "ருக்ரம்" வாய்ந்ததாகும். இவர் பகவானுடைய கட்டளைக்காக காத்திருந்து நித்ய சேவை புரிவதால் "சக்கரத்தாழ்வார்" என்றும் போற்றப்படுகின்றார். இவரை வணங்குவதால் எதிரிகள் தோற்கடிக்கப்படுவதுடன் பேய்,பிசாசு,பில்லி,சூனியம்,நோய் நொடிகளும் விலகி ஓடுகின்றன.

பகவானது ருத்ர அவதாரமான நரசிம்மத்தின் அம்சமே சுதர்சனம் என்றும் கொள்வர். பகவான் துஷ்டர்களை அழிப்பதற்கும் பக்தர்களைக் காப்பதற்கும் யுகம் தோறும் அவதரிப்பதுடன் பக்தர்களுக்கு நித்ய அனுக்கிரகம் செய்வதற்காக இப் பூவுலகின் பல்வேறு பாகங்களிலும் அச்சாவதார மூர்த்தியாய் தோன்றி அருள் பாலிக்கின்றார். அவ்வாறு தோன்றிய திவ்ய சேத்திரம் தான் ஈழத்தின் ஸ்ரீவல்லிபுரம் ஆகும்.

வல்லிபுரத்தில் கோயில் கொண்ட படியினால் வல்லிபுர நாதன் எனவும் பெயர் வழங்கப்படுகின்றது. பகவானை முழுமையான திவ்ய சொரூபத்தில் வணங்குவதற்கு பல கடுமையான சாஸ்திர சம்பிரதாயங்கள் இருப்பதால் மிக இலகுவாக எளிமையான பக்தி சேவையினால் இறைவனைத் துதிப்பதற்கு அவர்களது ஆயுத வழிபாடு துணை புரிகின்றது.

எமது வல்லிபுரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாழும் சகல மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் மாயவரின் ஆழித் தீர்த்தம் இன்று நடைபெறுவது இன்றைய நாளின் சிறப்பம்சமாகும். நாம் அனைவரும் பக்தி சிரத்தையுடன் பங்கு கொண்டு வல்லிபுர நாதனின் திருவருள் பெறுவோமாக.

"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"
"கோவிந்தா ஹரி கோவிந்தா"

பாலசுந்தரம் சிவாஜி,
இறைவரி ஆணையாளர்,
வடக்கு மாகாண சபை.

**அவதாரமாய் அவதரித்து அருளாட்சி செய்கின்ற அச்சுதனே அவதார புருஷனே வணங்குகிறோம் உன் அடியை**



சரித்திர பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமியின் கொடியேற்றம் கடந்த செப்.12ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத் திருவிழாக்களில் முக்கியமானதும் சிறப்பாகவும் விளங்குவது சமுத்திர தீர்த்தத்திருவிழாவாகும்.

சரித்திர வரலாற்று ரீதியான இத் திருவிழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெரும் திரளான மக்கள் கூடுவார்கள். இத்திருவிழா இன்று நடைபெறுகின்றது. இன்று மாலை எம் பெருமான் கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தமாடுவதற்கு செல்வார். பக்கதர்கள் சூழ்ந்திருக்க மாயவன் சக்கரத்தை கற்கோவளம் பக்தர்கள் தோளிலே காவிக்கொண்டு சங்கு சக்கரம், மாயாவா, கேசவா, வைகுந்தா, நாராயணா, கண்ணா, கோவிந்தமலையை கையிலே கொண்டு கற்கோவளத்தில் மச்சவதாரம் என கோஷங்கள் எழுப்பியவாறு காவிச்செல்வார்கள்.

கற்கோவளம் கடலில் சந்திரன் உதயமாகும்போது மாயவனின் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். இக் கண்கொள்ளாக் காட்சியைக் காண்பதற்கு மக்கள் சமுத்திரம் திரண்டிருக்கும். சமுத்திர தீர்த்தத்துக்கும் வல்லிபுர சுவாமி கோயில் தோன்றியமைக்கும் சரித்திர வரலாறு கூறுவதாவது, கற்கோவளம் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருப்பவர்களின் வலைகளில் மீன் ஒன்று பிரவேசித்து வலைகளைப் பிய்த்து கோலகலமாக துள்ளி விளையாடியது.

இக்காட்சியை ஆனந்தத்தோடு மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். மீன் பிடித்தவர்கள் ஆத்திரமுற்று மீனைப் பிடிக்க முயன்றனர். ஆனால் அம் மீன் பிடிகொடாது எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக ஒரு பெண்ணின் மடியில் விழுந்தது. அப் பெண் லவல்லி எனும் பேர் உடைய வராவார். அப் பெண்ணின் மடியில் இருந்த மீன் பிள்ளை போல் தோன்றியது. லவல்லியும் சந்தோசமடைந்து அப் பிள்ளையை அணைத்தபடி ஒரு மர நிழலில் அமர்ந்து சயனிக்க செய்தார்.

பின்பு ஒரு பல்லக்கில் வைத்து லவல்லி எனும் வல்லி நாச்சியுடன் அப்பிள்ளையை தாங்கிச் சென்றனர். களைப்படைந்த அவர்கள் களைப்பாற்றுவதற்கு ஒரு இடத்தில் பல்லக்கை இறக்கினார்கள். மீண்டும் செல்வதற்கு பல்லக்கை தூக்க முடியவில்லை அவர்கள் பல்லக்கை ஆச்சரியத்துடன் பார்த்த போது குழந்தை சக்கரமாக காட்சியளித்தது. எல்லோரும் மாயவனின் சக்கரத்தை வணங்கினார்கள். அன்று தொட்டு இன்றுவரை இந் நிகழ்வை குறிக்கும் முகமாக சமுத்திரத்தீர்த்தத் திருவிழா கற்கோவளம் மக்களால் நடத்தப்படுகின்றது.

**சாமஸ்ரீ தேசமான்ய**
**LION த.ஜெயரூபன். சமாதான நீதவான்,**
**கணக்காய்வாளரும், வருமானவரி ஆலோசகரும்,**
**மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும்**
**அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்**
**சமூக சேவையாளர் கற்கோவளம்.**

(C-2313)

**யாழ்/ வடமராட்சி**
**துன்னாலை அருள்மிகு**
**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்**
**புலோலி Po**
**மன்மத தீர்த்தோற்சவம்**
**பிரதம குருமார்களின்**
**நல்லாசிகள்**

இதம்.தே நாதபஸ்காய நாபத்தாய கதாசன!
நாசாசுப்ருஷவே வாச்யம் நசமாம்யோப் யஸுயதி. /எ/

**ஸ்ரீமத் பகவத்கீதை 18-ம் அத்.**

உனக்கு கூறப்பட்ட இந்த ரஹஸ்யமான கீதோபதேசத்தை ஒரு போதும் தவம் இல்லாதவனுக்கும், பக்தி, இல்லாதவனுக்கும் சொல்லலாகாது, விருப்ப மில்லாதவனுக்கும் சொல்லக் கூடாது. எவன் என்னிடம் குறை காண்கிறானோ அவனுக்கு ஒரு போதும் சொல்லக் கூடாது.

**ஸ்ரீ வல்லிபுரமாயவன் மெய்யன்பர்களே!**

அவனருளாலே அவன்தாள் பணிந்து !

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவமானது கடந்த செப். 12-ம் நாள் சனிவாரத்தில் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து இனிதே நடைபெற்றுவருகின்றது. இன்றையதினம் செப். 27-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது.

நித்திய பூசைகளில் ஏற்படும் வழுக்களைப் போக்கவே நைமித்தியம் எனப்படுகின்ற தூகிய மகோற்சவம் நடாத்தபடுகின்றது. இறைவனது பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பனவாகவும் பிரமோற்சவம் எனப்படுகின்ற மகோற்சவம் நடத்தப்படுகின்றது.

எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிபுர சக்கரவடிவான மயாவனின் திருவருட்கடாக்ஷத்தினாலே இந்த நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழுகின்ற அனைத்து இனமக்கள் அனைவரும் சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வையும் - எம் பெருமானின் அருளையும் பெற்று நீடூழி நிலைத்து வாழ மாயவனைப் பிரார்த்தித்து மாயவனது நல்லாசிகளையும் எமது மனப்பூர்வமான நல்லருளாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கின்றோம்.

நன்றி சுபம்.

**ஸ்ரீ ஆழ்வார் பீடம்**
**ஸ்ரீ வல்லிபுரக் கோவில், புலோலி. Po**

பிரம்மஸ்ரீ.ச.க.சுதர்சனக் குரு, J.P
பிரம்மஸ்ரீ. ச.க.புருஷோத்தமக் குரு JP
பிரதம குருமார்கள்
பிரம்மஸ்ரீசுதர்சன கணபதீஸ்வரக்குரு
பிரதம, மஹோற்சவகுரு.

(C-2313)

# இன்று வங்கக்கடலில் நீராடிவரும் மாயவனின் அருள் பார் எங்கும் கிடைக்க வேண்டி நிற்போர்


அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
**சரவணா மகாலட்சுமி தங்கமாடம்**
இல.93,
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே:- 0213214577

தரமான 22 கரட் தங்கநகைகளுக்கு
**தரன் நகை மாளிகை**
ம.ம.வி.வீதி, நெல்லியடி.
தொ.பே.0213219254
கிளை I தரன் நகை மாளிகை
பிரதான வீதி, பருத்தித்துறை.

தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
**வைஷ்ணவி நகைப்பூங்கா**
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே. :
0212264519

யாழ்.பீச் ஹோட்டல்
யாழ்.பிரதான வீதி,
வல்வை.
தொ.பே.021 226 1567
Room,
Hall A/C Facility
Conference
Hall with 200
Seating Capacity

நவீன வடிவமைப்புக்களில் தரமான 22 கரட் நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
சுசீலா ஆபரண மாளிகை
இல.258, பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே. 021 226 3064
கிளை I
நியூ சுசீலா ஆபரண மாளிகை
இல.228, பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே.94212264154

**சிறீ ரங்கம் டெக்ஸ்ரைல்ஸ்**
பிரதான வீதி,
நெல்லியடி.
NTB
வங்கிக்கு அருகில்
கிளை I
வதிரி வீதி, உடுப்பிட்டி.

# சிறுபான்மையினருக்கு எதிராக ஆயுதம் ஏந்த நாங்கள் தயார்!

## எச்சரிக்கின்றார் ஞானசார தேரர்

(கொழும்பு)


**தேசிய அரசாங்கம் தொடர்ந்தும் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஆயுதம் ஏந்திப் போராடவும் தமது அமைப்பு தயாராக இருப்பதாக ஞானசார தேரர் கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கிருலப்பனையில் உள்ள பொது பல சேனாவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேற்கண்ட கருத்தை முன்வைத் துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட் டுள்ள ஞானசார தேரர். இந்த அர சாங்கம் சிறுபான்மையினரின் நலன்களில் காட்டும் கரிசனையில் சிறு அளவு கூட பெரும்பான்மையி னர் குறித்து சிந்திப்பதில்லை.

நல்லாட்சி, நல்லிணக்கம் குறி த்து பேசிக்கொண்டு அமைச்சர்கள் கிறிஸ்தவ பாதிரிகளையும். இந்துக் குருக்களையும். முஸ்லிம் மௌல விமாரையும் அழைத்து அமைச்சுக் காரியாலயங்களில் கூடிக்குலாவு கின்றனர். ஆனால் எங்களைக் கலந்து கொள்ளாமல் எந்தவொரு நல்லிணக்கமும் இந்த நாட்டில் சாத் தியப்படாது.

தொடர்ந்தும் இந்த அரசாங்கம் எங்களைப் புறக்கணித்துவிட்டு. சிறுபான்மை மக்களைத் தாலாட் டிக் கொண்டிருந்தால் நாங்கள் எங்களது உரிமைகளைப் பாது காத் துக் கொள்வதற்காக சிறுபான்மை மக்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்த வும் தயங்க மாட்டோம் என்றும் எச் சரித்துள்ளார். (இ-7)




# ரவிராஜ் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் சுவிட்சர்லாந்து

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ரவிராஜ் கொலை தொடர்பில் விசாரணை மேற்கொள்கின்ற குற்றப்புலனாய்வு பிரவு அதிகா ரிகள். அதன் பிரதான சந்தேக நப ரான சரன் எனப்படுபவரை கைது செய்வதற்காக சுவிட்சர்லாந்து அர சாங்கத்தில் உதவி பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளனர்.

சரன் எனப்படுபவர் கிழக்கு மாகா ணத்தின் முன்னாள் முதலமைச்சர பிள்ளையானின் நெருங்கிய ஆதர வாளர் என்பதோடு அவர் சுவிட்சர் லாந்திற்கு தப்பியோடியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ரவிராஜ் கொலை தொடர்பில் இதுவரையில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் களுக்குள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மற்றும் கடற்படை படை யினர் மூவரும் உள்ளடக்கப்படு வார்கள்.

சந்தேக நபர்களின் வாக்கு மூலத்திற்கமைய ரவிராஜை கொ லை செய்வதற்கு பயன்படுத்திய துப்பாக்கியை கண்டு பிடித்த குற்றப் புலனாய்வு பிரிவு, துப்பாக்கி பிர யோகம் மேற்கொண்ட நபர், கொலையாளியை ஆட்டோவில் அழைத்து வந்த விதம் மற்றும் துப் பாக்கி பிரயோகம் மேற்கொண்ட தன் பின்னர் கொலையாளியை அழைத்து சென்ற மோட்டார் சைக் கிள் சாரதி தொடர்பில் அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்தி வருகின்றது.

கைது செய்யப்பட்டுள்ள இருவர் அரசு சாட்சிகளாக மாறுவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளதாக வும் அவர்களினால் வெளிப்படுத் தப்படும் தகவல்களின் அடிப்படை யில் சரன் என்பவரை கைது செய் வதற்காக குற்றப்புலனாய்வு பிரிவு விசேட குழுவொன்றை விரை வில் சுவிட்சர்லாந்திற்கு அனுப்பி வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

கடந்த அரசாங்கத்தின் உயர் பாதுகாப்பு பிரதானி ஒருவரின் உத் தரவுக்கமைய, விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து அரசாங்கத்தில் இணைந்து கொண்ட கிழக்கு மாகாண தலைவர் ஒருவர் இக் கொலைக்கு உத்தரவு வழங்கிய தாக பல தகவல்கள் இதுவரையில் வெளியாகியுள்ளன. (இ-7)

## மரண அறிவித்தல்

**அமரர் குகராசா வாசுகி**



அராலி மத்தி வட்டுக் கோட்டையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட குக ராசா வாசுகி 25.09.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற குகராசா மற்றும் புவனேஸ்வரி அவர்க ளின் அன்பு மகளும் பார்த்திபன் நாகலிங் கத்தின் அன்புச் சகோ தரியும் மாலினி, தர்சினியின் மைத்துனியும் கஸ் ஸனன், லும்பிகா ஆகியோரின் மாமியுமா வார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.09.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

தகவல் குடும்பத்தினர்.

(1897)

## ராசி பலன்

27.09.2015

(புரட்டாதி 10, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 11.40 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 9.46 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
பூரணை விரதம், சித்தாமிர்தம்

வள்ளுவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சந் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ஆயில்யம், மகரம்<br>மாலை 4.03இற்கு<br>மீன-சந் | | சுக் |
| | | | குரு<br>செவ்<br>புத |
| | சனி | | ராகு<br>சூரி |

**மீனம்:** பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

**மேடம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், வீட்டை அழகு படுத்தும் எண்ணம் உருவாகும், முயற்சிகள் எளிதில் கைகூடும் நாள், கௌரவமான நாள்.

**மிதுனம்:** பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.

**கும்பம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தையுண்டு, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, தடைப்பட்ட காரியங்களில் மாலை நேரம் வெற்றி கிடைக்கலாம்.

**மகரம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உங்களின் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**சிம்மம்:** மனதில் நினைத்த புதிய திட்டங்களை நிறைவேற்றுவீர்கள், சொந்தபந்தங்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், மனதில் புதிய சிந்தனைகள் உதயமாகும், நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாய்ப்புக்கள் தேடி வரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தெய்விக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவினைத்தரும், எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், பிறருக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் வளர்ச்சிகூடும்.

**கன்னி:** கூட்டாளிகள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

# வல்லிபுர ஆழ்வார் கோயில் தேர்த்திருவிழாவின் போது 14பவுண் நகைகள் திருட்டு!

(கரணவாய்)

**வரலாற்று பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் கோயில் தேர்த்திருவிழாவின் போது 14 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்றையதினம் வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த தேர் உற்சவம் இடம்பெற்றது. தேர்த் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வல்லிபுர ஆழ்வாரை தரிசித்தனர். இதே வேளை சுவாமி தேரடிக்கு எடுத்துச் செல்லப்பட்டுதேரவும் இழுத்துச் செல்லப்பட்ட இடைவெளியில்மேற்படி திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. பெண்கள், ஆண்கள் என பலரும் தேர் வடத்தைப்பிடித்து இழுத்துச் செல்கையில் சனக் கூட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வேளையில் மட்டும் மேற்படி 14 பவுண் நகைகள் திருடப்பட்டன. இதில் 7பவுண் தாலிக் கொடி, 5 பவுண் தாலிக்கொடி மற் றும் 2 பவுண் நிறையுடைய இரு சங்கிலிகள்ஊடனதிருடர்களால் அறுத்து செல்லப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-5-60)

# முத்து மலர் வெளியீட்டு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 30 ஆவது ஆண்டுநிறைவு விழாவினையொட்டி சிறப்பு மலரான ''முத்து'' வெளியீடும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாலைச்சந்தி பிள்ளையார் கோயிலில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட ஓய்வு நிலை மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாஸன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யா/சின்னத்தம்பி வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் எஸ்.செல்வராசாகலந்துகொள்ளவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்திலும் நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி அ.க.நடராசா தலைமையில்நடைபெறவுள்ள இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட ஓய்வு பெற்ற அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதன்போது வாழ்த்துரையினை இலங்கை வங்கி ஓய்வுநிலை உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம்வழங்குவதுடன் தொடக்கவுரையினை வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.நந்தகுமார்வழங்கவுள்ளார்.

இதன்போது சிறப்பு மலரான ''முத்து'' வெளியீடு செய்து வைக்கப்பட்டு தொடர்ந்து கவியரங்கு,கலை நிகழ்வு என்பன இடம்பெறும். (இ-5)

# இந்திய ரோலர் படகுகளின் அத்துமீறலை தடுத்து நிறுத்துக

இந்திய ரோலர் படகுகளின் அத்துமீறலைத் தடுத்து வட பகுதிமீனவர்களின் வாழ்வைக் காக்க உரிய தரப்புகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூகத்திற்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேலும் அந்த அமைப்பு விடுத்துள்ள கோரிக்கை அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடந்த காலத்தில் இடம் பெற்ற நீண்ட கொடிய யுத்தத்தால் மிக அதிகளவில் பாதிக்கப்பட்டவர்களான மீனவர்களை தொடர்ந்தும் மிதிக்கின்றதானதொரு செயற்பாடாக இந்திய ரோலர் படகுகளின் அத்துமீறிய எல்லை தாண்டல்களும் அதன்மூலமாக இலங்கையின் கடல் வளம் மாத்திரமன்றி, எமது மீனவர்களின் உபகரணங்களும் அழிக்கப்பட்டுவருகின்றமையும் மிகவும் கண்டிக்கத்தக்கதொரு செயலாகும்.

இவ் அத்துமீறல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமையின் ஒரு வெளிப்பாடாகவே இரண்டு நாடுகளின் அரசுகளும் இப்பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்துவதாகக் காட்டிக்கொண்டு பேச்சுவார்த்தைகளை மேற்கண்டவாறே காலத்தைக் கடத்துகின்றன.

இதுவரை இப்பிரச்சினை தொடர்பாக ஆக்கபூர்வமான எவ்வித தீர்வுகளும் எட்டப்படாததுடன் கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படாமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமது நாட்டின் கடல்வளத்தை அழிப்பது மாத்திரமன்றி எமது நாட்டின் எல்லைக்குள்ளும் அத்துமீறிநுழைந்து எமது கடல்வளத்தைக் கொள்ளையடிப்பதுடன் எமது மீனவர்களின் சொத்துக்களையும் அழிப்பவர்கள் தமிழ் நாட்டின் அப்பாவி ஏழை மீனவர்கள் அல்ல என்பதுடன் அதி நவீன ரோலர் படகுகளுக்குச் சொந்தக்காரர்களான மீன்பிடி முதலாளிகளும் அவர்களுக்காக தொழில்புரிவோருமே என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே பல்வேறு கெடுபிடிகளாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டுவரும் எமது மீனவர்களைக் காக்கும்பொருட்டு இந்திய ரோலர் படகுகளின் பெரும் படையெடுப்பைத் தடுப்பதற்கான தீர்மானம் ஒன்றை வட மாகாண சபை நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் இவ்வாறான எல்லைதாண்டிய அத்துமீறலுக்கு எதிராக மீனவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தனது பூரண ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றது.

அத்துடன் இப்போராட்டங்கள் திசை திருப்பங்களுக்கு இடமளிக்காமல் இதயசுத்தியுடன் இறுதி வெற்றியை நோக்கி முன்னகர்த்தப்பட வேண்டும் என்பதை உறுதியோடு வேண்டிநிற்கின்றது எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சமாதிப்பூசை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மறவன்புலோ சுத்த சிவ சமரச சன்மார்க்க சாது குருபீடத்தின் மகா சமாதிக் குருபூசையின் சிவபாக்கியம் மலர் அம்மாவின் சமாதிக் குருபூசை இன்று ஞாயிற்றுக் கிழமை உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகளின் சந்நிதியில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நாளை திங்கட்கிழமை ஸ்ரீலஸ்ரீ மௌன குருகடவுள் சுவாமிகளின் மகா சமாதிக் குருபூசை மறவன்புலோ சமாதி மடத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட பூசைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள், கீர்த்தனைகள் என்பன இடம்பெறும். (இ-5)

# வர்த்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் நடத்தும் முத்தான வியர்வை-2015 எனும் தொனிப்பொருளில் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சி வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் ஒக்டோபர் முதலாம் திகதி வியாழக்கிழமை என இரு நாட்கள் யாழ்.பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி.சுகுணரதி தெய்வேந்திரம் தலைவராகப் பங்கேற்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு. சண்முககுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர்தலைமையதிபதிதலைமையில் DDD/HO/MA/04/2015 இலக்க 29.07. 2015 ஆம் திகதி 6/2014 நெறிப்படுத்தல்சுற்றறிக்கைக்கு அமைய இவ்வருடமும் மேற்படி வாழ்வின் எழுச்சி வர்த்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-5)





## குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- நீராவியடி அருட்குரு கடையிற் சுவாமிகளின் 124 ஆவது குரு பூசைத் தினம் ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர நாதர் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்போது விசேட அபிஷேகம், பூசைகள் என்பன இடம்பெறும். (இ-5)



யாழ்.இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பாடசாலை சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான நிகழ்வு நேற்று பாடசாலையில் நடைபெற்றது. இதில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் அளித்திருந்தனர். (படங்கள்:-உ.சாளின்)

# மாநகர சபைக்கு கட்டடம் அமைக்க மாகாண சபையிடம் நிதிகோர முடிவு

யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான நிதியினை வடக்கு மாகாண சபையிடம் கோரவுள்ளதாக மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அடுத்தாண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படுவதற்கு முன்னதாகஇக்கோரிக்கையினை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். யாழ்மாநகரசபைக்கெனபுதிய கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கு 800 மில்லியன் ரூபா செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிதியினை முன்னைய மத்திய அரசு தருவதாக உறுதியளித்து முதற்கட்டமாக 70 மில்லியன் ரூபா தருவதாகவும் கூறியிருந்தது. எனினும் தற்போது வரை மத்திய அரசின் நிதி எவையும் யாழ். மாநகர சபையின் புதிய கட்டடத்திற்கு வழங்கப்படவில்லை.

தற்போது யாழ்.மாநகர சபை அமைந்துள்ள காணி கோவில்காணியாகும். இக்காணி குத்தகை அடிப்படையிலேயே யாழ்.மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மாதம் 30 ஆயிரம் ரூபாய் இக்காணிக்கு வாடகையாகவும் வழங்கப்படுகின்றது.

யாழ்.மாநகர சபைக்கென 7 கோடி ரூபாவே நிலையான வைப்பில் உள்ளது. இந்நிதியினை யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடத்தை அமைப்பதற்கு பயன்படுத்த முடியாது.

மாநகரசபைக்குட்பட்ட இடங்களில் சிறு சிறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களிற்கு சபை நிதியே செலவு செய்யப்பட்டு வருகின்றது.

ஆகையால் பெரும் வேலைத்திட்டத்திற்கு சபை நிதியினை செலவிடுவதென்பது முடியாதகாரியமாகும். இந்நிலையிலேயே மாகாண சபையிடம் கட்டடத்திற்கான நிதியினை கோரவுள்ளோம்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர், உள்ளூராட்சி திணைக்கள அமைச்சர் என்ற வகையில் அவரிடமே மேற்படி கோரிக்கையினை முன் வைக்கவுள்ளோம். புதியகட்டடத்திற்கான நிதியினை பகுதி பகுதியாக வழங்குமாறும் இவ்வருட இறுதிக்குள் அதனை கோர வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-4)

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று

யாழ். இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வின் காலை அமர்வு காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் (கனடா) பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சு.கதிர்காமநாதன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி ஐக்கிய இராஜ்ஜியபழையமாணவர்சங்க முன்னாள் தலைவரும் சமூக சேவையாளருமான வைத்திய கலாநிதி.தி.மு.வேற்பிள்ளை கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கம் வழங்கும் தனி நடிப்பு, கொழும்பு பழைய மாணவர் சங்கம் வழங்கும் பாலேந்திரா நெறியாள்கையில் உருவான "நெட்டை மரங்கள்'' எனும் நாடகம், கல்லூரி மாணவர்கள் வழங்கும் ஆங்கிலப் பாடல், பேராசிரியர் மௌன குருவின் நெறியாள்கையில் உருவான "காண்டவ தகனம்" எனும் நாடகமும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து மாலை நிகழ்வுகள் பிற்பகல் 4 மணிக்கு கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது இந்து மான்மியம் வழங்கும் நாட்டிய நாடகம், கொழும்பு பழைய மாணவர் சங்கம் நடத்தும் பழைய மாணவர் ஸ்ரீ. அருணந்தி அருணன் வழங்கும் "கீத லாவண்யம்" 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பதக்கம் வழங்கும் நிகழ்வு என்பனவும் இடம்பெறவுள்ளது. (இ-5)

**நீங்கள் உங்கள் சமூகத்தில் மீது அக்கறை கொண்டவரா?**

தற்கொலை செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கு உதவத் தயாரா? எம்முடன் ஒரு தொண்டராக இணையுங்கள், வாரத்தில் ஒரு நாள் மட்டும் நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றி சேவையாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும். காலை 9.00 - பி.ப1.00 இடையில் அழையுங்கள்.

**0212228117, 0779008776**

(1804) (மதசார்பற்றது)

**கை கொடுக்கும் நண்பர்கள்**

ஸ்ரீ லங்கா சுமித்ரயோ யாழ்ப்பாணக் கிளை

104, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.



**அமெரிக்க Green Card Lottery -2017**

அமெரிக்க **Green card Lottery** விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை **Bristol Cyber cafe. No. 8/3/4, Bristol Street, Colombo -01** எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**Tel : 0112393919, 0774276579**

W/A 44843 **www.bristolcc.biz** (C-2243)


# மரணதண்டனையை அமுலாக்க ஜனாதிபதி மைத்திரி தீர்மானம்!

(கொழும்பு)

**அனைத்து தரப்பினரதும் சம்மதத்துடன் பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனையை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள மீன்பிடி, நீரியல் வளங்கள் அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கையில் தற்போது சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. பெண்களுக்கு எதிராகவும் பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

மறுபுறத்தில் போதைப்பொருள் பாவனை போன்ற சமூகச் சீர்கேடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மற்றும் போதைப் பொருள் விற்பனை என்பன பரவலாக நடைபெற்று வருகின்றன.

இவற்றைத் தடுப்பதற்கு கடுமையான சட்டங்கள் அவசியம். பாரிய குற்றச்செயல்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையாளர்களுக்கு மரண தண்டனையை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியும் விருப்பத்துடனேயே இருக்கின்றார். எனினும் அனைத்துத் தரப்பினரதும் சம்மதத்தை பெற்றுக்கொண்ட பின்பே அதனை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-7)


**வாடகைக்கு**

யாழ்.இந்துஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554 A, 554 B, 554 C எனும் இலக்க முடைய கடைகள் வாடகைக்கு விடப்படும். **விபரங்களுக்கு நேரில் வரவும்**

**தொடர்புகளுக்கு :- நா.தயாளன்**

**இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (1892)





ஆங்கிலம், சிங்களம் கதைக்க முடியாதே என்ற கவலையா?

**இதோ!**

வீட்டில் இருந்தவாறே இலகுவாக

**ஆங்கிலம், சிங்களம்**

கற்றுக்கொள்ள அரியதோர் வாய்ப்பு

இணைந்து கொள்ள:

**REG** (இடைவெளி) **YES** என்று Type செய்து

Dialog என்றால் **77000**

Etisalat என்றால் **4499**

ஆகிய இலக்கங்களுக்கு SMS அனுப்புங்கள்.

(தினமும் 1 ரூபாய் மாத்திரமே)

**தமிழ் மொழிபெயர்ப்புடன் தினமும் 2 SMS பாடங்கள்**



ALREADY ISSUED 24000 CERTIFICATES

# MICOM THE GREAT

SINCE 1997 IN COLOMBO

## Law Classes



Corporate and Business LAW (ACCA)

Fundamentals of Ethics, Corporate Governance and Business Law } CIMA

Business Law ( AAT) (CMA)

General Principles of Law (IBSL)

Criminal Law (Police Confirmation & Promotion)

Law Entrance

Equity

Constitution

Introduction to Sri Lankan Law

Legal Methods

English Medium with Tamil Explanation

[A/C Class Rooms]

## English Classes

IELTS, Spoken English with Grammer

Diploma in English- English A/L, O/L

*Course fee:* Very reasonable

Accountancy classes: **CIMA, ACCA, CMA, AAT** and **Standard Computer Courses** will commence very soon.

***Student's Performance***

Corporate & Business Law:- Vijitha-59, Nivethika-B, Jeevitha-66,Dilanka-72, Jeyasuriya-59

*IELTS Band*:- Kaneshan-07-(In Australia),Nuwan-6.5, Jathusana -6.5-(London),Thivya -07-(London)

***Conducted by***

Mohanarajah Joganantham (M.Raja Joganantham) L.L.B.(Col.Uni) Dip in Journalism Reading for LL.M Proprietor of MICOM

An old Student of Honourable Prof.Dr.G.L.Peries, Prof.Madam Savithiri Kunasekere Prof.Dr.Sornaraja Prof.Madam. N. Chandrakasan

**Tellipalai** classes already commenced

"Micom the Great" infront of old AGA's office, Jaffna Town at Raja Complex, 205H 1/2, Kasthurijar Road on the **1st October 2015.**

Contacting Numbers: 077 284 2556,076 707 7558, 077 395 0215

Contactable person Mr.Joganantham

Lectured on Law, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College,London Business School, MICOM International



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:10<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:BSC/ அரச தொழில்<br>தொ.இ: B/4996 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 98 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'தகைமை/ தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/2354 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 10<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:Diploma in networking/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4997 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/2357 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 29 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:Hotel management/ பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4998 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:CIMA/ கணக்காளர்<br>தொ.இ: G/2361 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 16<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: B/4999 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 41<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSC/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/2364 |

**கல்யாண மாலை**

**(சர்வதேச திருமண சேவை)**

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**

**தொடர்பு:- 021 720 1005**

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# ஈழத்து மகான் கடையிற்சுவாமிகள்

முத்தி என்று இந்துமதம் வரையறுத்துள்ள இறைவனை அடைந்து இறைநிலை எய்தும் அந்நிலையை நோக்கியே அண்ட சராசரத்தில் படைக்கப்பட்டுள்ள அனைத்து ஆத்மாக்களும் பயணிக்கின்றன.

அவரவர் செய்யும் நல்வினை, தீவினைக்கு ஏற்ப முத்தி நிலைப் பயணத்தில் முன்னேற்றங்களும் தடைகளும் ஏற்படுகின்றது. ஆன்மாக்கள் கருமங்கள் புரிவதற்காகவே உலகில் உடல் எனப்படும் கருவி வழங்கப்படுகின்றது. இவ் உடல் வகைகள் உலகில் எண்பத்து நான்கு லட்சம் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. இவற்றினுள் அதி உயர்வானதாக கருதப்படுவது மானிடப் பிறவியேயாகும். நல்வினை எது? தீவினை எது? என்பவற்றைப் பகுத்தறிந்து தீவினையை ஒதுக்கி நல்வினைகளை செய்வதற்கு மனிதப்பிறவிக்கே பகுத்தறவு எனும் ஆறாவது அறிவை இறைவன் வழங்கியுள்ளார்.

இவ் அறிவைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் செய்யும் நற்கருமங்களும் கணக்கிடப் பெறுகின்றது. தீய கருமங்களும் கணக்கிடப் பெறுகின்றது. தீய கருமங்களை செய்துவிட்டு பின்பு ஏதாவது நற்கருமம் செய்துவிட்டால் தீய கருமத்திற்கான கெடு விளைவிலிருந்து நல்கருமத்திற்கான நல் விளைவு நம்மை காத்துவிடுமென நினைப்பது நமது மடமை மற்றும் தவறான சிந்தனை.

இறைவனின் கணக்கில் நல்வினையும் வரவு வைக்கப்படுகின்றது. தீவினையும் வரவு வைக்கப்படுகின்றது. நல்வினைக்கான பலன் ஆசீர்வாதமும் மகிழ்ச்சியும் உயர்நிலையும் என்று இறைவனால் தீர்மானிக்கப்பட்டு நற்


கடையிற்சுவாமிகள்

பலன்களை அவ் ஆன்மா அனுபவிக்கும் நிலையில் அவர் செய்யும் தீவினைக்கான பலன் சாபமும் துக்கமும் தாழ்நிலையுமே என்று தீர்மானிக்கப்பட்டு அதற்கான தண்டனையையும் அனுபவிக்க நேரிடும்.

அதனால் நம் முன்னோர்கள், மக்கள் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டால் தம் மனதை அடக்கி, இறைவழிபாட்டில் மனம் செலுத்தி தீவினைகளை அகற்றி நல்வினைகளை செய்வர் என்று சிந்தித்து நல்வினை, தீவினை என்பவற்றினை அறிவுறுத்தும் இறைவனால் உலகத்தினருக்காக அருளப்பட்ட வேதத்தினையும் புராணங்களையும் மக்கள் படித்து உணர வேண்டும் என வற்புறுத்தி வந்துள்ளார்கள்.

புராணங்கள், வேதங்களை படித்து அறிய முடியாத சாதாரண மக்களுக்கு வழிகாட்டவே அவற்றை உணர்ந்த ஞானிகளும் சித்தர்களும் இறைவனின் கட்டளையால் மனித சமுதாயங்களில் குறிப்பிட்ட காலப்பகுதியில் தோன்றி மக்கள் வாழ்க்கைப் பாதையினை நேர்ப்படுத்துகின்றனர்.

அவ்வகையில் இறைவனால் யாழ்ப்பாணத்து மக்களுக்கு வழங்கப்பட்ட அருள்ஞான வரம் ஈழத்துச் சித்தர் பரம்பரையின் ஆதி முதற்குரு அருள்ஞான வள்ளல் கடையிற் சுவாமிகள் ஆவார் என்றால் அது மிகையாகாது.

அகத்தியர், திருமூலர் தொடங்கி கோரக்கர் வரை இருந்த பதினெண் சித்தர்கள் அடியைப் பின்பற்றி பல சித்தர்கள் தோன்றியிருக்கின்றார்கள். அவர்கள் வழி வந்தவர்களே எமது சித்தர் பரம்பரையினர். இலங்கையில் அருள் ஞான பரம்பரை ஒன்று மலர்வதற்கு வித்திட்ட மூலமுதல்வர் எமது ஆதி கடைநாதனேயாவார்.

இந்தியாவில் பெங்களூர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த காலத்தில் கொலைக் குற்றவாளி ஒருவனுக்கு தீர்ப்பு வழங்க வேண்டிய சமயத்தில் சுவாமிகளுக்கு ஞானத்தேடல் ஏற்பட்டது. அத்தேடல் தமக்குரிய ஞான குருவை அடைய வழி செய்தது. அக்குரு மூர்த்தியானவர் மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தில் அறுபத்தி நான்காவது தலைவராக (1817-1879) வீற்றிருந்து அருள் பாலித்த ஞான குரு ஸ்ரீநரசிம்ம பாரதியாராவார்.

முத்தியானந்தர் எனும் தீட்சாநாமம் கொண்டு குருவின் கட்டளையை சிரமேல் கொண்டு 1862 ஆம் வருடம் ஈழ நாட்டில் ஞான கடாட்சம் புரிய திருவுளம் கொண்டு சுவாமி முத்தியானந்தர், சுவாமி சின்மயானந்தர், சுவாமி நிரஞ்சனானந்தர் என்ற மூன்று சித்தர்கள் ஈழம் வந்தனர் என்று கர்ண பரம்பரைச் செய்தி கூறுகின்றது.

சுவாமி முத்தியானந்தர் யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதிகளில் அதிகம் நடமாட்டம் செய்து வந்தமையால் கடையிற்சுவாமிகள் என்ற திருநாமமே நிலைபெற்றுவிட்டது.

மண்டைதீவில் நன்னியார் என்பவரின் வீட்டின் ஒரு பகுதியில் இருந்து அருளாட்சி செய்தார் சுவாமிகள். அவ்வீடு பிற்காலத்தில் சிதைந்துபோய் விட்டாலும் சுவாமிகள் தங்கியிருந்த பகுதி மட்டும் அவ் ஊர் அன்பர்களால் இன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.




- 1825 - உலகின் முதலாவது பயணிகள் தொடருந்து இங்கிலாந்தில் சேவைக்கு விடப்பட்டது.
- 1854 - "எஸ்.எஸ். ஆர்க்டிக்" நீராவிக் கப்பல் அட்லாண்டிக் கடலில் மூழ்கியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1893 - சிகாகோவில் இடம்பெற்ற உலகச் சமயங்களின் பாராளுமன்ற மாநாடு முடிவடைந்தது.
- 1905 - அல்பேர்ட் ஐன்ஸ்டீன் முதற் தடவையாக $E=mc^2$ என்ற சமன்பாட்டை அறிமுகப்படுத்தினார்.
- 1916 - எதியோப்பியாவில் இடம்பெற்ற அரண்மனைப் புரட்சியை அடுத்து இயாசு மன்னர் பதவியை இழந்தான்.
- 1928 - ஐக்கிய அமெரிக்கா சீனக் குடியரசை அங்கீகரித்தது.
- 1937 - கடைசி பாலிப் புலி கொல்லப்பட்டது.
- 1938 - ஆர்.எம்.எசு. குயின் எலிசபெத் பயணிகள் கப்பல் கிளாஸ்கோவில் வெள்ளோட்டம் விடப்படட்து.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: வார்சா ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியன முத்தரப்பு உடன்பாட்டில் பேர்லின் நகரில் கையெழுத்திட்டன.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் கெசெல் நகர் மீது கூட்டுப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அமெரிக்கப் படைகளுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்திய தாக்குதல் ஆகும்.
- 1956 - அமெரிக்க வான்படைக் கப்டன் மில்பேர்ன் ஆப்ட் மக் 3 ஐத் தாண்டிய முதல் நபர் என்ற பெயரைப் பெற்றார். சிறிது நேரத்தின் பின்னர விமானம் கட்டுக்கடங்காமல் வீழ்ந்து நொறுங்கியதில் அவர் ஆப்ட் கொல்லப்பட்டார்.
- 1959 - ஜப்பானின், ஹொன்ஷூ நகரில் இடம்பெற்ற புயலில் 5000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1961 - சியேரா லியோன் ஐ.நாவில் இணைந்தது.
- 1964 - ஜான் எஃப். கென்னடியை லீ ஹார்வி ஒஸ்வால்ட் என்பவன் வேறு எவரினதும் தூண்டுதல் இன்றிக் கொலை செய்ததாக வாரன் ஆணையம் அறிக்கை வெளியிட்டது.
- 1977 - ஒண்டாரியோவில் 300 மீட்டர் உயர தொலைக்காட்சிக் கோபுரம் ஒன்றில் சிறு விமானம் ஒன்று மோதியதில் அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர். கோபுரம் இடிந்து வீழ்ந்தது.
- 1983 - ரிச்சார்ட் ஸ்டோல்மன் க்னூ செயற்றிட்டத்தைப் பகிரங்கமாக அறிவித்தார்.
- 1994 - மியான்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்க்க மக்களாட்சிக்கான தேசிய அமைப்பை ஓங் சான் சூ கீ உருவாக்கினார்.
- 1993 - அப்காசியாவில் சுகுமியில் ஜார்ஜியப் பொது மக்கள் ஆயிரக்கணக்கில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.
- 1996 - ஆப்கானிஸ்தானில் முகமது ஓமார் தலைமையிலான தலிபான் தீவிரவாதிகள் காபூல் நகரைக் கைப்பற்றி ஜனாதிபதி புரானுதீன் ரபானியை ஆட்சியிலிருந்து விரட்டினர். முன்னாள் ஜனாதிபதி முகமது நஜிபுல்லா காபூல் நகர மின்சாரக் கம்பத்தில் மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- 1997 - செவ்வாய் தளவுளவியுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.
- 1998 - கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கை மூலம் வெற்றி கொள்ளப்பட்டது.
- 1998 - கூகிள் தேடுபொறி ஆரம்பிக்கப்பட்டது.
- 2002 - கிழக்குத் திமோர் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.

**பிறப்புக்கள்**

- 1907 - பகத் சிங், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1931)
- 1933 - நாகேஷ், நகைச்சுவை நடிகர் (இ. 2009)
- 1953 - மாதா அம்ருதானந்தமயி, இந்திய ஆன்மிகவாதி
- 1979 - லில் வெய்ன், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்

**இறப்புகள்**

- 1907 - ஜேம்ஸ் எச். மார்ட்டின், யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகை ஆசிரியர்
- 1972 - எஸ். ஆர். ரங்கநாதன், இந்தியக் கணிதவிலாளர் (பி. 1892)
- 1996 - முகமது நஜிபுல்லா, ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி (பி. 1947)

**சிறப்பு நாள்**

உலக சுற்றுலா நாள்



## நகைச்சுவை நடிகர்- நாகேஷ்

நாகேஸ்வரன் என்ற இயற்பெயரைக் கொண்ட நாகேஷ் 1933 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி கன்னடப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். வீட்டுச் செல்ல பெயர் குண்டப்பா! பள்ளி நாடகத்தில் நாகேஷுக்கு எமன் வேடம். வசனம் பேசிக்கொண்டே பாசக்கயிற்றினை வீச வேண்டும். இவர் வீசிய பாசக்கயிறு எசகுபிசகாக ஒருவர் கழுத்தில் போய் விழுந்தது. பள்ளித் தலைமை ஆசிரியரின் கழுத்து அது! நாகேஷ்... மாறும் உடல் மொழி... ஏறி இறங்கும் குரல் ஜாலம்.. தமிழர்களில் 40 ஆண்டு கால சாயங்காலச் சந்தோஷம், ஈர்க்குச் குச்சி உடம்பால், நீக்குச்சியால் திகழ்ந்தவர். கோயம்புத்தூரில் பி.எஸ்.ஜி ஆர்ட்ஸ் காலேஜில் படித்தபோது, அடுத்தடுத்த மூன்று தடவை அம்மை போட்டது. முகம் முழுக்க அம்மைத் தழும்புகளை வைத்துக் கொண்டு பலரது முகத்தை மலரவைத்தது அவரது நடிப்பின் வெளிச்சம! இவர் தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர். நகைச்சுவையிலும் குணச்சித்திர நடிப்பிலும் பல சாதனைகள் படைத்தவர். 1000 திரைப் படங்களுக்கும் மேல் நடித்த பெருமைக்குரியவர். திருவிளையாடல், தில்லானா மோகனாம்பாள் என பல படங்களில் இவரின் நடிப்பு பலராலும் பாராட்டப்பட்டது. சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர் போன்றோருடனான படங்களில் நகைச்சுவை கதாபாத்திரத்தில் இவர் நடித்துள்ளார். தேன்கிண்ணம், நவக்கிரகம், எதிர்நீச்சல், நீர்க்குமிழி, யாருக்காக அழுதான், அனுபவிராஜா அனுபவி போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்திருக்கிறார். இளம் வயதில் வீட்டில் கோபித்துக் கொண்டு ஹைதராபாத்துக்கு வந்தவர் ரேடியோ கடை, ஊறுகாய் கம்பெனி எடுபிடி, மில்லில் கூலி வேலை என்று பல வேலைகள் பார்த்திருக்கிறார்! முதன் முதலில் நாடகத்தில் வயிற்று வலி நோயாளியாக நடித்தார் அன்று அவரது நடிப்பைப் பாராட்டி முதல் பரிசை வழங்கியவர் எம்.ஜி.ஆர்! முறைப்படி யாரிடமும் நடனம் கற்றுக்கொண்டது இல்லை, யாரையும் காப்பி அடித்ததும் இல்லை. ஆனால், நடனத்தில் "நாகேஷ் பாணி" என்கிற தனி முத்திரையைக் கொண்டு வந்தார்! எம்.ஜி.ஆருடன் 45 படங்களில் நடித்த நகைச்சுவை நடிகர் இவர்தான் அதில், 19 படங்களில் இவருக்கு ஜோடி மனோரமா! இவரை எப்போதும் "டேய் ராவுஜி என்று செல்லமாக அழைப்பார் பாலசந்தர்! எவ்வளவு பணமிருந்தாலும் சாப்பிட ஒரு வயிறு தானே என்று சொன்ன இவர் எளிமையான கலைஞன் என்பது தான் நிஜம்! சீட்டாட்டம், டேபிள் டென்னிஸ், தத்துவம், நடனம், நடிப்பு என்று எதைச் செய்தாலும் உச்சம் தொட்ட மகாகலைஞன் என்று இவரைப் புகழ்ந்தவர் கவிஞர் வாலி. பஞ்சதந்திரம் ஷூட்டிங், உணவு இடைவேளையில் சிக்கனை முள் கரண்டியால் குத்திக்கொண்டு இருந்தார். அருகிலிருந்த நாகேஷ் கேட்டார், "கோழி இன்னும் சாகலையாப்பா?" என்று. தசாவதாரம் கடைசி நாள் ஷூட்டிங்க்கு வந்து நடித்துக் கொடுத்தவர் கடைசியாகச் சொன்ன வாக்கியம் "என் கடைசிப் படம் நல்ல படம். I am honoured (நான் பெருமைப்படுகிறேன்) கமல்..! திரையுலகம் என்றுமே மறக்க முடியாத ஒரு ஒப்பற்ற கலைஞரான இவர், 2009 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி மாரடைப்பு காரணமாக மரணத்தைத் தழுவிக் கொணடார்.

## ஐ.நாவில் அமெரிக்கா முன்வைத்த தீர்மானத்தில்

# கலப்பு நீதிமன்ற யோசனை தவிர்க்கப்பட்டது இலங்கைக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



**இலங்கை தொடர்பான அமெரிக்காவின் தீர்மானம் ஐ. நா. மனிதஉரிமை பேரவையில சமாப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அத்தீர்மானத்தில் சாவதேச விசாரணை என்ற அழுத்தமும் கலப்பு நீதிமன்ற யோசனையும் தவிர்க்கப்பட்டுள்ளமை இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகுமென அமைச்சரவைப் பேசாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் பிரேரணை தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ராஜித, மேற்படி பிரேரணையில் இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த சர்வதேச பங்களிப்புடனான கலப்பு நீதிமன்றம் என்ற பதம் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவிக்கையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தற்போது ஆட்சியிலிருந்திருந்தால் ஜெனிவா விவகாரம் மிகவும் மோசமானதாக உருவெடுத்திருக்கும். இந்த வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கத்தின் ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகளுக்கு கிடைத்துள்ள மேலும் ஒரு வெற்றியாக இதனைக் குறிப்பிட முடியும்.

ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் கடந்த மார்ச் மாதத்திலேயே இந்த விசாரணை அறிக்கையை வெளியிடத் தீர்மானித்திருந்தார். எமது அரசாங்கத்தின் முயற்சிகள், மற்றும் செயற்பாடுகள் காரணமாக அதனைக் காலம் தாழ்த்த முடிந்துள்ளது. இதுவும் அரசாங்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

இலங்கையானது சர்வதேச விசாரணையையன்றி தேசிய ரீதியிலான உள்ளக விசாரணையை வலியுறுத்தி வரும் நிலையில் அமெரிக்கா ஐ.நாவில் முன்வைத்துள்ள தீரமானமும் உள்ளக பொறிமுறை மீதான நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இந்த வகையில் இதனை மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான புதிய அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ள இரண்டாவது வெற்றியாகும் என அவர் மேலும் தெரிவித்தாா. (இ-7)

## மரண தண்டனையை அமுல்படுத்துவதில் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஆர்வம்

சிறுவர்களுக்கு எதிரான வன முறைகளில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க நாடாளுமன்றத்தில் அனைத்துத் தரப்பினரதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

சமூகசேவைகள் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க திவயின செய்திப் பத்திரிகைக்கு வழங்கியுள்ள நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு மரணதண்டனை விதிப்பதன் மூலமாக மட்டுமே அவ்வாறான குற்றங்களை தடுத்துக் கொள்ள முடியும்.

மரண தண்டனை விதிப்பதற்கான நாடாளுமன்ற அனுமதிக்கு சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் ஆளுங்கட்சி மட்டுமன்றி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு ஆதரவளிப்பார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபாலவும் நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் மரண தண்டனையை நடைமுறைப் படுத்த தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

அந்த வகையில் அவ்வாறான கடுமையான தண்டனைகளின் மூலமாக மட்டுமே சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை தடுத்து நிறுத்த முடியும் என்றும் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

## நிதி மோசடிகளை தடுக்கும் பொலிஸ் பிரிவின் தொலைபேசி குறித்து விசாரணை வேண்டும்

### ஜே. வி. பி. கோரிக்கை

இலங்கையின் முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகளை விசாரணை செய்யும் பொலிஸ் பிரிவின் உதவி பொலிஸ் அதிகாரியின் தொலைபேசி தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜேவிபியினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போது குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் போது குறித்த அதிகாரிக்கு பல தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றன.

அவற்றில் உத்தரவுகள் விடுக்கப் படுகின்றன. மறுபுறத்தில் அவரும் மறுபக்கத்தில் வெளியாரின் ஆலோசனையை செவிமடுக்கிறார்.

எனவே இந்த விசாரணைகள் நியாயமானதாக இருக்காது என்று குறிப்பிட்டுள்ள அநுரகுமார, குறித்த அதிகாரியின் தொலைபேசியும இலக்கங்களும் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே அவன்காா்ட் ஆயுதக் கப்பல் விடயத்தில் சறுக்கல் ஏற்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### வாழ்க்கை

"என்னால் எதுவும் முடியாது" -இது கோழைத்தனம் "என்னால் எல்லாமே முடியும்" -இது அகங்காரமான முட்டாள்தனம். எது என்னால் முடிய வேண்டுமோ, அதனை முடிக்க என்னால் முடியும், கவுள் கருணை இருந்தால் என்பதே சரியான வாழ்க்கைப் பாதை.

வாழ்க்கையில் முன்னேற தன்னம்பிக்கை வேண்டும். வாழ்க்கை முழுமை பெறக் கடவுள் நம்பிக்கை வேண்டும். திறமைமிக்க தன்னம்பிக்கை மிக்க சில தலைவர்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருந்திருந்தால் இன்னும் நிறைய நன்மை விளைந்திருக்கும்.


மனிதன் யார்? ஞானி யார்? உடம்பில் மனதைச் செலுத்தி சதாகாலமும் அதிலேயே மூழ்கி விடுகிறவர்கள் சராசரி மனிதர்கள். உயிரில் மனத்தைப் பறித்து அதைப் பற்றிச் சிந்தித்து வாழ்வை உயர்த்திக் கொள்ளுகின்றவர்கள் ஞானிகள்.

எதிர்காலத்தைப் பற்றிய கவலையில் நிகழ்காலத்தையே பலர் கொன்று போடுவது நியாயமே அல்ல. பலர் நிகழ்காலம் என்பதையே அனுபவிப்பதில்லை. இது பெரும் பாவம். ஒவ்வொரு விநாடியும் கடவுள் நமக்குக் கொடுத்த கொடை! ஒவ்வொரு விநாடியும் வாழ வேண்டியது நமது கடமை. நாளைக்கு வாழவேண்டும் என்பதற்காக இன்றைக்குச் செத்துக் கிடக்க முடியாது.

## கோத்தாவின் ரக்னா லங்கா

# பாதுகாப்புச் சேவை தொடர்ந்து செயற்படும்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ரக்னா லங்கா பாதுகாப்புச் சேவை நிறுவனம் தொடர்ந்து செயற்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரி வித்துள்ளார்.

பாரிய முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் சாட்சியமளித்துள்ள பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, ரக்னா லங்கா நிறுவனம் மூலமாக அரசாங்கத்துக்கு பாரிய வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாக ரக்னா லங்கா நிறுவனத்தில் உள்ள சிறுசிறு குறைபாடுகளைக்களைந்து அதனை ஒரு வர்த்தக நிறுவனமாக நடத்திச் செல்ல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார் என்று பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் ரக்னா லங்கா நிறுவனத்தின் இணை நிறுவனமான அவன்கார்ட் நிறுவனம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் எதுவித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

அமைச்சரவையின் அனுமதி இன்றித் தொடங்கப் பட்டுள்ள இந்த நிறுவனம் சட்டவிரோத ஆயுதங்களுடன் மிதக்கும் ஆயுதக் களஞ்சியமொன்றை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங். அரசு பாதுகாப்பது மகிந்தவை மாத்திரமல்ல!

எல்லா விடயங்களிலும் சர்வதேச ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் இலங்கை அரசு நாடுகிறது. பல்வேறு நாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்கிறது. இலங்கை யுத்தத்தின்போது அரசியல் மற்றும் இராணுவ உதவிகள் சர்வதேசத்திடமிருந்து இலங்கை பெற்றுக் கொண்டது. ஆனால் இலங்கையில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுக்கு சர்வதேச பொறிமுறைக்கு இலங்கை அஞ்சுவது போர்க்குற்றச்சாட்டுக்களை பாதுகாப்பதற்காகவே என்பது வெளிப்படையாக புரியுமொரு உண்மை. இலங்கை அரசு இந்தக் குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்க முயல்வதன் ஊடாக அவற்றை விசாரணை செய்ய மறுப்பதன் ஊடாக எதனை பாதுகாக்க விரும்புகிறது என்பது மிகவும் முக்கியமானது.

சர்வதேசம் தலையிட அனுமதிக்கப்படாது என்றும் உள்ளக விசாரணை மூலமே விசாணை என்றும் இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையை எதிர்த்து வந்திருந்தார். குறிப்பாக ஐ.நா அறிக்கையில் சொல்லப்பட்ட சர்வதேச கலப்பு நீதிமன்றம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியிருந்தார். சர்வதேச நிறுவனங்களோ, சர்வதேச பிரதிநிதிகளோ இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறையில் உள்வாங்கப்படமாட்டார்கள் என்று இலங்கைப் பிரதமர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். ஆக இனப்படுகொலையை மூடி மறைக்க சர்வதேசத்திடம் மண்டியிடும் அரசு உள்நாட்டில் சர்வதேச எதிர்பாளராக காட்டுகிறது.

இதேவேளை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உள்ளக விசாரணைக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் இன்னொரு புறம் ஈடுபடுகிறார். இலங்கையின் இராஜதந்திரிகளும் இந்த நடவடிக்கைகளில் மும்மரமாக ஈடுபட்டுள்ளார்கள். மகிந்த ராஜபக்ச காலத்தில் அவர் யுத்தத்தை முன்னெடுப்பதில் காட்டிய தீவிரத்தை இப்போது மைத்திரி ரணில் ஆட்சி முன்னெடுக்கிறது. ஜெனீவாவில் வெற்றி பெறுவோம் என இலங்கை அரசாங்கம் கூறுவது யுத்தப் பாணியிலான அறிவிப்பாகும். இங்கு இலங்கை அரசு போர்க் குற்றங்களை மறைத்து வெற்றி பெறும்போது தமிழ் மக்கள் தோற்கடிக்கப்படுகின்றனர் என்பதையும் இலங்கை அரசு அறிவிக்கிறது. இது இலங்கையின் புதிய அரசு இனச்சிக்கல் தொடர்பில் கடந்த கால அரசுகளைப் போன்றே செயற்படுகிறது என்பதற்கு தக்க எடுத்துக்காட்டு.

இலங்கைப் போரில் குற்றம் சாட்டப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கை என்பது தமிழ் மக்களை தமிழ் மக்களுக்கு இழைக்கும் மிகப்பெரும் அநீதியாகும். இலங்கை அரசு சர்வதேச விசாரணை வேண்டாம் என்றும் உள்ளக விசாரணையே நடத்துவோம் என்றும் கூறுவது இனப்படுகொலை புரிந்த போர்க்குற்றவாளிகளை பாதுகாப்பதற்கே. மகிந்த ராஜபக்சவை மின்சாரக் கதிரையில் இருந்து நாமே காப்பாற்றினோம் என்றும் ஐ.நாவின் அறிக்கையில் இலங்கை அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களில் ஆயிரம் மடங்கை புதிய அரசு குறைத்திருக்கிறது என்பதும் இலங்கை அரசு போர்க்குற்றவாளிகளை பாதுகாக்க முனைக்கிறது என்பதை அவ் அரசே சொல்லும் வாக்குமூலங்கள் ஆகும்.

போர்க்குற்றவாளிகளை பாதுகாப்பது என்பதும் இலங்கையில் நடந்த இனப்படுகொலைய மறைப்பது என்பதும் இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக வரலாறு முழுவதும் நடந்த இன ஒடுக்கல் அநீதிகளை மறைப்பதற்கும் அந்த அநீதிகளை இழைத்த சிங்களப் பேரினவாதத்தை பேணுவதற்கும் தொடர்ந்து அதை பாதுகாப்பதற்கும் அடிப்படையாக அமைகிறது. இலங்கை அரசு தான் இழைக்க அநீதிகளை ஒப்புக்கொள்ள மறுத்து விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக சித்திரித்து தனது ஒடுக்குமுறையை மறைத்தும் சிங்களப் படைகள் செய்த இன அழிப்பு குற்றங்களை மறைத்து இனப்படுகொலைப் போர்க்குற்றங்களை பாதுகாப்பதும் இந்த தீவில் தொடர்ந்தும் இன முரணபாட்டையும் இன ஒடுக்குமுறையையும ஊக்குவிப்பதாகவே அமையும் என்பது தான் அதிர்ச்சி தரும் விடயமாகும்.

இலங்கையில் பல பத்தாண்டுகளாக தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இலங்கை அரசின் விசாரணைகளும் நீதித்துறையும் தமிழர் இன அழிப்புக்கு உடந்தையாகவே இருந்தன. 1983 இல் நடந்த மிகப் பெரும் இனப்படுகொலை குறித்து இலங்கை அரசு முன்னெடுத்த நடவடிக்கை என்ன? இலங்கை அரசே முன்னெடுத்த இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கு அந்த அரசே விசாரணை செய்தால் எவ்வாறு நீதி கிடைக்கும். இதுவே இலங்கையின் வரலாற்று அனுபவம். இவ்வாறு தொடர்ந்தும் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்வதை ஊக்குவிக்க இன்றைய அரசும் முனைகிறது.

இலங்கையில் விசாரணை செய்ய உரிய நீதி அமைப்பில்லை என்று ஐ.நா தனது அறிக்கையில் கூறுகிறது. தவிரவும் இலங்கை அரசு உள்ளக விசாரணையின் ஊடாக போர்க்குற்றவாளிகளை பாதுகாக்க முனைகிறது என்பதை அவ் அரசே சொல்கிறது. மகிந்த ராஜபக்ச நடத்திய நல்லிணக்க ஆணைக்குழு விசாரணையில் மக்கள் சாட்சியம் வழங்கியபோது அவர்களை இலங்கை இராணுவப்படைகள் புகைப்படம் பிடித்து மிரட்டியிருந்தது. இலங்கை அரசு தானே இழைத்த குற்றங்களை தானே விசாரிப்பதாக கூறுவது எவராலாலும் ஏற்கத்தக்கதல்ல. தவிரவும் இனப் படுகொலையால் போர்க்குற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களே தமக்கு எவ்வாறான விசாரணை தேவை என்பதை கோர முடியும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இலங்கை அரசுமீது துளியளவும் நம்பிக்கை இல்லை. அவர்கள் சர்வதேச நீதி விசாரைணை தேவை என்பதை தொடர்ச்சியர்க வெளிப்படுத்தி வருகின்றனர்.

சர்வதேச விசாரணையை கோரியே வடமாகாண சபைத் தேர்தலிலும் நாடாளுமனறத் தேர்தலிலும் தமிழ் மக்கள் வாக்களித்தனர். சர்வதேச விசாரணை ஒன்றை வலியுறுத்தி தமக்கு வாக்களித்த மக்களுக்காக அவர்களின் உள்ள ஏக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்றும் சர்வதேச நீதி விசாரணை தேவை என்றும் வடக்கு மாகாண சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ் மக்களின் கோரிக்கைகளை இலங்கை அரசுகள் காலம் காலமாக நிராகரித்து வந்ததுடன் அவர்களின் குரல்களையும் நசுக்கி வந்திருக்கின்றன. ஏனெனில் தமிழ் மக்களின் கோரிக்கைகள் சிங்கள அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிரானவை. ஒடுக்கு முறையிலிருந்து மீட்சி பெற துடிக்கும் அந்தக் கோரிக்கைகளை நசுக்கி தொடர்ந்து இன அழிப்பை மேற்கொள்வதே இலங்கை அரசின் செயல்.



பிரதம நீதியரசராக தமிழரை நியமித்திருப்பதும் எதிர்கட்சித் தலைவர் பதவியை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கொடுத்திருப்பதையும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகையைபோல காண்பித்து சர்வதேச விசாரணையிலிருந்து தப்பிக்கும் வழியை இலங்கை அரசு கோருகிறது. இலங்கையில் இன படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட காலத்தில் தமிழர்கள் உயர் பதவிகளில் இருந்துள்ளார்கள். அவர்களால் தமிழ் மக்களை பாதுகாக்க முடியாத நிலையில் இருந்ததுடன் அவர்களும் அந்த இனப்படுகொலைக்கு உடந்தையாக பயன்படுத்தப்பட்டனர். பதவிகளை வழங்கி தாம் செய்த இனப்படுகொலையை இலங்கை மூடி மறைக்க முயல்வதும் மிகவும் தவறான அணுகுமுறையாகும்.

இலங்கை அரசு சர்வதேச விசாரணைக்கு இணங்க வேண்டும் என்று ஐ.நா விசாரணை அறிக்கை பரிந்துரைத்துள்ள நிலையில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை சர்வதேச விசாரணை உள்ளிட்ட 14 விடயங்களை நீக்கி மென்மையரனதாக்க அல்லது பலவீனமானதாக்க கடும் முயற்சிகளில் இலங்கை அரசு ஈடுபடுகிறது. இலங்கை அரசு போர்க்குற்றவாளிகளை பாதுகாக்கும் இனப் படுகொலையாளிகளை பாதுகாக்கும் தீவிர நடவடிக்கையில் மிகவும் புத்திசாலித்தனமாக ஈடுபடுகிறது. யுத்த வெற்றி வீரனான மகிந்த ராஜபக்சவை காப்பாற்றுவதில் தம்மை அர்ப்பணித்துள்ள இன்றைய இலங்கை அரசு அச் செயலின் ஊடாக சிங்களப் பேரினவாத இன ஒடுக்கல் வெறியையே பாதுக்கிறது.

யுத்த குற்றவாளிகளாக மகிந்த ராஜபக்ச மாத்திரம் அடையாளம் காணப்படவில்லை. 2001 இல் இருந்து 2011 வரையான காலத்தில் நடந்த சம்பவங்களின் அடிப்படையிலேயே ஐ.நா விசாரணை அறிக்கை பரிந்துரைக்கிறது. அவ்வாறு எனில் அக்கால கட்டத்தில் ஆட்சி புரிந்த சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் இறுதி யுத்த காலத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் என்ற அடிப்படையில் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோரும் யுத்தக் குற்றவாளிகளாக அடையாளம் பெறுகிறார்கள்.

அக் காலத்திலிலேயே அதிகளவான போர்க்குற்றங்கள் நடந்துள்ளன. மகிந்த ராஜபக்சவை காப்பாற்றுவதைப் போல காட்டி பேரினவாத அலைக்கு தீணியிட்டாலும் இன்றைய அரசு முழுமையாக தன்னை பாதுபாக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுகிறது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

ஆக, இலங்கைத் தீவில் ஈழத் தமிழருக்கு எதிரான நடந்த இன ஒடுக்கல் குறித்த உண்மையை மறைப்பதுதான் சிங்களப் பேரினவாத அரசியலாக தொடர்கிறது. அதையே புதிய அரசும் செய்ய முனைக்கிறது. சிங்கள மக்கள் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். சிங்கள மக்களின் ஆதரவு போய்விடும் என்ற அரசியல் நோக்கிற்காக ஈழத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன் அநீதிகளை மறைப்பதன் ஊடாக இலங்கை அரசு தமிழ் மக்களை தனது பிரஜைகளாக ஏற்றுக்கெள்ள மறுக்கிறது. அத்துடன் தமிழ்மக்கள் இந்த நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகளாககூட மதிக்காமல் இன்னொரு நாட்டின் பிரசைகளாகவே கருதுகிறது. இந்தப் பாரபட்சம் மகிந்த ராஜபக்ச காலத்தில் மாத்திரமின்றி இலங்கை வரலாறு முழுவதும் நிகழ்ந்த விடயம். இதுவே தமிழர்களை தனிநாடு கோரிய போராட்டத்திற்கும் இட்டுச் சென்றது.

தமிழர்கள் கோரும் யாவற்றையும் இலங்கை அரசு நிராகரிக்கிறது. சமஷ்டி ஏற்படுத்தப்படமாட்டாது என்று சொல்கிறது. உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படாது என்று சொல்கிறது. சர்வதேச விசாரணை நடத்தப்படாது என்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மேற்குறித்த விடயங்களில் மகிந்த ஆட்சிக்கும் மைத்திரி ரணில் ஆட்சிக்கும் இடையில் வேறுபாடுகள் ஏதுமில்லை. நல்லாட்சி என்பது மகிந்தவிடமிருந்து சிங்கள மக்களை பாதுகாப்பதும் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை செய்த மகிந்த ராஜபக்சவை பாதுகாப்பதுமா? இந்தப் பாரபட்சத்தின் அடிப்படையில் ஆட்சி புரியும் இன்றைய அரசு மிக மோசமான அரசல்லவா?

தீபச்செல்வன்

# பூநகரி குளத்தை புனரமைப்பு செய்வதால் விவசாயத்திற்கான நீரைப் பெற முடியும்

## பூநகரி வடக்கு பிர.கமக்கார அமைப்புகள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

பூநகரி பிரதேச செயலக பிரிவிலுள்ள கொக்குடையான் மாளாப்புக்குளத்தைப் புனரமைத்துத் தருமாறு வடக்கு பிரதேச கமக்கார அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பாக கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்டத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இறுதியாக்குதல் தொடர்பான கூட்டத்தின் போதே கமக்கார அமைப்புகளின் சார்பில் மேற்கண்டவாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கொக்குடையான் மாளாப்பு அல்லது பூநகரிக்குளம் எனக் குறிப்பிடப்படும் குளத்தை புனரமைப்புச் செய்வதன் மூலம் பூநகரி வடக்கு பிரதேசத்தின் நிலத்தடி நீர், மக்கள் வருடந்தோறும் எதிர்நோக்கும் குடிநீர்ப் பிரச்சினை, விவசாயத்திற்கான நீர் விநியோகம் போன்ற பிரச்சினைகளுடன் மிக முக்கிய பிரச்சினையான நிலம் படிப்படியாக உவராக மாறிவருதல் என்பனவற்றுக்கு தீர்வு கிடைக்கும் என விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பூநகரி வடக்கு பிரதேச வாழ் மக்கள் வருடந்தோறும் தங்களது குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்து கொள்வதில் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். மக்கள் குடியமர்ந்து வாழ்ந்து வருவதற்கு அங்கு நிலவுகின்ற நீர்ப் பிரச்சினையே பிரதான காரணம். இதனால் மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்கின்றனர்.

எனவே குறித்த குளத்தை விரைவாக புனரமைப்புச் செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதுடன் கடந்த ஒரு வருடத்திற்கு முன் இக்குளம் புனரமைப்புச் செய்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்தாக அக்கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உரிய தரப்புகள் நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்து திட்ட மதிப்பீடுகள் கள ஆய்வுகள் என்பவற்றுக்கு 15 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த குளம் அமையவுள்ள பிரதேசத்திற்கு ஊடாக வருடந்தோறும் பெருமளவு மழை நீர் கடலை நோக்கிச் செல்கிறது எனக் குறிப்பிட்ட கமக்கார அமைப்புகள் கொக்குடையான்மாளாப்பு குளத்தை புனரமைப்புச் செய்வதன் மூலமே வரலாற்று தொன்மை மிக்க பூநகரி வடக்குப் பிரதேசத்தைப் பாதுகாக்க முடியும் என கூறினார். இல்லையெனில் தற்போது இருக்கின்ற மக்களும் இடம்பெயர்ந்து சென்றுவிடுவார்கள்.

மேலும் பூநகரியைப் பொறுத்தவரை மண்டக்கல், ஆறு குடமுருட்டி, ஆறு இரண்டையும் முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் விவசாயத்திற்கு தேவையான நீரைப் பெற்றுக் கொள்ள முடிவதோடு உவர் நீரையும் அகற்ற முடியும் எனவும் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-28)

# திறப்புவிழா நடைபெறாமையினால் மின்சார விநியோகம் இடம்பெறவில்லை

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆதங்கம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள தச்சடம்பனம், பெரிய புளியங்குளம், புதியநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில் மின்மாற்றிகளை திறந்து வைத்து மின்சாரத்தை வழங்குவதற்காக அதிகாரிகளின் வருகையை எதிர்பார்த்து இருப்பதாக, தமக்கான மின்விநியோகம் இதுவரை கிடைக்கவில்லையென மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக தெரியவருவதாவது,

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மேற்குறித்த கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான அனைத்து வேலைகளும் நிறைவு பெற்றுள்ள நிலையில் மின்சாரத்தை விநியோகிப்பதற்கான இரண்டு மின்மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் ஊடாக மின்சாரத்தை வீடுகளுக்கு வழங்குவதற்கு மின்மாற்றிகளை இயங்க வைப்பதற்கு திறப்பு விழா இடம்பெறாமையைக் காரணம் காட்டி மாங்குளம் மின்சார அலுவலகத்தினர் அதனைத் திறந்து வைக்காது அதிகாரிகள் அமைச்சர்கள் ஆகியோர் வரும்வரை காத்து இருப்பதால் பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதில் கூடிய கவனமெடுத்து மிக விரைவில் மின்சாரத்தை வழங்குவதற்கு ஆவண செய்யுமாறு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15-4)




# வடக்கு மாகாணசபை உறுப்பினரின் நிதியொதுக்கீட்டில் வீதி புனரமைப்பு



(குருமன்காடு)

வவுனியா ஆசிக்குளம் கல்வீரங்குளம் உள்ளக வீதி வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவின் நிதியொதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவின் 2015 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியின் கீழ் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்த ஆசிக்குளம் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட கல்வீரங்குளம் உள்ளக வீதி ஒரு இலட்சம் ரூபா செலவில் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (2-250)

# பொலிஸ் பொறுப்பதிகாரியின் தலையீட்டால் கவனயீர்ப்பு போராட்டம் கைவிடப்பட்டது

## வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிப்பு

(குருமன்காடு)

சிறுவர், பெண்கள் மீதான வன்புணர்வுக்கு எதிராகக்கூட கவனயீர்ப்பு போராட்டம் நடத்த முடியவில்லை என வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரி.இராஜலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற இருந்த சிறுவர் வன்புணர்வுக்கு எதிரான போராட்டம் நடைபெறாமை குறித்து வினவிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியின் தலையீட்டையடுத்து கவனயீர்ப்புப் போராட்டம் நிறுத்தப்பட்டது. வவுனியா வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு கொட்டதெனியாவில் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சிறுமிக்கும் மற்றும் சிறுவர், பெண்கள் மீதான துஷ்பிரயோகத்திற்கு எதிராகவும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலையீட்டால் கவனயீர்ப்புப் போராட்டத்தை கைவிட வேண்டி ஏற்பட்டுள்ளது.

நாங்கள் போராட்டத்திற்குரிய ஆயத்தங்களை செய்து நேற்று அறிவித்திருந்த நிலையில் நேற்று இரவு தொலைபேசியில் தொடர்புகொண்ட வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வவுனியா வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தினை கைவிடுமாறும் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

அவரது அறிவுறுத்தலினால் கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுக்க முடியவில்லை என ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

இதேவேளை புங்குடுதீவு மாணவியான வித்தியாவின் படுகொலையினை கண்டித்து வவுனியாவில் பூரண ஹர்த்தால் வவுனியா வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட போதும் பொலிஸாரின் வர்த்தக சங்கத் தலைவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# விசேட அதிகாரிகள் கொண்ட அணியினர் பாடசாலைகளுக்கு வருகை தரவுள்ளனர்

## ஆய்வுகளை மேற்கொள்வதற்கு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விசேட அதிகாரிகள் கொண்ட அணியினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்களின் கீழுள்ள பாடசாலைகளுக்கு நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஒரு வார காலத்திற்கு திடீர் ஆய்வினை மேற்கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நடப்பாண்டில் மேற்படி மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இவ்வருடம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தர பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றம், பாடசாலைகளில் கையாளப்படும் அனைத்து நிதி தொடர்பான நடைமுறைகள் பற்றியும் ஆசிரியர் வளப்பங்கீடு, கற்பித்தல் செயற்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அத்தகவலில் தெரிவிக்கப்படுகின்றது. (2-15)

# முகமாலை றோ.க.த.க.பாடசாலைக்குரிய சொந்தக்காணி விடுவிக்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகமாலை றோ.க.த.க. பாடசாலைக்குரிய காணி தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக இப்பாடசாலை இயங்கவில்லை. 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, முகமாலையில் தனியார் காணியில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

தற்போது பாடசாலைக்குரிய சொந்த நிலப்பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது. கிராம சேவையாளர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்புடன் சிரமதானப்பணிகள் பாடசாலைக் காணியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பாடசாலையானது 1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பாடசாலைக்குரிய நிரந்தர கட்டடம், மலசலகூடம் மற்றும் கிணறு ஆகியன தேவையாக உள்ளதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முகமாலைக் கிராமத்தில் போர்க்காலத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் காரணமாக மீள்குடியேற்றம் முழுமையாக இடம்பெறாத நிலையில் தற்போது இக்கிராமத்துக்குரிய பாடசாலையின் காணி விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தில் ஏற்படவுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை -I,II (பொது) ஐச்சேர்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு தகைமைகளாக ஆகக் குறைந்தது மூன்று வருடகாலம் சேவையாற்றக் கூடிய வயதெல்லையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும், வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை I,II (பொது) ஐச் சேர்ந்த உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும். மேற்படி பதவிக்கான நேர்முக பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாகாண கல்வித்திணைக்களம் அல்லது வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி தாம் கடமையாற்றுகின்ற திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வியாழக்கிழமைக்கு முன்னர் செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம், செம்மணி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(மல்லாவி)

மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப்பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய அதிபர் பசுபதி ரவீந்திரநாதன் தலைமையில் வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (2-15)

# கற்கை நிலைய திறப்பு விழா

(முல்லைத்தீவு)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் முல்லைத்தீவு கற்கை நிலையத்தின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பிலுள்ள புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

நாவல, நுகேகொட திறந்த பல்கலைக்கழக துணைத் தலைவரும் பேராசிரியருமான எஸ்.ஏ. அரியதுறை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ரகம போரூட் (சர்வதேசம்) பொதுச் செயலாளர் எம்.எஃப். மரீகார், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஐ.பிரதாபன், முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன், துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

# நாட்டைப்பிரிக்கும் வகையில் கூட்டமைப்பு செயற்படுகிறது

## கம்மன்பில காட்டம்

(கொழும்பு)

**நாட்டுக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை தடுக்க ஜனாதிபதியும் பிரதமரும் செயற்படும் போது நாட்டை பிரிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றது. ஒரு கூட்டணிக்குள் எவ்வாறு இரண்டு செயற்பாடுகள் இடம்பெறமுடியும் என்று தூய்மையான ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கேள்வியெழுப்பியுள்ளார்.**

சர்வதேசத்தின் தேவைக்காக அரசாங்கமும் புலம்பெயர் தமிழர்களின் தேவைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தினார். ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பான செயற்பாடுகளை அரசாங்கம் கையாளும் முறைமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது மேற்கொளளபபட்டதாக கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுகள் தொடரபில் ஐககிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. யுத்தம் முடிவடைந்ததில் இருந்து தொடர்ச்சியாக சர்வதேசத்தினால் இந்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எனினும் எமது அரசாங்கம் இந்த விடயத்தில் மோசமாக செயற்பட்டதாகவும் இந்த கலப்பு அரசாங்கம் சர்வதேச சவால்களை சரியாக கையாள்வதாகவும் தெரிவிக்கின்றனர். ஆனால் இந்த கூற்றை ஒருபோதும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. இலங்கைக்கு எதிராக சர்வதேச சதித்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்ட போது எமது அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச சதித்திட்டத்தை இந்நாட்டுக்குள் அரங்கேற்ற இடமளிக்கவில்லை.

நாட்டின் தேசிய பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் நாம் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்தோம். இலங்கையில் முடிவுக்கு கொண்டுவந்த ஆயுத கலாசாரத்தை மீண்டும் தலைதூக்கவிடாது தடுத்து தொடர்ந்தும் நாட்டை பாதுகாப்பாக வைத்திருந்தோம்.

ஆனால் இன்று நாட்டின் நிலைமை மீண்டும் மாறியுள்ளது. நாட்டில் ஆயுத கலாசாரம் இல்லாவிட்டாலும் அரசியல் ரீதியில் மீண்டும் பிரிவினைக்கான சூழ்நிலை உருவாகியுள்ளது. இன்று ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டுக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை தடுக்க ஜெனிவாவில் செயற்படும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டில் சர்வதேச விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜெனிவாவில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தந்திரத்தின் தேவை

### ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமெரிக்கா தலைமையிலான நாடுகளின் இலங்கை சம்பந்தமான யோசனையானது, இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடும் தந்திரத்தின் தேவை என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அமெரிக்கா தலைமையிலான 4 நாடுகள் சமர்ப்பித்த இலங்கைசம்பந்தமான யோசனை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுக்கு இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் தந்திரமான தேவை இருக்கின்றது.

இவ்வாறான யோசனை குறித்து பேசுவது முக்கியமானது அல்ல. வெளிநாடுகள் இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்காத வகையில், இலங்கையில் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி வலுப்படுத்தப்பட வேண்டும் எனவும் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி மாகாண சபைகளை வலுப்படுத்த வேண்டும் என முன்வைக்கப்பட்டுள்ள யோசனை குறித்து கருத்து வெளியிட்டுள்ள ரில்வின் சில்வா,

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது மிகவும் பழைமையானது, அதன் ஊடாக வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்பது தெளிவானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 | 50 |
| கோவா | 70 | 100 | 80 | 70 |
| கரட் | 80 | 60 | 120 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 60 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 100 | 80 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 70 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 20 | 60 | 50 |
| கறிமிளகாய் | 140 | 60 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 120 | 200 |
| போஞ்சி | 150 | 180 | 60 | 180 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 200 | 240 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 150 | 200 | — | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | 200 | 120 |
| முள்ளங்கி | 40 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

உலக பார்வை தினமாக ஐப்பசி மாதம் 8 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இத் தினத்தினை முன்னிட்டு யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனமானது நிறுவனப் பயனாளிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதற்கு யாழ். அரிமாக்கழகம் அனுசரணை வழங்குவதுடன் யாழ். போதனா வைத்தியசாலை ஒத்துழைப்பினையும் வழங்கவுள்ளது. பார்வைக் குறைபாடுடையவர்களின் கண்கள் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

எனவே மேற்படி சிகிச்சை முகாமில் பயன் பெற விரும்பும் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனப் பயனாளிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் அறிவித்துள்ளது. (இ-5)

Diploma in Nursing - 3 Years
Holy Cross School of Health Science
Free Course
விண்ணப்ப இறுதித் தினம்: 31.10.2015
க.பொ.த உயர்தரத்தில் 3பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை
திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை.
இல. 767/4. கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் விலாசத்திற்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.
கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
பணிப்பாளர்
தொலைபேசி இல: 021 300 1102 / 077 115 9391
(1646)



பிரார்த்தனையின் கதவுகள் முடிக்கிடந்த போதிலும் கண்ணீர் கதவுகள் திறந்து தான் இருக்கின்றன. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கைக்கு பெரு வெற்றி-அரசு நாம் வரவேற்கிறோம்-கூட்டமைப்பு

2005ஆம் ஆண்டில் இலண்டன் பி.பி.சியின் உலக சேவை அமைப்பில் இருந்து ஸ்ரீபன் என்ற வெளி நாட்டவர் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலைப் போதிப்பது அவரின் பணியாக இருந்தது. முரண்பாடுகளை சீர் செய்வது என்ற விடயத்தில் ஓர் உதாரணத்தை கூறி னார்.

இரண்டு குடும்பங்களின் வீட்டு எல்லையில் ஓர் ஒரேஞ் மரம். அந்த மரம் காய்க்கின்ற ஒரேஞ் பழம் யாருக்கு என்பதில் இரு வீட்டாருக்கும் பிணக்கு ஏற்பட்டது. இரு வீட்டாரும் தமக்குள் இருந்த பிணக்கை தாங்களாகவே தீர்த்துக் கொண்டனர். ஒரு குடும்பத்துக்கு ஒரேஞ் சாறு தேவைப்பட்டது. மற்றைய குடும்பத்துக்கு ஒரேஞ் தோல் தேவைப் பட்டது. இரு குடும்பங்களும் இணைந்து, ஒரேஞ் பழச்சாறை ஒரு குடும்பமும் தோலை மற்றைய குடும்பமும் எடுத்துக் கொண்டன. இதனால் அந்த முரண்பாடு நீங்கியது என்று தனது உதாரணத்தை முன்வைத்தார்.

தோல் தேவையானவர் அதனை என்ன செய்தி ருப்பார் என்பது பற்றி ஸ்ரீபன் எதுவும் கூறவில்லை.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நடக்கின்ற நிகழ்வுகளைப் பார்க்கின்ற போது ஸ்ரீபன் கூறிய உதாரணம்தான் ஞாபகத் துக்கு வந்தது.

அதாவது இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை என்பது அடி யோடு கைவிடப்பட்டது. பின்னர் கலப்பு நீதிமன்றம் என்ற கதை விடப்பட்டது. கலப்பு நீதிமன்றத்துக்கு இலங்கை அரசு எதிர்ப்புத் தெரிவிக்க, உடனடியாக அமெரிக்கா ஒரு பொறிமுறையை முன்வைத்தது.

அந்தப் பொறிமுறை; இலங்கை நீதிமன்றப் பொறி முறையின் கீழ் சர்வதேச நீதிபதிகள், சட்டத்தரணி களின் ஒத்துழைப்புடன் விசாரணையை முன் னெடுப்பது என்பதாக இருந்தது.

அமெரிக்காவின் இந்த முன்மொழிவை இலங்கை அரசு வரவேற்று தனக்குக் கிடைத்த பெருவெற்றி என்று கூறியுள்ளது. அதேநேரம் சிங்கள ஊடகங் களும் சர்வதேச விசாரணையில் இருந்து இலங்கை தப்பித்துக் கொண்டதான செய்திகளை வெளியிட் டுள்ளன.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந் தப் பொறிமுறைக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளது.

இங்குதான் ஸ்ரீபனின் உதாரணம் பொருந்துகி றது. அதாவது அமெரிக்காவின் முன்மொழிவு தனக் குக்கிடைத்த வெற்றி என்று இலங்கை அரசு கூறும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை வர வேற்கிறது எனில், ஒரேஞ் சாறு இலங்கை அரசுக்கு; ஒரேஞ் தோல் தமிழ் மக்களுக்கு என்பதாக நிலைமை முடிந்து போகிறது.

ஆம் இலங்கை அரசு, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, அமெரிக்கா என்ற முக்கூட்டுச் சக்திகள் ஏற் கெனவே தீட்டிய திட்டம்தான் இது. சர்வதேச விசா ரணை என்ற கோரிக்கையை வலுவிழக்கச் செய் வதற்காக இடைஇடையே சில நாடகங்கள். அந்த நாடகங்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் கொழும்புத் தலைமை ஏலவே தெரிந் திருந்த உண்மை.

நாம் என்ன செய்ய முடியும்? ஒரேஞ் பழம் வேண்டும் என்று நடத்திய போராட்டம் இப்போது ஒரேஞ் தோல் தந்தால் போதும் என்று கூறும் அளவில் முடிந் துள்ளது. தமிழ்த் தலைமைக்கு பாலாபிஷேகமும் பஞ்சாமிர்தப் படைப்பும் நடந்தாயிற்று. ஏதோ நடப் பதைக் கண்டு கொள்வோம் அவ்வளவுதான்.

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)


பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார்மயப்படுத்த அரசாங்கம் தீர்மா னித்துள்ள நிலையில் அதனை எதிர்த்து வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது குறித்து தொழிலாளர்கள் தீவிர ஆலோசனை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தொடர்ச்சியாக நட்டத்தில் இய ங்கி வருகின்றது. இதனை இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் பெற்றோலியக் கூட் டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அது தொடர்பாக நிதியமைச்சின் செயலாளர் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கங்களுக்கு கடிதம் மூலம் அறிவி த்துள்ளார்.

இலங்கையில் எரிபொருள் விற்ப னையில் ஈடுபடும் இந்தியன் ஒயில் (ஐ.ஓ.சி) நிறுவனத்துக்கு பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தை கைமாற்ற தீர் மானிக்கப்பட்டுள்ளதாக குறித்த கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து தீவிர வேலைநிறுத் தப் போராட்டம் அறிவிப்பது குறித்து தற் போது தொழிலாளர்கள் ஆலோசனை களை மேற்கொண்டுள்ளதாக தகவல் கள் தெரிவிக்கின்றன. (இ-7)



நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இன மோதல்கள் தீர வும, மக்களின்எதிர்கால நல்வாழ வுக்காகவும், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக புறபபட்டு தமது உயிரை அர்ப்ப ணித்த அனைவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்தித்து ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப்பெருமானுக்கு விஷேட திரவிய ஸ்நபன அபி ஷேகமும் விஷேட வழிபா டும் நேற்றைய தினம் பி.ப ஒரு மணி தொடக்கம் மாலை 6 மணி வரை யாழ்இந்து சம ய்பேரவையில் நடைபெற்றது. (படம: பொ.சோபிகா)

## சர்வதேச விசாரணை தொடர்பில் கருத்துக்கணிப்பு நடத்த வேண்டும்

ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் முன்னெடுக்கவுள்ள சர்வ தேச மத்தியஸ்தத்துடனான விசார ணை குறித்து பொதுமக்கள் கருத்துக் கணிப்பொன்றை நடத்தவேண்டும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீஎல் .பீரிஸ் தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தேசப்பற்றாளர்களின் கல ந்துரையாடல் எனும் நிகழ்ச்சியில் கல ந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டு ள்ள முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இலங்கைப் பிரஜை ஒருவர் குறி த்து வெளிநாட்டு நீதிமன்றம் ஒன்றின் ஊடாக வழக்குகளை விசாரிக்கவோ, தண்டனை வழங்கவோ செய்வதா யின், அது குறித்து பொது மக்கள் கரு த்துக் கணிப்பொன்றை நடத்த வேண்டும்.

இலங்கையிலுள்ள அரசியலமைப் பின் பிரகாரம் இவ்வாறான செயற்பாடு களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் மட் டும் இருந்தால் போதாது. அவ்வாறு பெரும்பான்மைப் பலத்துடன்நிறைவே றப்பட்டாலும் பொதுமக்கள் கருத்துக் கணிப்பின் பின்னரே அதனை செய ற்படுத்த முடியும் என்றும் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (இ-7)

## பேய், பில்லி, சூனியம் செய்வதைத் தவிர்த்து பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போடப்படாமல் தவிர்ப்போம்

நானிலத்தில் நன்மை செய்வது என்ற மனப்பாங்கு, நாம் பின்பற்றும் சமயம் மற்றும் அனைத்து கோட்பாடுகளை யும் கடந்து. இதுவே மனித கலாசார த்தில் அமைதிக்கு அடிப்படை வித்து மாகும். தங்களைச் சாராத ஒருவர், இயேசுவின் பெயரால் பேய்களை ஓட்டுவதைத் தடுக்கப் பார்த்ததாகக் கூறிய சீடர்களிடம், அவரைத் தடுக்க வேண் டாம் என்று இயேசு கூறியதாக இன்று எமக்கு தரப்படும் பைபிள் பகுதியில் மாற்கு நற்செய்தியில் (9:38-40) பார் க்கிறோம். கத்தோலிக்கர்களை மட்டு மல்ல, வேறு மக்களையும், கடவுளை நம்பாதவர்களையும் கிறிஸ்து தன் இரத்தத்தால் மீட்டுள்ளார். எனவே, நன்மை செய்யும் எவரையும் தடுப்பது

## பரமபிதா காட்டிய பாதை

நம் பணியல்ல என்பதை நாம் தெளி வாக புரிந்துகொள்ள வேண்டும். நன்மை புரிவதென்பது சமய நம்பிக் கையைச் சார்ந்தது அன்று, மாறாக, இறைவனின் சாயலில் படைக்கப்பட்டு ளள அனைத்து மனிதருக்கும் அது ஒரு கடமை.

இன்று எமக்கு தரப்படும் பைபிள் பகுதியில் இயேசுவின் பதில்கள் அவர் ஓர் உளவியல் முதிர்ச்சி பெற்றவர். பர ந்த மனநிலை கொண்டவர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இயேசுவைச் சாராத, அவரது சீடர் அல்லாத ஒரு மனி தர் இயேசுவின் பெயரால் பேய்கள் ஓட் டினார் என்பதே மிகவும் வியப்பான ஒரு செய்திதான். இயேசுவின் பெயரு க்கு எத்தகைய ஆற்றல் இருக்கிறது என்பதற்கு இதைவிட சிறந்த சான்று வேறென்ன எமக்கு தேவை. அவர்க ளைத் தடுக்கப் பார்த்தோம் என்று சீடர் கள் சொன்னபோது இயேசுவின் பதில் அவர்களை மட்டுமல்ல, நம்மையும் பிர மிக்க வைக்கிறது. தடுக்க வேண் டாம். என் பெயரால் வல்ல செயல் புரிய வர் அவ்வளவு எளிதாக என்னைக் குறித்து இகழ்ந்து பேசமாட்டார் என்று தன் னம்பிக்கையுடன் இயேசு கூறுகிறார்.

நாம் இன்று குறுகிய மனம், பொறாமை, தன்னம்பிக்கையின்மை, போனறவற்றால் மற்றவர்களின் வாழ்வை அழிப்பதற்காக பேய் பில்லி சூனியம் செய்து அவர்களை துன்பப் படுவதில் மகிழும் செயல்களை தினமும் செய்துகொண்டே இருக்கின்றோம். இப்பொல்லாதது செய்பவர்கள் முடிவில் லாத் தண்டனையை அடைவார்கள். (மத்தேயு 25:46) பொல்லாதவர்க ளுக்கு வரும் இறுதித்தீர்ப்பு காலத்தைப் பற்றி பேசிய போது, "சபிக்கப்பட்டவர் களே,என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக் கினியிலே போங்கள்" என்றும் இயேசு கூறினார். அதோடு, இவர்கள் முடிவில் லாத் தண்டனையை அடைவார்கள் என்றும் சொன்னார். ஆகவே பேய் பில்லி சூனியம் உட்பட பல அழிவுச் செய ல்கள் செய்வதை உடனடியாக நிறுத்தி விட்டு, நன்மையை ஏற்பிசைவு செய்யும் பரந்த மனதையும், தன்னம்பிக்கையை யும் நாம் ஏற்படுத்தவேண்டும் என இயேசு வெளிப்படுத்துகிறார். நமது திறமைகளை, கொடைகளைப் பிற ரோடு பகிர்ந்துகொள்ளத் தயங்கும் நமக்கு இயேசு பாடம் கற்றுத் தருகிறார். பிறரும் நம்மைப் போல நல்ல பணிகள் ஆற் றட்டும், நற்பெயர் வாங்கட்டும் என்று நினைப்பவரெல்லாம் இயேசுவின் நல்ல சீடர்கள்.

இன்றைய பைபிள் பகுதியில் இயேசு நரகம் பற்றி பேசுகின்றார். "உங்கள் கண் உங்களைப் பாவத்தில் விழச் செய் தால், அதைப் பிடுங்கி எறிந்து விடுங் கள். நீங்கள் இரு கண்ணுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட ஒற் றைக் கண்ணராய் இறையாட்சிக்கு உட் டுவது உங்களுக்கு நல்லது. நரகத் திலோ அவர்களைத் தின்னும் புழு சாகாது நெருப்பும் அவியாது." எனவே நரகத்தைப் பற்றி இயேசு என்ன சொல்ல வருகிறார் என இங்கு சற்று ஆய்வு செய் வது சாலப்பொருத்தமாகும்:

இங்கே "நரகம்" என்னும் சொல் எபிரேயத்தில் "கெகென்னா" என்பதாகும். இது "கெ பென் -ஹின்னோம்" என்னும் எபிரேயச் சொல்லின் கிரேக்க-இலத்தீன் வடி வமாகும். அதறகு"பென் இ (ஹ)ன் னோம் பள்ளத்தாக்கு" என்துபொருள்(2 அர:23:10). அதாவது ஹின்னோம் என்பவரின் மகனோடு தொடர்புடைய பள்ளத் தாக்கு எனப்பொருள். இது எருசலேம் நகரின் தென்மேற்குப் பகுதியில் இருந்தது. ஆகாசு, மனாசே ஆகிய இஸ்ர யேல் மன்னர் கள் இப்பள்ளத் தாக் கில் மோலெக் கு என்னும் பிற தெய்வத்திற்குத் தங்கள் பிள் ளைகளைப் பலியாகத் தீயில் சுட்டெரித்தனர் என்னும் செய்தி பைபிளில் உள் ளது.(2குறி 28:3,33:5,எரே32:35). இப்பள்ளத்தாக்கு, "படுகொலையின் பள்ளத்தாக்கு" என அழைக்கப்பட்டது. புறமதப் பழக்கத்தில் ஈடுபட்ட மக்க ளின் உடல்கள் அடக்கம் பண்ணப் படாமல் இங்கே கிடந்தன. (எரேமியா 7:30-34). ஆக, இப்பள்ளத்தாக்கு, எல்லா பிணங்களையும் அழிப்பதற் கான இடமாக இருக்குமென்றே முன



### ம. பிரான்சிஸ்க்
### கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்


னறி விக்கப்பட்டிருந்தது.

மன்னன் யோசேயா இக்கொடிய பழக்கத்தை ஒழித்தார். (2அர 23:10). இயேசுவின் நாட்களில், இப்பள்ளத் தாக்கினை குப்பை கூழங்கள் கொட் டுவதற்கான இடமாக எருசலேம் வாசி கள் பயன்படுத்தினார்கள்.

பயங் கரமான குற்றவாளிகளின் பிணங்களை அங்கே தூக்கி வீசினார் கள். அங்கு போடப்பட்ட குப்பை கூழ ங்களையும் பிணங்களையும் அழிப் பதற்கு அவற்றைச் சுட்டெரிக்கும்படி மூட்டப்பட்ட தீ இங்கே எப்போதும் எரிந்து புகைந்துகொண்டே இருக்கும். எரிந்து சாம்பலாகாமல் போன குப்பை கூழங்கள் நடுவே புழுக்கள் நெளி வதும் உண்டு. அந்த இடத்தையே இயேசு "அணையாத நெருப்புள்ள நரகம்" என விபரித்தார்.

கை,கால் இழந்த நிலையில் நிலைவாழ்வில் புகுவது அந்த எரி குண்டமாகிய நரகத்தில் இரு கை டையவராய் தள் ளப்பட்டு, துன்புற்று, எரிந்து சாம்பலா வதைவிட மேலானது என்றார் இயேசு. எனவே நரகிற்குரிய செயல்களை செய்வதை விட்டு நல் லவர்களாய் நானிலத்தில் வாழ் வோம்.








# வல்வெட்டித்துறை ஆதிசக்தியை வீழ்த்தி 3ம் இடத்தை கைப்பற்றியது சென்.லூசியஸ்

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி வடமாகாண வல்லவன் தொடர்பில் மூன்றாமிடத்தினை கைப்பற்றியது மன்னார் சென்.லூசியஸ் வி.கழகம்.

நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 24.09. 2015 அன்று நடைபெற்ற மூன்றாம் இடம் என்ற பட்டத்துடன் ரூபா 50,000 பணப்பிரிசினை வெல்லும் அணிக்காண போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி வி.க எதிர்த்து மன்னார் சென்.லூசியஸ்வி.க மோதியது.

மிக்க எதிர்பார்ப்புடன் ஆரம்பமான போட்டியில் முதற் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் கோல் பெறும் வாய்ப்புக்கள் சரிவரப் பயன்படுத்தப் படாமல் போக 41 ஆவது நிமிடத்தில கிடைத்த வாய்ப்பினை சென்.லூசியஸ் வீரர் யூலி கோலாக மாற்றி முதலாவது கோலினைப் பதிவு செய்தார்.

முதற்பாதி ஆட்டம் 1:0 என முடிவடைய இரண்டாவது பாதி ஆட்டத்தின் 38 ஆவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற தண்ட உதையினை சென்.லூசியஸ் வீரர் பிராங்கிளின் கோலாக மாற்ற 2:0 என முன்னிலை பெற சென்.லூசியஸ் அணியின் பக்கம் போட்டியின் வெற்றி சாயத் தொடங்கியது.

போட்டியின் நிறைவுக்கு 05 நிமிடம் மீதமிருக்க ஆதிசக்திக்கு கிடைத்த தண்ட உதையினை சென்.லூசியஸ் கோல் காப்பாளர் இலாபகமாகத் தடுத்ததன் மூலம் கோல் பெறும் அரிய வாய்ப்பினை ஆதிசக்தி இழக்க ஆட்ட நேர முடிவில 2:0 என மன்னார் சென்.லூசியஸ் வெற்றிபெற்று வடமாகாண வலலவன் தொடரின் மூன்றாம் இடத்தினைத் தனதாக்கிக் கொண்டது. (க)

# முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு விழா கரைதுறைப்பற்று பிரதேச சபை முதலிடம்











முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு விழாவில் 126 புள்ளிகளை பெற்று கரைதுறைப்பற்று பிரதேச சபை முதலாமிடத்தினை கைப்பற்றியது. 27 ஆவது தேசிய இளைஞர்விளையாட்டுவிழாவின் முல்லைத்தீவு மாவட்ட மட்ட விளையாட்டுப்போட்டிகள் (24) மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை தடகள போட்டிகள் அனைதும் நடைபெற்று மாலை 3.30 மணிககு விருந்தினர்களின் வருகை யுடன் தடகள போட்டிகளிலே வெற்றி யீட்டிய வீரர்கள் மற்றும் மாவட்ட மட்ட உதைபந்து போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற புதுக்குடியிருப்பு பிர தேச அணி 2 ஆம் இடத்தைப் பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணியினருக்கும்.

எல்லே ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி, இரண்டாமிடத்தை பெற்ற மாந்தை கிழக்கு பிரதேச அணி மறறும் பெண்களுக்கான எல்லேபோட்டியில் முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேசஅணி இரண்டாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணியினருக்கும்,

பெண்களுக்கான மென்பந்துபோட்டியில்முதலாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான்பிரதேச அணி, இரண்டாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி மற்றும் ஆண்களுக்கானமென்பந்து போட்டியிலே முதலாமிடத்தை பெற்ற கரைதுறைப்பற்று பிரதேச அணி, இரண்டாமிடத்தைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச அணயினருக்கும்,

பெண்களுக்கான கரப்பந்து போட்டியில்முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி, இரண்டாமிடத்தை பெற்ற மாந்தை கிழக்கு பிரதேச அணி மற்றும் ஆண்களுக்கான கரப்பந்து போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி, இரண்டாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணியினருக்கும்,

கபடி ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மாந்தை கிழக்கு பிரதேச அணியினருக்கும் பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தைபெற்ற மணலாறு பிரதேச அணியினருக்கும்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் முதலாமிடத்தை பெற்ற துணுக்காய் பிரதேசஅணியனருக்கும் ஆண்களுக்கான வலைப் பந்தாட்டபோட்டியில் முதலாமிடத்தை பெற்ற துணுக்காய் பிரதேச அணியினருக்கும் கரம் ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணியினருக்கும் இரண்டாமிடத்தை பெற்ற துணுக்காய் பிரதேச அணியினருக்கும்,

ஆண்களுக்கான கயிறுமுத்தல் போட்டியில் முதலாமிடத்தை பெற்ற துணுக்காய் பிரதேச அணியினருக்கும் புள்ளியடிப்படையில் 66 புள்ளிகளை பெற்று மூன்றாமிடத்தை பெற்ற துணுக்காய் பிரதேச சம்மேளனத்திற்கும் 115 புள்ளிகளை பெற்று இரண்டாமிடத்தை பெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சம்மேளனத்திற்கும் 126 புள்ளிகளை பெற்று முதலாமிடத்தை பெற்ற கரைதுறைப்பற்று பிரதேச சம்மேளனத்திற்கும் வெற்றிக் கிண்ணங்கள் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெற்றது. (க-281)

# மாதனை விளையாட்டுக்கழக துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

## அரையிறுதியில் ஐக்கியம், ஜி.பி.எஸ்

மாதனை விளையாட்டுக்கழகம் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மற்றும் யாழ். ஜி.பி.எஸ். விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

நடைபெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அயந்தன் 16 ஓட்டங்களைப் பெற்றார்.

62 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு களமிறங்கிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஒரு இலக்கு இழப்புக்கு இலக்கை அடைந்து வெற்றியீட்டியது. அதிகபட்சமாக றொசான் 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வினோத் ஓர் இலக்கைக் கைப்பற்றினார்.

ஜி.பி.எஸ். எதிர் சிறிமுருகன் தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். ஜி.பி.எஸ். விளையாட்டுக் கழகமும் வதிரி சிறிமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜி.பி.எஸ். அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுஜீவன் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சுகி மற்றும் சுதன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்கள். 74 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய சிறி முருகன் அணி 4ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 39 ஓட்டங்களை மட்டுமே பெற்று 34 ஓட்டங்களால் தோல்விய டைந்தது. அதிகபட்சமாக மணிமாறன் 15 ஓட்டங்களைப்பெற்றார். பந்துவீச்சில ஜி.பி.எஸ். சார்பாக றஞ்சித் 3 இலக்குகளையும் தனேஸ், ரதிசாத் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.(க)

# பளுதூக்கல் போட்டியில் வெற்றியீட்டிய சிதம்பராக் கல்லூரி மாணவிகள்

## கல்லூரி சமூகத்தால் கௌரவிப்பு



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் வல்வெட்டித்துறை வீராங்கனைகள் தசாந்தினி இராமகிருஸ்ணன் கோ.யோகேஸ்வரி ஆகியோர் 3 ஆம் இடத்தையும் அ.சிந்து 4ஆம் இடத்தையும் பெற்று வல்வெட்டிததுறை மண்ணுக்கும் சிதம்பராக் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இப்போட்டி கடந்த திங்கட்கிழமை பொலநறுவை றோயல் கல்லூரியில் நடைபெற்றது. இதில் 80 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு வல்வை சிதமபராக் கல்லூரியின் ஏற்பாட்டில் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் நடைபெற்றுள்ளது. (க)

# தலைவர் பிரபாகரன் பன்முக ஆளுமை

## மும்பையில் நூல் வெளியீடு

(மும்பை)

மும்பையில் மாவீரன் திலீபன் நினைவே நதல் மற்றும் ஓவியர் புகழேந்தி எழுதிய தலைவர் பிரபாகரன் -பன்முக ஆளுமை நூல வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை நடை பெற்றது.

மும்பை முத்தமிழ் மன்றம் சார்பில் செம்பூர காமராசர் சாலை (செல்காலனி ரோடு), காம ராசர் அரங்கில் நேற்று மாலை 6.30 மணிய ளவில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, சுந்தர சிவ லிங்கம் தலைமையேற்றார். அ.கணேசன் உறுதிமொழி ஏற்று தொடக்கவுரையாற்றி னார்.




மாவீரன் திலீபன் குறித்து ஆ.பி.சுரேஷ், இறை. ச.இராசேந்திரன், கண்ணிவெடி கந்தசாமி உள்ளிட்டோர் நிறைவுரையாற்றி னர்.

தலைவர் பிரபாகரன் - பன்முக ஆளுமை நூல் குறித்து மா.கருண் அறிமுகவுரையாற் றினார். நூலை வெளியிட்டு மகாராஷ்டிரா சட் டமன்ற உறுப்பினர் கப்டன் இரா. தமிழ்ச் செல்வன் வாழ்த்துரை வழங்கினார்.

முதற்படி பெற்றுக் கொண்டு நவிமும்பை தமிழ்ச்சங்கத் தலைவர் ச.பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். சு. குமணராசன் நூல் மதிப்புரையாற்றினார். நிறைவில், நூலாசிரியர் ஓவியர் கு.புகழேந்தி ஏற்புரையா ற்றினார். (எ-11)

## வீடு தீக்கிரை

(கரணவாய்)

அல்வாய் கிழக்கில் இனந்தெரியாதோ ரால் வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை 6.15 மணிய ளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் தீ பரவியதை அறிந்த வீட்டில் இருந்தவர்களும் பொதுமக்களும் துரிதமாக செயற்பட்டு தீயினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் பெரியளவிலான அனர்த்தம் எதுவும் ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை களை மேற்கொண்ட நெல்லியடிப் பொலி ஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-12-60)

## வல்லிபுரத்தில் நேற்று ஆறு பேர் கைது

(கரணவாய்)

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த் திரு விழாவின் போது இடம்பெற்ற நகை திரு ட்டுச் சம்பவம் தொடர்பில் ஐந்து பெண்கள் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் நடைபெற்ற தேர்த்திரு விழா உற்சவத்தின் போது 14 பவுண் நகை திருடப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸா ரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நீர்கொழும்பைச் சேர்ந்த மூன்று பெண்களையும், இந்தியாவில் இருந்து வந்த தாக கூறப்படும் இரு பெண்கள் மற்றும் ஒரு ஆண் உள்ளடங்கலாக ஆறு பேரை கைது செய்துள்ளனர். கைது தொடர்பாக பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொ ண்டு வருகின்றனர். (எ-12-60)

## கரபந்தாட்ட இறுதிப் போட்டி



(யாழ்ப்பாணம்)

நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய ஆதரவில் காமாட்சி அம்பாள் விளை யாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளி கரப ந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த 22-ம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

இறுதிச் சுற்றுப் போட்டி இன்று 27.09. 2015 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும். (எ-11)

## அமெரிக்க தீர்...

எனினும், இந்த பரிந்துரையானது இலங்கையின் உள்ளக நீதிமன்ற பொறிமு றையாக அமையாது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

உண்மையில் முறைமையானது மறை முகமான கலப்பு நீதிமன்றம் எனவும், குவாசி காலனித்துவ முறைமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் பின்னர் இலங்கையில் வெளிநாட்டு உள் நாட்டு நீதவான்களின் கூட்டில் விசாரணை கள் நடத்தப்பட்டதில்லை என அவர் தெரிவி த்துள்ளார்.

எனவே உத்தேச தீர்மானம் இலங்கையை காலனித்துவ ஆட்சி நோக்கி நகர்த்துவதாகத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் அரசாங்கம் நாட்டுக்கு விரோதமாக செயற்படு கின்றமை அம்பலமாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## இன்று அரிதான...

மிகப் பெரிதாக சந்திரன் தென்பட்ட பின் னரே இந்த சந்திர கிரகணம் நிகழவுள்ளது.

ஏனைய நாட்களின் தென்படும் சந்தி ரனை விட இன்று தென்படும் சந்திரன் 17 வீதம் பெரிதாக தென்படும் என்பதுடன் 100 வீதம் பிரகாசமாக இருப்பதை காணமுடியும் எனவும் நாஸா நிறுவனம் கூறியுள்ளது.

இந்த நிலையில், நாளை கடல் அலை யின் மட்டம் சற்று உயரக் கூடும் எனவும் அது பற்றி அச்சம் கொள்ள தேவையில்லை எனவும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-12)

## அரசியல் கைதி...

கடந்த 20ஆம் திகதி அரசியல் கைதிக ளின் உடனடி விடுதலை வேண்டி ஜனாதிப திக்கும் அதன் பிரதிகள் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஒரு பகிரங்க மடலாக அனுப்பி இருந்தோம்.

அதன்பின் கடந்த 21ஆம் திகதி ஜனாதி பதி மற்றும் தாங்கள் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவத ற்காக மேற்கொண்ட மேற்கொள்ளவுள்ள ஏற் பாடுகள் தொடர்பாக வெளியிட்ட சில கருத்துக் களையும் ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்டோம்.

சிறைகளில் இருக்கும் எமது பிள்ளைகள் அனைவரும் விசாரணை என்கின்ற பேரில் நீதிக்குப் புறம்பான முறையில் 8 தொடக்கம் 15, 20 வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டார்கள். எனவே, எமது பிள்ளைகள் அனைவரையும் பொது மன்னி ப்பு அளித்து உடனடியாக விடுதலை செய்து தங்களின் உண்மையான நல்லாட்சி மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்துமாறு வேண்டுகின்றோம் என்று இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## வெளிநாட்டு தலை...

ருத்தி செய்யும் நடவடிக்கைகள் தொடர் பில் பிரதானமாக இந்த சந்திப்பின் போது கல ந்துரையாடப்பட்டுள்ளது.

இரண்டு தேர்தல்களில் வெற்றியை தன் வசப்படுத்திக்கொண்ட ஜனாதிபதிக்கு, இந்திய பிரதமர் தமது வாழ்த்துக்களையும் தெரிவித் துள்ளார்.

இலங்கையின் எதிர்கால நடவடிக்கைக ளுக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கு வதாகவும் இந்தியப் பிரதமர் உறுதியளித்து ள்ளார்.

பொதுநலவாய சபையின் தற்போதைய தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, மோல்டோ நாட்டில் நடைபெறவுள்ள எதிர்வரும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு இதன்போது உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்துள்ளார்.

இதேவேளை, சுவிஸர்லாந்து ஜனாதிபதி சிமோநேடா சோமருகாவுடனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

சுவிஸர்லாந்தில் அதிகளவான இலங் கையர்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்த அந்நாட்டு ஜனாதிபதி, அபிவிருத்திப் பணிக ளுக்கான உதவிகளை இலங்கைக்குப் பெற் றுத்தருவதாகவும் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவி ருத்திப் பணிகளுக்கு சுவிஸர்லாந்து அரசாங் கத்தின் உதவிகளை எதிர்பார்ப்பதாக ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் பீடர் மோயர், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

யுத்த காலப் பகுதியில் வடக்கு கிழக்கு பகு திகளில் மனிதாபிமான நடவடிக்கைகளுக் கான உதவிகள் வழங்கப்பட்டதை நினைவூ ட்டிய மோயர், எதிர்வரும் காலத்திலும் இல ங்கையுடன் இணைந்து செயற்பட தான் எதிர் பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஐ.நா செயலாளரை...

யின் தற்போதைய நிலைவரங்கள் குறித்து ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இலங்கையின் பொதுத்தேர் தல் நடைபெறுவதற்கு முன்னர் பான் கீ மூன், மைத்திரிபாலவுடன் தொடர்பு கொ ண்டு தேர்தல் குறித்து கலந்துரையாடியதாக தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப் பிடத்தக்கது.


ஏற்கெனவே ஜனாதிபதி மைத்திரிபால; இந்திய பிரதமர், சுவிஸ் ஜனாதிபதி உள்ளி ட்ட பலரை சந்தித்து கலந்துரையாடியுள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (எ-12)

## சர்வதேச விசாரணை...

பொருட்டு பாடசாலைகள் இயங்காது, பஸ் சேவை நிறுத்தப்படும், ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடைபெறாது மணிகள் ஒலிக்கப் படமாட்டாது. தமிழ் மக்களின் கோரிக்கையை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் வரை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும்.

எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெற மாட்டாது. திங்கட்கிழமை பிற்பகல் வவுனியா வில் வைத்து ஐ.நா சபையிடம் அறிக்கை கையளிக்கப்படும் என்றுள்ளது. (ஒ)


## மரண அறிவித்தல்



### கனகசபை தில்லையம்பலம்

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 1ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனக சபை தில்லையம்பலம் 24.09.2015 வியாழக்கிழமை அன்று காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர் களான ஆறுமுகம் - சின்னம்மா தம்ப தியரின் அன்பு மருமகனும், பாமினி (ஜேர்மனி), ஜெயந்தி, வசந்தி (ஜேர்மனி), சாந்தி (கனடா), விநாயகமூர்த்தி, பாலமூர்த்தி (கனடா), சுகந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும், நவீனகுமார் (ஜேர்மனி), கணேசலிங்கம் (ஜேர்மனி), ஜெயக்குமார், சிவகுமார் (கனடா), நிராஞ்சனி, விலாசினி (கனடா), ஜெயராஜ் (ஜேர்மனி) ஆகி யோரின் மாமனாரும், கனகம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான தில்லை நடேசு, புவனேஸ்வரி மற்றும் மகேந்திரன், ரோகினி, இராதாகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வீரகத்தி, யோகேஸ்வரி, அருணாசலம், யோகேஸ்வரி, மகேந்திரன், வனஜமலர் மற்றும் காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, சபாரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர் களான முத்தையா, நாகபூரணம் ஆகியோரின் சகலனும், சர்மிளா, நர்மதன், வினோதினி, தனேசன், சியாமினி, ஜெனித்தா, சரண்ஜா, ஜெனசிகா, வினோத் குமார்,கிரிஷாந், மெலனி, தணியலா, அபிஷன், அபினஜன், அக்ஷயன், மதுராங்கன், மனோஜ், ஐக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஷயன், ஜெனியோன், ஜெய்டன், அஷ்வின், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு பூட்ட னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.09.2015) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
தொ.பே:-0213211762

(வி-2319)

தகவல்:
குடும்பத்தினர்

# திலீபனுக்கு...

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும், புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும், இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர் வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து நல்லூரில் 15.09.1987 அன்று திலீபனால் முன்னெடுக்கப்பட்ட உண்ணா விரதம் இந்தியாவிடமிருந்து எந்த பதிலும் கிடைக்காத காரணத்தினால் பன்னிரண்டு நாட்களாக ஒரு துளி தண்ணீர் இன்றி முன்னெடுக்கப்பட்ட உண்ணா நோன்பு, பன்னிரண்டாவது நாளான 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்' 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.58 மணியளவில் திலீபன் உயிரிழந்தார்.

இவ்வாறு தமிழ் மக்களுக்காக பன்னிரண்டு நாட்கள் ஒரு துளி தண்ணீரும் அருந்தாமல் உண்ணா நோன்பிருந்து உயிரிழந்த திலீபனின் இருபத்தியெட்டாவது நினைவு தினம் நேற்றைய தினமாகும். இவரது நினைவு தினம் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர் தாயகம் எங்கும் முன்னெடுக்கப்பட்டிருந்ததோடு ஈழத்திலும் சில பிரத்தியோக இடங்களில் பல தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மாலை வேளை யாழ். பல்கலைக்கழகத்தில் பிரத்தியோக இடமொன்றில் மாணவர்களால் தியாக தீபம் திலீபனுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. மிகவும் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்ட இவ் அஞ்சலி நிகழ்வின் போது, பல்கலைக்கழகத்துக்கு வெளியே புலனாய்வாளர்களின் நடமாட்டமும் காணப்பட்டிருந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர்.(எ-4)

# ஜி.கே.வாசன்...

களுக்கு சம உரிமை வழங்க வேண்டும், கச்சதீவு பகுதியில் மீன் பிடி உரிமையை மீட்டுத் தரவேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் நேற்று இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

த.மா.கா. தொடங்கிய பிறகு மாநில அளவிலான முதல் உண்ணாவிரத போராட்டம் என்பதால் மாநில நிர்வாகிகள், மாவட்ட தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் பெருமளவில் பங்கேற்றார்கள். (எ-11)

# மைத்திரி-மோடி...

ஆயினும், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பான விவகாரம் மற்றும் இருதரப்பு விவகாரங்கள் குறித்துப் பேசப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# ஜெனிவா...

இலங்கை அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இந்நிலையிலேயே, இலங்கையின் இந்த முடிவை வரவேற்றுள்ள பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக அமைச்சர் ஹியூகோ ஸ்வயர், ஜெனிவா தீர்மானத்துக்கான இலங்கையின் ஒத்துழைப்பு முரண்பாட்டு மரபுக்கு தீர்வு காணும் நெருக்கமான நகர்வு எனக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## தேவை

ஈரல் மாற்றுச் சிகிச்சைக்கு (Liver transplantation)ஈரல் தேவைப்படுகிறது. வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-2269)

தொடர்புகளுக்கு
077 8792384

VACANCY
பணிநிலை வெற்றிடம்

- Designer - Relates to Printing (Male or Female) வடிவமைப்பாளர் - அச்சுப்பதிப்பு தொடர்பானது (ஆண்/பெண்)
- Office Receptionist & Administrator (Female) காரியாலய வரவேற்பாளர் & நிர்வாகி (பெண்)

உங்கள் சுயவிபரக்கோவையை புகைப்படத்துடன் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பவும்.
ideasjaffna@gmail.com
(C-2320)

UK, Australia, New Zealand &
செங்கன் நாடுகள் வரிசையில்
மற்றுமொரு
கனடா விசா வென்றோம்!

2 முறை விசா நிராகரிக்கப்பட்டவர் சிகரம் மூலம் விண்ணப்பித்து கனடா Multiple Entry Visa வென்றார்



உங்கள் விசா நிராகரிக்கப்பட்டுள்ளதா? நாங்கள் வென்று தருகின்றோம்!

SIKARAM
Any Visa to Any Country
(சி-2322)


15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட சட்ட வல்லுநர்கள் ஊடாக 100% உத்தரவாதமான சேவை

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்

STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA

Tel: 0777 32 4004 / 021 222 00 11
#275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

CCTV with Network Cabling
(Full Practical Training)



* Normal Course - 1 month(10-12 hrs)
* Fast Track Course - 4 days(10- 12hrs)
New Batch Commencing on 02/10/2015

OTHER COURSES
*Office Management *Programming
*Web Developement *Computer Hardware
*ICT & English for O/L & A/L
ENROLL TODAY - 0778485483 , 0772487082
(1898)

Micro System Development Centre
Alady Junction, Jaffna Road, Manipay.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

விளம்பரத்துறையில் வேலை வாய்ப்பு
ஊதியம் சராசரியாக மாதம் 30,000

யாழ்ப்பாணத்தினை தலைமையகமாக கொண்ட எமது நிறுவனத்திற்கு முழுநேரமாக / பகுதிநேரமாக விளம்பரம் செய்யக்கூடியவர்கள் வடமாகாணத்தின் அனைத்து ஊர்களிலிருந்தும் தேவைப்படுகிறார்கள்.



- அடிப்படை கல்வித்தகமை : O/L ● சிறந்த தொடர்பாடல் திறமை ● நேர்த்தியான உடையலங்காரம்
- வாடிக்கையாளரிடம் அன்பாகவும் மரியாதையாகவும் நேர்த்தியாகவும் பழகும் திறமை ● நாணயம்
- வேலை நேரம் : உங்கள் விருப்பப்படி எந்தநாளும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்யலாம்.
- ஊதியம் சராசரியாக மாதத்திற்கு 30,000

திறமையானவர்கள் உடன் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
6 மாதத்தின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
V2 TRAVELS & TOURS

நேர்முகத்தேர்வு : 27-09-2015
காலை 10 மணி முதல் 3 மணிவரை(ஞாயிற்றுக்கிழமை)
தொடர்புகளுக்கு : 0768226243
யாழ்ப்பாணம் 49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.

காணி விற்பனைக்கு

யாழ்.கொழும்புத்துறை வீதியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட 3 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0776068834
0773429846
(C-2294)

SINGER
இப்போது SINGER LED TV க்கு
3 வருட உத்தரவாதம் இலவசம்




ரு.25,999/- தொடக்கம்

நீங்கள் வாங்கும் 32" | 24" SINGER | Skyworth | UNIC
LED TV களுக்கு 3 வருட உத்தரவாதம் முற்றிலும் இலவசம்
021-2225408 | 021-2251100 | 021-2270197 | 772108889 | 021-2264937 |
021-2240555 | 021-2255343 | 021-2280199 | 021-2263411 | 021-2290180 | 768622213
0115 400 400 singersl.com SINGER Plus
(C-2306)

CNR WORLD WIDE EXPRESS & TRAVELS
அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை
401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062
(C-2307)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 | 27.09.2015 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 33



# எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

ஆலடிப்பிள்ளையார் கோவிலடியில் ஒரு தெருக்கூத்து நடக்கிறது. அந்தத் தெருக்கூத்தில்,

**குரல் 1:** நாங்கள் ஏமாந்த இனம்... நாங்கள் ஏமாந்த இனம்...

**குரல் 2:** நாங்கள் தோற்றுப்போன இனம்... நாங்கள் தோற்றுப்போன இனம்..

**குரல் 3:** தோற்ற இனம் மட்டுமல்ல நாங்கள் ஊழ்வினை செய்த இனமும் கூட.

**குரல் 4:** எங்களைக் காப்பாற்ற எங்களுக்கு நல்ல தலைமை இல்லை. விலைபோனவர்களால் நாங்கள் விற்கப்படுகிறோம்.

**குரல் 5:** என்ர பிள்ளை... என்ர பிள்ளை காணாமல் போன என்ர மகன் எப்ப வருவான்.

(அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து) எங்கள் இழப்பில் அவர்கள் பதவியும் சுக போக வாழ்வும் ஆனால்... நாங்கள் தோற்ற இனம்... நாங்கள் தோற்ற இனம் இப்படியே தெருக்கூத்து நீடித்து நிறைவுற மாலைப் பொழுதாயிற்று.

ஆலடி மாநாட்டில் பண்டிதர் பரமநாதன் நாடிக்குக் கைகொடுத்தபடி ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார். ஆலடி மாநாட்டிற்கு வரவேண்டியவர்கள் வந்து சேர்ந்தனர்.

**வாத்தியார்:** என்ன? பண்டிதர் ஒரு மாதிரியிருக்கிறியள்.

**பண்டிதர்:** தெருக்கூத்துப்பார்த்தன். அதில ஒரு தாய் என்ர பிள்ளை ... என்ர பிள்ளை என்று அழுதது என்னைத் தாக்கிப் போட்டுது. எங்கட இனம் பட்ட துயரம் கொஞ்ச நஞ்சமோ.

ஏன்தான் எங்கட இனத்திற்கு இப்படியெல்லாம் நடக்குது. சர்வதேச விசாரணை இல்லையெண்டால், இனி எங்கட இனத்துக்கு என்ன விமோசனம் இருக்கு?

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா, கவலைப்படாதீங்கோ தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பது நீங்கள் அறியாததல்ல. எங்கட சனங்கள் பட்ட கஷ்டத்துக்கு என்றோ ஒருநாள் விடிவு கிடைக்காமல் போகாது. எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு இருக்குது. இதை நான் உங்களுக்குச் சொல்லக் கூடாது. எல்லாம் நீங்கள் அறிந்த தத்துவங்கள் தான்.

**பண்டிதர்:** வாத்தியார் என்ன சொன்னாலும் கண்ணுக்கு முன்னாலை அநியாயம் நடக்கும் போது நெஞ்சம் வெடிக்குதல்லோ. இவற்றைப் பார்த்துக் கொண்டு எப்படி இருக்கிறது.

**விதானையார்:** பண்டிதர் சொல்வதிலும் உண்மை இருக்குது. விடுதலைப் போராட்டத்தின்ர தோல்வி எங்களுக்குப் படுவீழ்ச்சியைத் தந்து போட்டுது.



## மணமகனை அடித்துக்கொன்ற இளைஞர் குழு

இரண்டாம் உலகப்போரில அணுகுண்டு வீசி ஜப்பான் அழிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு அந்த நாடு எவ்வளவு உச்சமாகியிருக்கு. நாங்கள் என்ன செய்ய முடியும்?

**பண்டிதர்:** ஜப்பான் ஒரு தனி அரசு. எங்கட நிலை அப்படியல்ல. நாங்கள் இலங்கையில சிறுபான்மை இனம். இலங்கை அரசாங்கமே எங்களை அழிச்சுது. இப்பவும் பாருங்களன் எங்கட வடபுலத்தில நாங்கள் நிம்மதியாக வாழமுடியாமல் இருக்குது.

பேப்பரில எப்ப பார்த்தாலும் அங்க வாள்வெட்டு, இங்க பாலியல் பலாத்காரம் இப்படியே நிலைமை போகுது.

**விதானையார்:** திருமணம் செய்து பன்னிரெண்டு நாளே ஆன புதுமணத் தம்பதிகளை யாழ்ப்பாண நகரத்தில வைத்து இளைஞர் குழு ஒன்று தாக்கியது. படுகாயமடைந்த மணமகன் கடந்த 24 ஆம் திகதி இறந்து போன சம்பவம் யாழ்ப்பாணத்தில பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கு.

யாழ்ப்பாண நகரத்தில நடந்த இந்த அட்டகாசச் செயல் எப்படி நடக்குது? இதற்கு யார் பின்னணி? என்ன நோக்கம்? எதுவும் தெரியாது.

10 இளைஞர்கள் ஒன்று சேர்ந்து நின்றால், அன்றைக்கு ஒரு கொலை விழும் என்பதாக நிலைமை இருக்குது.

இப்படியான சூழ்நிலையில் இரவுப் பொழுதில எவரும் வெளிக்கிட முடியாது என்ற நிலைமை வந்திட்டுது.

1995 ஆம் ஆண்டிற்கு முதல் ஒரு விதமான பயம். 1995 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வெளியில போன பெடியன் வீடு திரும்புவானோ என்ற ஏக்கம் 2009 வரை இனந் தெரியாத படுகொலைகள்.

இதன்பிறகு இப்போது போதைப்பாவனை, இளைஞர்குழுக்களின் அடாவடித்தனம், வாள்வெட்டு இப்படியாக நிலைமை இருக்குது.

**மூப்பர்:** வடக்கு மாகாண சபையில இவற்றைப் பற்றி ஆராய்ந்தால் நல்லா இருக்கும். ஆனால் இது பற்றிக்கேள்வி எழுப்ப மாகாண சபையில ஆரு இருக்கினம்.

**கங்காணி:** ஓமோம் அவையள் கேட்கிற கேள்விகள் முதலமைச்சருக்கு இடைஞ்சல் செய்யிற கேள்வியாக இருக்குமே தவிர எங்கட இனத்தின்ர- சமூகத்தின்ர சமகால நிலைமைபற்றி அல்லவென்பது தெரியும்தானே.

**விதானையார்:** வடக்கு மாகாண சபையால எந்தப் பிரயோசனமும் இல்லை. பொலிஸாரும் ஒன்றும் செய்யாயினம் என்ற நிலையில எல்லாம் சின்னாபின்னமாய்ப் போய்ச்சுது. போதைப்பாவனை, மது பாவனை என எல்லாம் தலைவிரித்தாட,

புத்திஜீவிகள் யாழ்ப்பாணத்தைவிட்டு கொழும்புக்கும் வேறு இடங்களுக்கும் இடம்பெயர்வர் என்பது மட்டுமே உண்மையாக இருக்குது.

**பண்டிதர்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இப்பவே எங்கட ஆட்களில பலர் வெளிநா டுகளில தங்கியிருக்கினம். இங்க சனப்பெருக்கமும் குறைவு. இப்படியே அழிந்துபோற ஒரு இனமாக நாங்கள் இருக்கிறம் என்பதை நினைக்கத்தான் நெஞ்சுவலிக்குது.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா, எங்கட அரசியல் தலைமை பிழைச்ச பிறகு நாங்கள் கவலைப்பட்டு வேலையில்லை. யாழ்ப்பாணத்துக் கச்சேரியில அண்மையில ஒரு கூட்டம். யாழ் .மாவட்டத்தின்ர தேவைகளை ஆராய்வதற்காக அந்தக் கூட்டம் நடந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கூட்டத்திற்கு வருவதாக இருந்தார். ஆனால் அவர் வரவில்லை. இருந்தும் கூட்டம் நடந்தது.

கத்தோலிக்க மதகுரு ஒருவர் ஆங்கிலத்தில சில தேவைகளை முன்வைத்தார். அதனை பொலிஸார் ஒருவர் சிங்களத்தில மொழிபெயர்த்தார்.

இவை நடந்து முடிந்தகையோடு கூட்டத்திற்கு வந்திருந்த சிங்கள அதிகாரி ஒருவர் யாழ். அரச அதிபற்ற காதில ஏதோ சொன்னார்.

அவர் சொன்னது கத்தோலிக்க மதகுரு கூறியதை தமிழ்மொழியில சொல்லும்படி. எப்படி இருக்கிறது. கூட்டத்தில ஏகப்பட்ட சனங்கள். அப்ப தமிழில சொல்ல வேணும் எண்டு அந்த சிங்கள அதிகாரி நினைத்து அதைச் செய்வித்தார்.

பார்த்தீங்களோ தமிழ் தமிழ் என்று கூறின நாங்கள் தமிழை மறந்து போனம். ஆனால் அந்த சிங்கள அதிகாரி தமிழுக்கு இடம்கொடுக்க வேணும் எண்டு தமிழர் தாயகத்தில் சொன்னதால அவரை நாங்கள் பாராட்டித்தானாகவேண்டும்.

**விதானையார்:** எங்கட தமிழ், தேர்தல் காலத்தில மட்டும்தானே. தேர்தல் முடிந்து யார் யார் கதிரையில இருக்கவேணும் எண்டு தீர்மானிச்சு அதனைச் செய்த பின்பு தமிழ் பற்றிக் கதைக்கத் தேவையில்லை. இப்படி விதானையார் சொல்ல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையார் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# சர்வதேச விசாரணையை தடுத்து நிறுத்திய தமிழ்த் தலைமை




மத்திய கிழக்கு நாடுகளில் ஒரு பொதுவான சட்டம் உள்ளது. குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு தண்டனை வழங்கப்படும் போது அந்தத் தண்டனையைக் குறைப்பது அல்லது மன்னிப்பது என்ற அதிகாரம் பாதிக்கப்பட்டவருக்கு மட்டுமே உண்டு.

அந்த நாட்டின் ஜனாதிபதி நினைத்தாலும் தண்டனையைக் குறைத்துவிடவோ மன்னிக்கவோ முடியாது. ஆக, பாதிக்கப்பட்டவருக்கு மட்டுமே இந்தத் தகைமை வழங்கப்பட்டிருப்பதானது மிகவும் பொருத்தமானதும் நியாயமானதுமாகும்.

இப்போது இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் ஐ.நா. மனித வுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் விவாதம் நடந்து வருகிறது.


ஐ.நா. மனிதவுரிமைகள் பேர்வையின் ஆணையாளர் ஸையட் அல் ஹூசைன் இலங்கை குறித்து வெளியிட்ட அறிக்கை ஈழத்தமிழர்களுக்கு நடந்தவற்றை வெளிப்படையாகக் கூறி நிற்கின்ற போதிலும் விசாரணை, குற்றவாளிகளுக்கான தண்டனை என்ற விடயத்தில் இறுக்கமான பரிந்துரைகள் இல்லையென்றே கூறவேண்டும்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த போர்க்குற்றங்கள் தமிழின அழிப்பு நடவடிக்கைகள், பாலியல் பலாத்காரங்கள், ஆட்கடத்தல்கள் என்ற பல்முனை இன அழிப்புத் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமையிடம் ஒரு தெளிவான நிலைப்பாடு இல்லை.

இலங்கையில் இன அழிப்பு நடைபெறவில்லை என்று நாங்களே சாட்சியம் கூறும்போது அடிப்படையே ஆடிப்போவது தவிர்க்க முடியாததே.

ஏற்கனவே கொழும்பு தமிழ் அரசியல் தலைமையும் இலங்கை அரசும் இணங்கிக்கொண்ட எழுதாத ஒப்பந்தத்தின்கீழ், இலங்கையில் இன அழிப்பு நடைபெறவில்லை என்பதை முன்கூட்டியே தெரிவிப்பது கொழும்புத் தமிழ்த்தலைமையின் கடமையாக்கப்பட்டது.

இலங்கையில் இன அழிப்பு இல்லை என்று தமிழ் அரசியல் தலைமை ஜெனிவாவில் வைத்துப் பகிரங்கப்படுத்தியபோது இலங்கையில் நடந்தது பயங்கரவாத ஒழிப்பிற்கான போரேயன்றி அது தமிழினத்தை நோக்கிய யுத்தம் அல்ல என்பதாக சர்வதேசம் பதிவு செய்து கொள்ளும்.



மாறாக இலங்கையில் தமிழின அழிப்பு நடந்தது என்று தமிழ்ப் பிரதிநிதிகள் கூறுகின்றபோது அது தொடர்பில் சர்வதேசத்தின் பார்வை வித்தியாசமானதாக இருக்கும்.

இத்தகைய கருத்தியல் விடுதலைப்புலிகளை ஒரு போராட்ட அமைப்பாகவும் காலத்திற்குக்காலம் தமிழர்களை இலங்கை ஆட்சியாளர்கள் வதம் செய்வதும் உறுதியாவதுடன் வன்னியில் நடந்தது தமிழின அழிப்பு என்பதையும் சர்வதேசம் ஏற்றுக்கொண்டிருக்கும்.

## எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்

இத்தகைய அங்கீகரிப்பின் அடுத்த கட்டம் போர்க்குற்ற விசாரணையை இலங்கை அரசு செய்வது பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தராது என்பதாக இருந்திருக்கும்.

இருந்தும் தமிழின அழிப்பு இலங்கையில் நடைபெறவில்லையென தமிழர் சார்பில் ஜெனிவா கூட்டத் தொடரில் கலந்து கொண்டவர் கூறியபோது எல்லாமுமே அடிபட்டுப்போயிற்று.

எங்கோ இருந்த சனல் 4 தொலைக்காட்சி இயக்குநர் இலங்கைப் படைத்தரப்பு வன்னியில் நடத்திய மிக மோசமான போர்க்குற்றங்களை- இன அழிப்புச் செயற்பாடுகளை ஆவணப்படுத்தி அதனைக் காட்சிப்படுத்தி உலகத்திற்கு அம்பலப்படுத்தி நிற்க, நாங்கள் கோடாலிக் காம்புகளாக இன அழிப்பு நடைபெறவில்லை என்று ஒரே வார்த்தையில்கூறி அனைத்து நீதிக்கும் கல்லறை கட்டிவிட்டோம்.

என்ன செய்வது தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற தத்துவத்தின்கீழ் நாமே விதைத்தை நாமே அறுத்து அனுபவித்துக் கொள்வதுதான் நீதியும் நியாயமும் என்று இறைவன் நினைத்த தீர்ப்பை இனி முறியடியப்பார் எவருமில்லை.

எனினும் எல்லாமுமே ஒரு ஒழுங்கமைப்பில் ஏற்கனவே கூறியதுபோல் கொழும்புத் தமிழ் அரசியல் தலைமையும் இலங்கையின் புதிய அரசும் செய்து கொண்ட எழுதாத ஒப்பந்தத்தின் கீழ் எல்லாமும் அவர்களுக்குச் சார்பாக- சாதகமாக நடத்தி முடிக்கப்படுகிறது.

இதனை உறுதிப்படுத்துவதாகவே சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்ற கருத்தை தமிழ் அரசியல் தலைமை வெளியிட்டது.

அதாவது ஐ.நா. மனித வுரிமைகள் கூட்டத்தொடர் நடைபெறும்போது சர்வதேச விசாரணை அவசியம் என்று தமிழ்மக்கள் நிச்சயம் கோரிக்கை விடுவர். எனவே, இந்தக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்யும் பொருட்டு முன்னதாகவே சர்வதேச விசா ரணை முடிந்துவிட்டது எனக்கூறிக் கொள்வது என்ற அடிப்படையில், இலங்கை அரசுடன் எழுதாத ஒப்பந்தங்கள் செய்த கைகள் கூறிக்கொண்டன.

தமிழ்மொழியில் விசாரணை என்பதும் ஆய்வு என்பதும் வேறுபட்டவை. விசாரணையின் முடிவு தீர்ப்பாகவும் ஆய்வின் முடிவு அறிக்கையாகவுமே இருக்க முடியும்.

எனவே ஐ.நா. மனித வுரிமைகள் ஆணையம் இலங்கை தொடர்பில் மேற்கொண்ட ஆய்வே ஆணையாளரால் ஜெனிவாக்கூட்டத் தொடரில் அறிக்கைப்படுத்தப்பட்டது.



அதாவது இலங்கையில் இப்படியெல்லாம் நடந்துள்ளது. இது தொடர்பில் இவ்வாறான பொறி முறைகளைப் பிரயோகித்து விசாரணை நடத்தமுடியும் என்பது மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் அறிவிப்பு.

இது தொடர்பிலேயே விவாதங்களும் திருத்தங்களும் புதிய பரிந்துரைகளும் அவற்றின் மீதான வாக்கெடுப்புகளும் நடைபெறும். இவற்றின் அடிப்படையில் பேரவையின் உறுப்பு நாடுகள் தமது வாக்குகள் மூலம் வழங்குகின்ற ஆதரவுக்கமைய பரிந்துரைக்கப்பட்ட பொறிமுறைகள் அமுலுக்குக் கொண்டு வரப்படும். ஆக, இனிமேல்தான் விசாரணை நடைபெறமுடியும். இங்கு விசாரணை என்பது பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியப் பதிவுகள், போர்க் குற்றத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் வாக்குமூலங்கள் என அனைத்தும் உள்ளடங்கிக்கொள்ளும். இறுதி முடிவு தீர்ப்பாக அமையும் என்பது எவருக்கும் தெரிந்தவிடயம்.

இங்குதான் உள்ளகப் பொறிமுறை பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு நீதியைத் தராது என்று பாதிக்கப்பட்ட மக்களும் அவர்கள் சார்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கருத்துரைக்கின்றனர். இத்தகையதொரு நிலையில் சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று கூறுவதனூடாக ஒருதிசை திருப்பம் இடம்பெற்றது என்பது நிறுதிட்டமாகிறது.

இந்த ஏற்பாட்டின்கீழ் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் முடிவு இலங்கை அரசுக்குச் சாதகமாக அமையுமேயன்றி தமிழ்மக்களுக்கு எந்த வகையிலும் நிவாரணம் தருவதாக இராது என்பது உண்மை.

இதற்குக் காரணம் நாங்களே. சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்றுகூறி நடைபெற வேண்டிய சர்வதேச விசாரணைக்கு முடிவு கட்டிவிட்டது மற்றும் இன அழிப்பு இல்லை என்று கூறியது ஆகியன திட்டமிட்டு முன்மொழியப்பட்டு இலங்கை அரசு காப்பாற்றப்பட்டுள்ளது.

ஆக, நாமே நமக்குப் பகை என்றால் எதுவுமே செய்ய முடியாது.

விதுரன்




# சூடு பட்ட புரோகிதர்கள்

மன்னர் கிருஷ்ணதேவராயருக்கு அவருடைய தாயார் மேல் அன்பும் மரியாதையும் உண்டு. தாய் மேல் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அவரது தாயாருக்கு வயோதிபம் ஆகிவிட்டதால் மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்தார். வைத்தியரை அழைத்து தன் தாயின் உடல் நிலையைப் பரிசோதித்தார்.

பரிசோதனை செய்த வைத்தியரும் "தங்கள் தாயார் அதிக நாள் தாங்க மாட்டார்கள். விரைவில் சிவலோகப் பதவி அடைந்துவிடுவர்கள்" என்று கூறினார். அதுகேட்ட மன்னர் வேதனையுற்றார்.


தன் தாயாரிடம் சென்று "அம்மா உங்களுக்கு சாப்பிட எது மிகவும் ஆசையாக இருக்கிறது?" என்று கேட்டார்.

அதற்கு அவரது தாயாரும் "மாம்பழம்தான் வேண்டும்" என்றார். அப்போது, மாம்பழம் கிடைக்கக்கூடிய காலமல்ல. இருப்பினும் தன் ஆட்களை அனுப்பி எங்கிருந்தாவது மாம்பழம் வாங்கிவர ஏற்பாடு செய்தார். ஆட்கள் மாம்பழம் வாங்கிவரப் புறப்பட்டனர்.

மாம்பழம் வந்து சேர்வதற்குள் அவரது தாயார் மரணம் அடைந்துவிட்டார். மாம்பழம் சாப்பிடாமலேயே தாயார் மரணம் அடைந்தது குறித்து மன்னர் மிக வேதனையடைந்தார்.

அதற்குப் பரிகாரம் காண எண்ணி அரண்மனைப் புரோகிதர்களை அழைத்து ஆலோசனை கேட்டார்.

பேராசை பிடித்த புரோகிதர்களும் "மாம்பழம் சாப்பிடாமல் இறந்ததால், அவரது ஆத்மா சாந்தியடைய தங்கத்தால் 108 மாங்கனிகளைச் செய்து, 108 புரோகிதர்களுக்குக் கொடுத்தால், சரியாகிவிடும்" என்றனர்.




மன்னரும் அதற்குச் சம்மதித்தார். 108 மாம்பழங்கள் தங்கத்தால் செய்ய ஏற்பாடு செய்திருந்தார். சில நாட்களில் தங்க மாம்பழங்கள் தயாரானது. அவற்றை 108 புரோகிதர்களுக்கு மன்னர் கொடுத்தார். புரோகிதர்களும் மிக மகிழ்ச்சியுடன் அவற்றைப் பெற்றுக்கொண்டனர்.

இச்செய்தியைத் தெனாலிராமன் அறிந்து வேதனையுற்றான். புரோகிதர்களுக்கு தக்க பாடம் கற்பிக்க எண்ணினான். அவ்வாறே செயற்படவும் தொடங்கினான்.

புரோகிதர்களைச் சந்தித்தான். "என் அம்மாவிற்குத் திதி வருகிறது. அதற்குத் தாங்கள் அனைவரும் வந்து புரோகிதம் பண்ணுங்கள். என்னால் முடிந்தளவு தருகிறேன்" என்றான்.

புரோகிதர்களும் மகிழ்ந்து தெனாலிராமன் வீட்டிற்கு வந்தனர். அவனும் புரோகிதர்களை வரவேற்று உட்காரச் செய்தான். பின்பு கதவுகளை நன்கு தாழிட்டுக்கொண்டான். ஏற்கனவே நன்கு பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால், ஆளுக்கு ஒரு சூடு போட்டான்.

புரோகிதர்கள் "ஐயோ...! அம்மா..!" என்று கதறினார்கள். பின் மன்னரிடம் சென்று முறையிட்டனர்.

இதைப் பார்த்த மன்னர், தெனாலிராமன் மீது அளவிலடங்காக் கோபம் கொண்டார்.

பின்பு பணியாட்களை அனுப்பி, தெனாலிராமனை இழுத்துவரச் செய்தார். தெனாலிராமனைப் பார்த்ததும் "ஏனடா புரோகிதர்களுக்கு இவ்வாறு சூடு போட்டாய்" என்று கேட்டார்.

"மன்னாதி மன்னா...என்னை மன்னிக்க வேண்டும். நான் சொல்லுவதை தாங்கள் கவனமாகக்கேட்க வேண்டுகிறேன். என் தாயார் உடல் நலமில்லாதிருந்து இறக்கும் தறுவாயில் வலிப்பு நோய் வந்துவிட்டது. அதற்கு வைத்தியர்கள் என் தாயாருக்குச் சூடுபோடும்படி சொன்னார்கள். நான் சூடுபோடும் முன்பாக என் தாயார் இறந்துவிட்டார். ஆகையால், என் தாயாரின் ஆத்மா சாந்தியடைய புரோகிதர்களுக்கு சூடு போடும்படி பெரியவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னபடியேதான் புரோகிதர்களுக்குச் சூடு போட்டேன். இதில் என்ன தப்பு" என்று மன்னரிடம் கேட்டான் தெனாலிராமன்.

இதைக் கேட்ட மன்னர் கோபம் கொண்டு "என்னடா தெனாலிராமா, இது முட்டாள்த்தனமாக இருக்கிறதே" என்றார்.

"இல்லை அரசே, விளக்கமாகக் கூறுகிறேன் சற்றுக் கேளுங்கள்" என்றான்.

"முன்பு தங்கள் தாயார் மாம்பழம் சாப்பிடாமல் இறந்ததால், அவர்கள் ஆன்மா சாந்தியடைய 108 பொன்மாங்கனிகள், 108 புரோகிதர்களுக்குக் கொடுத்தால்தான், அவர்களது ஆத்மா சாந்தியடையும் என்று சொன்னார்களே.... அவ்வாறே தாங்களும் கொடுத்தீர்களே....

அதுபோலவே என் தாயாரின் வலிப்பு நோய்க்கு சூடு போட முடியாமல் போனதால்தான், இவர்களுக்குச் சூடு போட்டேன்" என்றான். இதைக் கேட்ட மன்னர் நகைத்துவிட்டார். தெனாலிராமனைப் பாராட்டினார். புரோகிதர்களின் பேராசையையும் புரிந்து கொண்டார்.

# குழந்தைப் பருவத்தின் அழுத்தங்களால் வளர்ந்தவரானதும் மூளையில் பாதிப்புகள்



குழந்தைப்பருவ மன அழுத்தம் வளம் பருவத்தில்; இயல்புக்கு மாறான மாற்றங்களை மூளையில் ஏற்படுத்துகிறது.

ஆறுவயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் ஏற்படும் மன அழுத்தம், அடையப்படாத ஆவல்கள், குழந்தைகள் மீதான துஷ்பிரயோகம் என்பன அவர்கள் இளம்பராயம் அடையும் காலத்தில், அவர்களது மூளையில் அகற்றப்பட முடியாத மாறுதல்களை ஏற்படுத்துகிறது.

அதாவது, ஆறுவயதுக்குட்பட்ட குழந்தைப் பருவத்தில் அவர்களுக்கு ஏற்படுத்தப்படும் மேற்சொல்லப்பட்ட கடினமான அனுபவங்கள், அவர்கள் வளர்ந்தவர்களாகும்பொழுது, மீள இயங்கி, மூளையில் மாற்றங்களைக்கொண்டு வருகின்றன. இதன்படி, மூளையின் வடிவத்திலும் அளவிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மூளை என்பது, மனிதன் உட்பட விலங்கினத்தில் எத்தகைய முக்கியமான பாகம் என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்.

மூளையிலும் முண்ணாணிலும் வெண்ணிறப்பகுதி, நரைநிறப்பகுதி என இரண்டு வகையான இழையங்கள் காணப்படுகின்றன.

நரைநிறப்பகுதியானது, வாங்கிப்பகுதியான தோல்; தசை போன்றவற்றினால் உணரப்படும் தாக்கத்துக்கான விளைவு என்னவாக இருக்கவேண்டுமோ, அதனைச் செய்வதற்கு, விளைவுகாட்டியாகிய அவயவங்களின் தசைப்பகுதிக்கு கட்டளையிடுகிறது. அதாவது, தூண்டலுக்கேற்ற துலங்கலை மிக வேகமாகச் செயற்படுத்துவது, இந்த நரைநிறப்பகுதிதான்.

சிறுவயதில் கடினமான வாழ்க்கைக்குள் தள்ளப்படும் குழந்தைகளில் அவர்கள் வளர்கையில், மூளையின் இந்த நரைநிறப் பகுதியில் பெரும்பாலும் சுருக்கம் அல்லது குறைவு (சாதாரணமாக வாழ்ந்த மனிதருடன் ஒப்பிடுகையில்) காணப்படுகிறதாக தற்போதைய ஆய்வுகள் காட்டுவதாக பிரித்தானிய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.


அதிக அழுத்தம் என்பது, மூளையின் அளவு, வடிவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை விஞ்ஞானிகள் ஏற்கனவே கண்டறிந்திருந்தாலும், சிறு வயதில் ஏற்படுத்தப்பட்ட அழுத்தம், அவர்கள் வளர்ந்ததும் மீண்டும் இயங்கி, மூளையின் வடிவம், அளவில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் தொடர்பு கொண்டுள்ளது என்பது, தற்பொழுதுதான் அறியப்பட்டுள்ளது.

லண்டன் விஞ்ஞானிகள் 500 இற்கு மேற்பட்ட குழந்தைகளில் இத்தகைய விடயங்களை ஆய்வு செய்து இந்த உண்மைகளை உறுதி செய்துள்ளனர்.

சாரா ஜென்சென் என்ற லண்டன் கிங் கல்லூரியின் உளவியல் ஆய்வாளரும் புதிய கல்வியியல் எழுத்தாளருமான அவர் சொல்கிறார், ஆரோக்கியமான மக்களிடம் இயல்புநிலையான ஒரு செயற்பாடு உள்ளது. அதாவது, பகற்கனவு காணுதல், சுயபிரதிபலிப்பு, மனம் அலைதல் (தேடுதல்) போன்றவற்றில் ஈடுபடுவதனூடாக, மன அழுத்தங்கள் குறைகிறது.

இந்த இயல்புநிலை சரியாகச் செயற்படாதவிடத்து, மூளையில் மாற்றங்கள் ஏற்பட்டுவிடுகிறது. வளரும் பருவத்திலும் மன அழுத்தம் தொடர்கிறது. இத்தகையவர்கள், வன்முறையாளர்களாகவோ, தீயவேட்கை உள்ளவர்களாகவோ, சமூகவிரோதிகளாகவோ உருவாக வாய்ப்புள்ளது என்கிறார்கள்.

இதனால், பிரச்சினைகளை போத்தலில் அடைப்பதுபோல் அடைத்து உள்ளுக்குள் வைக்காமல் யாரிடமாவது சொல்லவேண்டும். ஏனையவர்களது உதவியைப் பெறவேண்டும் அல்லது பகல்கனவு காண்பது, வேறு கலைகளிற்



ஈடுபாட்டை வளர்ப்பது போன்றவற்றை குழந்தைகளுக்கு செயற்படுத்துவது நல்லது என்று ஆய்வாளர்கள் அறிவுரை வழங்குகிறார்கள்.

தமிழில்-பாமா.

facebook

## முன்கோபம்

ஒரு இளஞ்ஜோடியருக்கு திருமணமாகி 5 ஆண்டுகளாக குழந்தை பாக்கியமே இல்லை. அதனால் அவர்கள் மிகவும் வருத்தத்தில் இருந்தனர். ஒரு நாள் அழகிய நாய்க்குட்டியை வாங்கி வந்தனர், அதை தங்கள் மகன் போல வளர்க்க ஆரம்பித்தனர். அந்த நாய்க்குட்டியும் அவர்களுடன் விளையாடி மகிழ்ந்தது. ஒருமுறை திருடன் அவர்கள் வீட்டிற்கு வந்தபோது தன்னுடைய எஜமானருக்கு விசுவாசமாக நடந்து கொள்ள தன் உயிரையும் பொருட்படுத்தாமல் அவர்களை விரட்டியது.

நாட்கள் உருண்டோடின அந்த குட்டி நாய் நல்ல பெரிய நாயாக வளர்ந்தது. 7 வருடம் கழித்து அந்த தம்பதியனருக்கும் ஒரு மகன் பிறந்தான்.

இப்போதெல்லாம் அந்த குழந்தையுடன் தான் அந்த தம்பதியினர் நேரத்தை செலவிடுகின்றனர். நாய் இப்போதெல்லாம் தனிமையிலே தன் பொழுதை கழிக்க வேண்டியதாயிற்று. அவர்கள் வளர்த்த நாய்க்கு அந்த குழந்தை மேல் பொறாமை உண்டாயிற்று.


ஒருநாள் அந்த தம்பதியினர் குழந்தையை தொட்டிலில் தூங்க வைத்து விட்டு மாடியில் நின்று பேசி கொண்டு இருந்தனர்.

சிறிது நேரம் கழித்து நாயின் சத்தம் கேட்டதும் மேலே இருந்து இறங்கி ஓடி வந்தனர். படி அருகில் நாய் வாயில் இரத்தக்கறையுடன் நின்று கொண்டு இருந்தது. இதைப் பார்த்ததும் அதன் எஜமானர் ஓடி சென்று துப்பாக்கியை எடுத்து வந்து நாயை சுட்டு வீழ்த்தினார்.

பிறகு வீட்டின் உள்ளே சென்று பார்த்த அவர்களுக்கு ஒரே அதிர்ச்சி. குழ்ந்தையின் அருகில் நல்ல பாம்பு இரண்டு துண்டுகளாக கிடந்தது. குழந்தையை காப்பாற்ற அவர்கள் வளர்த்த நாய் அந்த பாம்பை கடித்து போட்டுள்ளது, அந்த பாம்பின் இரத்தக் கறை தான் நாயின் வாயில் இருந்தது என்று அப்போது தான் அவர்களுக்கு புரிந்தது.

தாங்கள் குழந்தையை காப்பாற்றிய நாயை அநியாயமாக கொன்று விட்டனே என்று கதறி அழுதனர். முன்கோபம் முட்டாள்தனத்தில் போய் முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. எப்ப நாம ஒரு முடிவு எடுப்பது என்றாலும் நன்றாக ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

# தென்மைரத்தில் தேள் கொட்டினால் பனைமரத்தில் நெறி கட்டுமோ?



ஒரு வீட்டில் எலித்தொல்லையை போக்க எலிப் பொறியை வைத்திருந்தாள் அவ்வீட்டுத் தலைவி.

எலிப்பொறியை பார்த்த எலி, அவ்வீட்டு சேவலிடம் சென்று சொல்லியது; சேவலண்ணே சேவலண்ணே இந்த வீட்ல எலிப்பொறி வச்சிருக்காங்க சேவல் அண்ணாச்சி ரொம்ப கெத்து.

போடா பெருச்சாளி பயலே. எலிப்பொறி வச்சிருந்தா எனக் கென்னடா. நீ போய் ஒளிஞ்சிக்க என்றார் சேவல் அண் ணாச்சி. அடுத்து அந்த வீட்டு ஆட்டிடம் சென்றது எலி. ஆடே ஆடே இந்த வீட்ல் எலிப்பொறி வச்சிருக்காங்க.

அந்த ஆடு, போடா அந்தப் பக்கம் எலிப்பொறி வச்சிருந்தா நீதான் கவலைப்படனும். எனக் கென்ன? என்றது வீராப்புடன்.

அடுத்து அந்த வீட்டு மாட்டிடம் சென்றது. இந்த வீட்ல எலிப்பொறி வச்சிருக்காங்க.

அந்த மாடு ரொம்ப கோவக்கார மாடு அடே பெருச்சாளி பயலே, ஓங்கி மிதிச்சேனா ஒன்ற டன் வெயிட்டா, எலிப்பொறி வச்சா எனக்கென்னா? மரியாதயா ஓடிடு என்றது. எலி பத்திரமாக வலைக்குள் ஒளிந்து கொண்டது,

ஒரு நாள் அந்த எலிப் பொறியில் ஒரு பாம்பின் வால் மாட்டிக் கொண்டது.

சத்தம் கேட்டு இருட்டில் துழாவிக்கொண்டே வந்து எலிப்பொறியை எடுத்த வீட்டு எஜமானியை பாம்பு கொத்திவிட்டது.

வைத்தியர் சொன்னார், சேவலின் இரத்தத்தை ஊற்றி னால் சரியாகிடுமுன்னு.

சரின்னு சேவலை அறுத்து இரத்தத்தை ஊற்றினார்கள். ஆனாலும் தலைவி உயிர் ஊசாலடிக் கொண்டிருந்தது.

அவளை பார்க்க உறவினர்கள் வந்தார்கள். அவர்களுக்கு விருந்து வைக்க தலைவன் ஆட்டை வெட்டினான்.

சிலநாட்களில், தலைவி இறந்து விட்டாள், சொந்தக் காரங்க நிறைய பேரு வந்தாங்க.

மாட்டை வெட்டி விருந்து படைத்தான். இத்தனையும் வேடிக்கை பார்த்த படி எலி சுகமாக வாழ்ந்தது.

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 501

டிலானி புவி




யா தவ்




ஹாட் பெயின்




சௌந்தீசன் போல் நிதா




ஜெய மதி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கவிதைக் கலசம்



## நீ நிலவைப்போல்

பெயருக்கேற்ற வதனம்- என்
உயிரின் மூல உதயம்
நிலவைப்போல தழுவும்-இரு
கரங்கள் மலரில் ஜனனம்
தென்றல் காற்றால் தழுவும்- உன்
தேகம் இனிமை தரவும்
காதல் பொங்கிப்பொங்கிப் பெருகும்-என்
ஜீவன் உருகி ஒழுகும்
கண்கள் பேசும் மொழி
காதல் இன்பவழி
வானம் உயரமடி- அதில்
உன் பாசமதிகமடி
சொல்லில் ஊறும்தேன்- என்
நெஞ்சில் உந்தன் பேர்
கல்லில் எழுத்தைப்போல்
அழிவே இல்லை பார்

**இரா.நவதர்சினி**
வயாவிளான் கிழக்கு

## முதுமை மனதின் வலி

தவிர்க்க முடியாததாகிவிட்டது முதுமை
தளர்வும் மெலிவும் நோயுமென
தாளாத துயராகிவிட்டது தனிமை
கழிந்து போன
இளமைக்காலத் தடங்களிற் கால்பதித்து
நினைவுகளில் மட்டுமே சுகிக்க முடிகிறது
இன்னொருமுறை அந்தக் காலத்துக்காய்
ஏங்கித்தவிக்கிறது நினைவு
சிறகடிக்கும் எண்ணப் பறவையை
சிறையிடுகிறது நோயின் வலி
காலனின் வருகை ஊர்ஜிதமானாலும்
நாள்கள்தான் இன்னும் வாழ்வின்
கணக்கென்றாலும்
ஏதோ மனம் அவாவுகிறது
உயிர்ப்பான வாழ்வின் சாரத்தில்
பெற்றவற்றோடு
எஞ்சியவற்றையும் இன்னும்
என்னென்னவற்றையெல்லாமோ
சொல்லத்துடிக்கிறது மனது
அவசர அவசரமாய் ஓடும் உலகில்
பேசுவதற்குக்கூட
யாருமே அருகில் இல்லாததாய் வாழ்வு
நோயின் வலியோடு மனதின் வலியும் கூடவே

**கலாபூஷணம் ந.இராமநாதன்**
**அல்வாய் வடக்கு, அல்வாய்.**

## இமயம் தொட

அன்புபோல நடித்துக்கொண்டு
நெஞ்சில் வஞ்சம் வைக்கும்
சின்னத்தனமுள்ளோரை
தூக்கி எறி
அன்பைக் காட்டும் பொருள்
உதடு அல்ல என
அவர்க்குப்புரியவை
சிந்தை மனத்தோடு
அன்பு கொள்வோரை
உன் அருகில்வை
மற்றோரை தூரம் வை

மாவை. நா.கஜேந்திரன்

## ஓமந்தைத் தாயவள் அழுகிறாள்

ஒவ்வொரு ஊரையும்
ஒவ்வொரு பெருமைசொல்லி
ஒவ்வொருவரும் அழைக்கின்றார்கள்
என்னை மட்டும்
சோதனைச் சாவடிக்குப்
பெயர் போனவன் என்று -ஏன்
அழைக்கின்றனர்

**கடவுளே**

காணாமல் போய்விட்டேன் என்ற
செய்திகேட்டு
காலமாகிவிட்டாள் என்தாய்
காகமும் கழுகும் என் உடலை
காட்டிலே வேட்டையாடுகிறது
கடவுளே நல்லவேளை-இக்
காட்சியைக் காணாமலே
கருமாரியாகிவிட்டாள்
கருவிலே சுமந்தவள்

**ஜெயம் ஜெகன்**
புதுக்குடியிருப்பு

# மௌனத்தின் தேடல்- 267



## சகோதர பாசம்

கடும் யுத்த வேளையில்
காணாமற்போயினர் பெற்றோர்
அந்தர வெளியில்
ஆருமற்ற சூழலில்
தனித்துவிடப்பட்ட
தன் தம்பியைப் பார்த்து
தேம்பி அழுகிறான் அண்ணன்
வேசம் போடும் இக்காலத்தில்
சகோதர பாசத்தை
உணர்வார்களா?

துரை, தென்மட்டுவில்

## சர்வதேசமே உடைத்துவிடு என் விலங்கினை

பெற்றோரை இழந்தோம்
போரின் சதியிலே
உற்றோரை இழந்தோம்
சிறையின் அடைப்பிலே
ஊனும் இழந்தோம்
உடையும் இழந்தோம்
ஊரும் மறந்தோம்
உறவும் மறந்தோம்
அண்ணாவைத் தேடும்
தங்கையை
அணைக்கத் துடிக்கின்றேன்
என் கரத்தினை
பூட்டிய விலங்கினை
சர்வதேசமே உடைத்துவிடு

*நா.தளையசிங்கம்*
*கொக்குவில்*

## தத்துவத்தின் பலம்

வறுமை என்று
எதுவுமில்லை
உலகம் உனது
சொந்தமல்லவா
அநாதை என்று
யாருமில்லை
தெய்வம் உனது
அன்னை தந்தை
தத்துவத்தின் பலமே
வாழவைக்கும் சக்தி
துயரப்படாதீர்

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

## பாசம் மொழிவதற்கு நேரமில்லை

ஆதரித்து அன்பு செலுத்த
யாருமில்லையே என்று...
அங்கலாய்க்கும் உன்
உள்மனம் புரியாதவர்கள்
நாங்களல்ல...
இயந்திர உலகில்
இயந்திரமாய் செயற்படும்
பெற்றோர்கள் உன்மீது
பாசமழை பொழிவதற்கு
நேரமில்லை என்பதை
புரிந்துகொள் மகனே

*வ.ச.செல்வராசா*
*திருநாவலூர்*

## உன் பார்வையின் அர்த்தம்தான் என்னவோ?

மரங்களின் புணர்ச்சி
மலர்களைத் தந்தது
விதைகளின் புணர்ச்சி
விருட்சம் தந்தது
காற்றின் புணர்ச்சி
கானம் தந்ததைப்போல்
நிலவின் வருகைக்காக மலராமல்
காத்திருக்கும் அல்லியைப்போல்
உன் விழிகள் யார் வரவையோ
எதிர்பார்த்துக்
காத்திருக்கின்றதல்லவோ...

*லி.டயானி*
*மறவன்புலோ மத்தி*

## யார்க்கு எடுத்துரைக்க?

அப்பா புனர்வாழ்வு தடுப்பில் வாட
பிஞ்சுகள் நாம் பசியில் வாட
நான் பிச்சையென்று கையேந்த
கௌரவமாக வாழ்வோமென
கைகளுக்கு விலங்கிட்டு
தம்பியை பத்திரமாய் பார்த்திடு
கரைவலையில் மீன் தெரிந்து
சாப்பாடு கொண்டருவேன் என்று
கூறிச்சென்ற அம்மாவை
வழிமேல் விழிவைத்து
காத்திருக்கும் எம் நிலையை
யாருக்கு எடுத்துரைக்க?


*ஆ.இந்திரா*
*வதிரி*

## விடைதாரீர் விரைந்து

உறவில்லை வாழ
வழியில்லை
நெஞ்சில் நிறைவில்லை
மீள இயலவில்லை
வலிசுமந்த வாழ்வதற்கு
விடைகூட இல்லை
கைவிலங்குடன் கழிகின்ற
காலங்கள் தகர்ப்போம்
சிட்டாய் சிறகடிக்கும்
பட்டாம் பூச்சிகளாய்
பறப்போம் நாமும்
விடைதாரீர் விரைந்து!

*மல்லாவி கஜன்*

# மௌனத்தின் தேடல் –268



**அன்பு வாசகர்களே !**

*உங்கள் எண்ணத்தில் தோன்றும்*
*கவிதைகள் மற்றும் வியாசர்*
*பதிலுக்கான கேள்விகளை*
*ஆசிரியர்*
*'மௌனத்தின் தேடல்'*
*சங்குநாதம்*
*இல3,2ம் ஒழுங்கை,*
*பிறவுண்வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*எனும் முகவரிக்கு 30.09.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.*

*குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.*

*-ஆசிரியர் -*

**கடந்த 06.09.2015 ஞாயிறு வலம்புரியில் வெளிவந்த "ஐயோ சேர் அடிக்காதையுங்கோ" என்ற சம்பவ விபரணம் தொடர்பில் சர்வதேச நிபுணர்கள் பலரின் நேர்காணல்கள் தொடர்ச்சியாக வெளிவரவிருக்கின்றன. இவ்வாறு, பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் நேர்காணல் தொடர்கின்றது.**

## மனவெளி

**தண்டனை முறைகளால் மாணவர்கள் எதிர்கொள்ளும் நீண்ட காலத் தாக்கங்கள்**

தண்டனை பாடசாலையில் எந்தவகையாக இருந்தாலும் அது பிள்ளையின் முழுமையான வளர்ச்சியில் குறுக்கிடுகின்றது. பெரியவர்கள் பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுக்கும் போது, இவ்விதமான தண்டனைகள் முரண்பாடுகளை கையாள்வதற்கு இது ஒரு தகுந்த முறை என்று கற்றுக் கொடுக்கின்றது. பிள்ளைகளை அதிகமாக அடிக்கும் போது அவர்கள் பெற்றோர்களாக வரும்போது அதிக கோபமுள்ளவர்களாக தமது பிள்ளைகளை அடிக்கின்றார்கள். பெரும்பாலும் அவர்கள் அடிப்பதை சரியென்று நினைக்கின்றார்கள். உடல் ரீதியான தண்டனை மோசமான உடல், உள கல்வி ரீதியான வெளிப்பாடுகளைக் காட்டுகின்றது.

- வகுப்பறையில் பொருட்களை சேதப்படுத்துகின்ற நடத்தை
- பாடசாலை அடைவு மட்டம் குறைவடைதல்
- பாடசாலை ஒழுங்கீனம்
- அதிகளவான இடைவிலகல்
- பாடசாலையை வெறுத் தொதுக்குதல்
- சுயமதிப்பின்மை,
- பதட்டம்,
- மெய்ப்பாட்டு முறைப்பாடுகள்
- மனச்சோர்வு,
- தற்கொலை எண்ணங்கள்
- ஆசிரியர்களை எதிர்த்தல்.

இவையனைத்தும் சிறுவர்களை உணர்வு ரீதியாக காயப்படுத்துகின்றன.


தண்டனைக்குட்பட்ட பிள்ளைகள் பின்னர், இயல்பல்லாத நடத்தைக் கோலங்களை -அதீத நடத்தைகள் (Hypera ctivity) தீய நடத்தை போன்றவற்றைக் காட்டுவார்கள்.

மனரீதியான தொந்தரவுகள் அல்லது உளரீதியான பாதிப்புக்கள், பின்வருவனவற்றைக் காட்டும்.

தீய வார்த்தைகளைப் பேசுதல்.

உணர்வுரீதியான ஒதுங்கல்கள் போன்றவை சக்தி வாய்ந்த எதிர்மறையான விளைவுகளை உண்டாக்குகின்றன. இது அதிகமான பிள்ளைகளிலும், வளர்ந்தவர்களிலும் நடத்தைப் பிரச்சினைகளைக் காட்டுகின்றது. உளரீதியான துஷ்பிரயோகம், உடல்ரீதியான தண்டனையை விட அதிகமான மன அழுத்தத்தை உருவாக்குகின்றது.

நெடுநாட்களாகக் கொடுக்கப்படும் உளரீதியான தாக்கங்கள் பிள்ளையின் தற்காப்புணர்ச்சியை அழித்து விடுகின்றன. பிள்ளைகளைப் பல வழிகளிலும் ஒதுக்கிவைப்பது, பிள்ளைகளின் உணர்வுகளையும், அறிகை ரீதியான ஆரோக்கியத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.



**பாடசாலைகளில் கடினமான நிலைமைகளில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகள்:**

ஒரு நிலைமையின் போது கல்விசார் மட்டங்களில் எடுக்கப்பட வேண்டிய சில தந்திரோபாயங்கள்

1. நேர ஒழுங்கீனம், சுகாதாரமின்மை மற்றும் கல்வி சம்பந்தமான பிரச்சினைகள்.

- பிள்ளைக்குத் தன்னை விளங்கப்படுத்துவதற்கு சந்தர்ப்பம்,வழிகாட்டல், ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும்.
- பிள்ளைகளுக்கு தமது பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் காண்பதற்குரிய பல சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும்.
- மேலும் அவர்கள் தங்களுடைய குழப்படியான செயற்பாடுகளைத் தொடரும் போது திருந்துவதற்கு ஒரு வாய்ப்பையும் ஒரு எச்சரிக்கையையும், கொடுக்க வேண்டும்.
- அவர்களுடைய குற்றத்தின் தன்மை கூடும்போது அவரின் குடும்ப அங்கத்தவர்களையும் அவர்களைக் கண்காணிப்பதற்கு ஈடுபடுத்த வேண்டும்.
- கட்டிளமைப்பருவத்தினரோடு செயற்படும் போது, அவர்கள் தமது இலக்கை அடையவில்லையே என்ற மனமுறிவினூடாகவும் அடுத்த முறை அதனை எப்படி அடைவது என்பதனூடாகவும் செல்ல வேண்டும்.

2. பள்ளிக்கூட அதிகாரிகளின், ஆசிரியர்களின் எதிர் பார்ப்புகளை அடையாமை:

உ-ம்: கவனமின்மை, வகுப்பில் கதைத்தல், வகுப்பில் சத்தமிடுதல் போன்றவை.

- அமைதியாகக் கதைத்து, கோபப்படாமல், நல்ல ஒழுக்கமாக நடப்பதற்கு மாணவர்களோடு ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
- வகுப்பில் முன் வரிசையில் உட்கார வைப்பது, நல்ல நடத்தையுள்ள வேறொரு பிள்ளையுடன் சேர்த்து உட்கார வைப்பது, போன்றவை இளம்பிள்ளைகளுக்கு உதவக்கூடியவை.
- பிரச்சினையான பிள்ளைகளை மேலும் குழப்பாமல் கையாளவேண்டும்.
- குழப்பம் செய்யும் பிள்ளைகளுக்கு ஒரு எளிய வாய் மூலமான எச்சரிக்கை.

உ-ம்: வகுப்பில் கதைக்கின்ற பிள்ளையின் பெயரை சும்மா அழைப்பது. அல்லது அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டல்.

- வளர்ந்த பிள்ளைகளோடு ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஓர்நகைச் சுவையை பயன்படுத்தலாம்.
- சிறிது நேரம் வெளிச் செல்ல அனுமதிப்பதாலும் நிலைமையைச் சீராக்கலாம்.
- அடிப்படையான ஏதாவது பிரச்சினைகள் பிள்ளையிடம் இருக்கின்றதா என்பதனை ஆராய வேண்டும்.

உதாரணமாக கற்றல் குறைபாடுகள், கருத்தொருமித்தல் குறைபடுகள், அதீத செயற்பாடு, கடினமான குடும்பப் பின்னணி, மனவடு போன்றவை.

- ஆசிரிய உளவளத் துணையாளர், விளையாட்டு ஆசிரியர் ஆகியோருடன் கலந்துரையாடி, பிள்ளைகளின் கவனத்தையும் செயற்பாடுகளையும் விளையாட்டுக்களையும் மேம்படுத்தல்.
- பிள்ளைகளின் பெற்றோர்களோடு கலந்துரையாடி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

3. பிரச்சினையான நடத்தை மற்றவர்களுக்கு தாக்கத்தையும் காயங்களையும் ஏற்படுத்துதல்.

- ஆசிரியர்கள் மாத்திரமல்ல பிள்ளைகளும், மற்றவர்களுடைய உரிமைகளை மீறும்போது பிள்ளைகளுடைய உரிமைகளைப்பற்றிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- பிள்ளைக்கு தனது நடத்தை பற்றி விளங்குவதற்கு பயமுறுத்தாமல் ஒரு சந்தர்ப் பத்தை கொடுத்தல்.
- அந்த நடத்தைகளால் ஏற்படுகின்ற பலாபலன்களை விளங்கப்படுத்த வேண்டும்.
- வன்முறைகளைக் கையாள்வதற்கு ஒரு திட்டத்தை வகுத்துக் கொள்ளுங்கள். அதுவும் பிள்ளைகளோடு கலந்துரையாடியே தீர்மானிக்கப்பட வேண்டும்.
- பிள்ளை தனது செயற்பாட்டுக்கு வருந்தினால், அதன் செயற்பாட்டால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றி எண்ணிப்பார்க்கச் செய்ய வேண்டும்.
- பிள்ளையின் நடத்தை அண்மையில் ஏற்பட்டதா? அல்லது நெடுங்காலமாக இருக்கின்றதா? என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.
- சண்டையில் ஈடுபடுதல், பொய் சொல்லுதல், போன்ற பழக்கங்கள் இடைக்கிடையே ஏற்பட்டால் அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றி எழுதுகின்ற பயிற்சியைக் கொடுக் கவும்.

இதில் பெரும்பாலும் சொல்லப்பட்ட கருத்துக்கள் (Guidelines for Eliminating Corporal Punishment in Schools – by National Commission for Protection of Child Rights (NCPCR) India) என்ற ஆய்வினை ஆதாரமாகக் கொண்டவை.

**வாசகரின் கருத்துக்கள் :**


அச்சுவேலி, திரு. இராஜேந்திரன் என்ற வாசகரின் கருத்து: மனவெளி பகுதியில் வெளிவந்து கொண்டிருக்கின்ற மாணவர்களுக்குரிய சரீரத் தண்டனைகள் தொடர்பில கருததுத தெரிவிக்கும் போது, மாணவர்களுக்கு அடிப்பது, தண்டனை கொடுபபது இன்று நேற்று நடைபெறவில்லை, காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றது. பலரும் பல முயற்சிகள் எடுத்திருந்தாலும், பத்திரிகை ஊடாக மேற்கொள்ளப்படும் உங்கள் மனவெளி பகுதி வரவேற்கத்தக்கது. ஆனாலும் தனித்து உளவியல் சார்ந்த கருத்துக்களுடன் முடிக்காமல், கல்வித்திணைக்களத்தில் முக்கிய பதவி வகிப்பவர்களின் மனநிலை என்ன? கருத்துக்கள் என்ன என்பதை வெளியிட்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டிய பகுதி கல்வி நிர்வாகத்தில்தான். கல்வித்துறையில் இருப்பவர்கள் வெவ்வேறான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். சில பெற்றோர் அடிப்பது நன்று, எங்கள் பிள்ளைகளை அடித்துப் படிப்பியுங்கள் என்று கூறுவதும். இல்லை அடிக்காமலும் பிள்ளைகளை அணுகலாம் என்று வேறு சிலரும் வாதிடுகின்றனர். ஆனாலும் நாம் அனைவரும் சேர்ந்து ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும். பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள் இவ்விடயத்தில் தண்டிப்பது தவறு என்ற கருத்துடன் பல முயற்சிகள் செய்வதை நாங்கள் அறிவோம். இருந்தாலும் மாற்றங்கள் சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. என்னைப் பொறுத்தவரையில் அடிப்பதால் நீண்டகாலத்தில் மாணவர்களுக்கு நல்லதொரு கற்பிதம் கிடைக்கப்போவதில்லை. அணுகுமுறைகள் மாறும் போது பலாபலன்களும் மாற்றமடைகின்றன.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham



இன்னிசையில் நர்த்தனமாடி உயர் வாழ்க்கைத் தத்துவத்தைக் கதையாடல் செய்த,

# “அளப்பருங்கருணை”

அந்தி சாய்ந்துகொண்டிருந்தது. இருள் இன்னும் கவியவில்லை. 08.08.2015 சனிக் கிழமை (மாலை 6.30 மணி அளவில்) யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட 'ஹூவர்' கலையரங்கை அண்மிக்கின்றேன். வழமைக்கு மாறாக, அதன் வாயிலின் இருமருங்கும் வாழைத் தண்டைச் சுற்றிக் குருத்தோலை அலங்காரத்தின் மத்தியில் ஒற்றைச் சுட்டிகள் ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன. கோயிலுள் நுழைவது போன்றதோர் உணர்வு ஏற்பட, வாசலில் நின்ற இளம்பெண்கள் கையளித்த துண்டுப் பிரசுரத்துடன் மேலும் நகர்ந்தபோது நவதானியங்களால் அமைக்கப்பட்டு ஒற்றைச் சுடருடன் ஒளி வீசிய கோலம் மனதில் சமநிலையை ஏற்படுத்தியது. அரங்கின் முகப்பு மூலையிலும் தோளளவு உயரத்தில் குத்து விளக்கினை ஒத்த குருத்தோலை அலங்காரம் தமிழ்க் கலாசாரக் குறியீடாய்க் காட்சியளித்தது. அரங்கைத் தாண்டி இந்நாடகத்தின் பேசு பொருளுக்கான சூழமைவினைப் புற வெளிகளும் கொண்டிருந்தமை புதிய அநுபவமாக இருந்தது.

6.45 அளவில் பிரசுரத்தில் உள்ள நாடகக் கதைச் சுருக்கம் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து மின்விளக்குகள் யாவும் அணைக்கப்படுகின்றன.

ஓங்கார நாதத்துடன் திரை விலகுகிறது. இன்னோருலகுக்குள் நாம் பிரவேசிக்கின்றோம்

சித்திரைத் திங்கள் விடிகாலைக் கதிரவன் வருகையுடன் ஆடல் பாடல் சகிதம் மிகவும் உற்சாகமாக இன்பக் களிப்புடன் தொடங்குகிறது 'அளப்பருங்கருணை'

தாஹூரின் 'சந்நியாசி' குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில் **'அளப்பருங்கருணை'** யாக மேடையை நிறைக்கிறது. 'கீதாஞ்சலி', 'வசந்தத்தின் சுழற்சி' ஆகிய தாஹூரின் கவிதைகள் அற்புதமாகத் தமிழ்ச் சூழலுக்கமைய பாடலாக மாற்றப்பட்டுக் கதைக் கருவிற்கும் துறவியின் மனவுணர்வுகளுக்கும் கதைப்போக்கிற்கும் ஏற்ப அவ்வப்போது உரிய இடங்களில் பொருத்தப்பட்டிருந்தும், அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் சாதாரண சொற்கள் இரு வேறு தளங்களில் அடி முடி தேடிப் புரிகின்ற ரசவாதமும் இந்நாடகத்தின் சிறப்பம்சங்கள். இசையில் குழைத்து, அசைவில் 'பாவம்' ததும்ப, இனிய கருத்தாழம் நிறைந்த பாடல்களும் உரையாடல்களும் மனதை வருடி மெல்ல மெல்லப் புகுத்திய வாழ்க்கைத் தத்துவங்களோ ஏராளம்.

சுருங்கச் சொன்னால், றொபேட் குழுவின் இசையும் 'கலாபவன' மாணவிகளின் நடனமும் இணைந்து 'துறவி' இன்னொரு பிறப்பெடுத்தது.

நீண்டகால வாழ்வு அநுபவங்கள் தந்த தழும்புகளும் தறுக்கணிப்புகளும் காயங்களும் வடுக்களும் 'துறவ' யாகி காலத்துக்கேற்ப உணர்வுகளைக் கையாளத்தக்கதோர் வடிவில் ஒரு நாள் பொழுதின் காலை, நண்பகல், அந்தி, நடுநிசி என தாஹூர் இதனை வடிவமைக்கிறார். அவ்வாறே நாடகமும் ஆரம்பம், வளர்நிலை, உச்சம், முடிவு எனத் தன்னை வரையறுத்துக் கொள்கிறது.

ஏறக்குறைய இருமணி நேரங்கள் அரங்கிலுள்ளோரை அகப்புற வெளிகளில் களிப்பேருவகை கொள்ளவைத்து அறிவுசார்ந்து சிந்திக்க வைத்த இத்தத்துவார்த்த நாடகத்திற்கு இசை, நடனம் என்பன அடிப்படை ஊடகங்களாக அமைந்து, சகல சாத்தியங்களையும் வழங்கின. மிகவும் இனிமையாகவும் அதேநேரம் ஆழமாகவும் ஆன்மீகத் தளத்தை மையமாக்கி, சமூக – கலாசார - பண்பாட்டு அம்சங்களுடன் உளவியல் ரீதியாகவும், மனித நடத்தைகளில், அவர்களது குணாம்சங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களைச் சம்பவங்கள், உரையாடல்கள், காட்சிப்படுத்தல்கள் மூலம் வெளிப்படுத்திய இந்நடனநாடகம் அரங்கில் அளப்பரிய கருணை வெள்ளத்தைக் கரைபுரண்டோட வைத்தது.

துறவி, சிறுமி, கவிஞர் மூவருமே முக்கிய கதாபாத்திரமாக, ஏனையோர் மையக் கதைக்கு வலுச் சேர்த்தனர். மலையடிவாரத்தில் இருட் குகைக்குள் ஒரு கல்லாசனத்தில் அமர்ந்திருந்து பேதங்கள், பிரிவுகள் எதுவுமற்று இல்பொருளின் ஜபத்தினை ஓதும் தனிப்பெரும் ஒருவனாகத் தன்னைத் தானே அறிமுகப்படுத்தும் துறவி, தன்னை ஒடுக்கி, வாழ்விலிருந்து ஒதுங்கி, வார்த்தை கொத்தியாக மனித வாழ்வினை விமரிசித்தபடி, அவரே அத்தனை பதத்தையும் கொத்திப் பொறுக்குபவராக இருப்பதையும் காட்சி ஓட்டங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. இருப்புக் குறித்த பிரக்ஞையை வெளிப்படுத்துவதற்குரிய ஆரவாரமில்லாத சிறந்த தளங்களாக அரங்கில் காட்சியளித்த கல்லாசன இருக்கைகள் காட்சியமைப்பைக் கச்சிதமாக்கியிருந்தன.

பல்கலைக்கழகத்தில் நடக்கும் ஆய்வுகள் தொடர்பான மாணவர்களது உரையாடல், துறவியின் இடையீடுகள், பூக்காரிகள்- வழிப்போக்கனது உரையாடல், பிச்சைக்காரனது இரத்தல், இளவரசன் வருகையின்போது பிச்சைக்காரனை விரட்டல் முதலியன சமூக யதார்த்தத்தையும் 'தங்க ஓரிடம் கிடைக்குமா' என்ற வழிப்போக்கனின் சாதாரண கேள்விக்கு 'சுயத்தின் ஆழத்திலல்லாமல் உறைவிடம் வேறெங்கும் கிடையாது.' எனக் கூறும் துறவியின் வார்த்தைகளும் 'தங்களுக்குதவ காத்திருக்கின்றேன்.' என்ற மனிதம் தோய்ந்த சிறுமியின் மனப்போக்கும் 'இன்னார் இனியார் என அறியாது எவ்வாறு உனது இல்லம் வரலாம்?' என்ற வழிப்போக்கனின் சாதியஞ்சார்ந்த எதிர் வினாவும் பல தரப்பினரின் மனோபாவங்களுக்கான உதாரணமாகும் இவ்வாறு பேசாப் பொருளாய் நிலைகுத்தி நின்றவை பலப்பல.

'தன் தோளில் தன்னைச் சுமத்தல், தன் வீட்டில் தானே இரத்தல்.' **“கடவுள் உன்முன் இல்லை. அவன் உழைப்பாளியின் இடத்தில், வெயில், மழை இரண்டிலும் அவர்களோடிருக்கின்றான். ஆகவே இந்த ஓதலை, இந்தப் பண்பாடலை, செபமாலை உருட்டிச் செபித்தலை விடுத்து புனிதப் போர்வையைக் களைந்து அவனைப் போலவே புழுதியில் இறங்கு”** என அனைத்து மதத்தினருக்கும் விடுக்கும் அறிவுறுத்தல்கள் எனப் பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டு ஏறத்தாள 45 நிமிட நேரங்களுக்குப் பின்பே சிறுமியின் வருகையுடன் கதை மையங்கொள்கிறது.

துறவியின் இயற்கையை நோக்கிய சுயபுலம்பல் அவரது நிறைவேறாத கடந்த கால வாழ்வநுபவங்களுக்குச் சாட்சிகளாகின்றன. 'விட்டு விடுதலை'யாகாத அடக்கப்பட்ட உணர்வுகளின் இறுகிப்போன வடிவமாகத் தென்படும்

ஏணியாக - ஊடுபாவாக - வழிநடத்துநராக உலவுகிறார். ஆக மொத்தத்தில் இந்நாடகம் வாழ்வுபற்றிய கருத்துநிலையை நேர், எதிர்ப் பெறுமானங்களுடன் முன்நின்று கலந்துரையாடத் தொடங்குகின்றது.

வீதியில் வருகின்ற சிறுமியின்மீது தனது சேலை பட்டதால் அம்மனுக்கு எடுத்துச் செல்லும் ஆராதனைப் பொருள் அசுத்தப்பட்டுவிட்டதாக விரட்டும் ஒரு பெண்ணின் உரையாடலூடாக செந்தி அறிமுகமாகிறாள். அவள் தீண்டத்தகாதவள் என்பதுடன் அக்காலச் சாதி, சமயத் தீட்டுக்களும் சூசகமாக முன்வைக்கப்படுகின்றன. துறவி - செந்தி உரையாடல் ஏறக்குறைய பதினைந்து நிமிடங்கள் நடைபெறுகின்றது. பகல் முடிந்து நண்பகலாகிறபோது நாடகமும் உச்சத்தை நோக்கிச் செல்கிறது.

அப்பாத்திரத்திற்குரிய குணாம்சங்களை உள்வாங்கி- உணர்வுகளை பரிமாற்றி அக்கதைக்குள் அமிழ்ந்த வைக்கக் கூடியளவ அச்சிறுமியின் நடை, உடை, அசைவு, முக பாவம் அனைத்தும் அச்சொட்டாக அமைந்திருந்தது.

சுற்றிப் படர மரத்தைத் தேடி அலையும் அச்சிறுமி துறவியிடம் சரணடைந்து தன்வரலாறு கூறுவதனூடாக பெற்றோரை இழந்த அவளின் பெயர் செந்தி என்பதும் அவளது தந்தை 'சட்டம் கடவுள், சடங்குகளை வெறுத்தவர்' என்பதும் அனைவராலும் ஒதுக்கப்பட்டு நிர்க்கதியான நிலையில் துறவியிடம் புகலிடம் தேடி வந்திருப்பதும் தெரிய வருகிறது. இவ்வுலகில் புகலிடம் இல்லையா? என்ற செந்தியின் கேள்விக்கு அவர் கூறும் பதில் வாழ்வின் வெறுமையையும் துறவின் பெருமையையும் உணர்த்துகிறது. உலக வாழ்வினை அவ்வாறே எதிர்கொள்ள ஏங்கும் ஏதிலிச் சிறுமியின் பதிலும் தொடர்ந்து அவளின் வார்த்தைகளும் நடத்தையும் மறக்கமுடியாத எவருக்கு மனதை நெருடுகின்றன. முடிவிலா ஒன்றில் கலந்து கடவுள், மனிதரை விட்டுவிலகி வாழும் அத்துறவி இறுதியில் நாதியற்று நிற்கும் அவளைத் தன்னுடன் இருப்பதற்கு உடன்படுகிறார்.

அவரது நிழலில் அமைதியுடன் உறங்கும் அவளது எழிலில் மயங்கிய துறவியின் அகவுணர்வுகள் அவரது முகபாவத்திலும் நடனமாடும் பெண்கள் மூலமாகவும் அளிக்கை செய்யப்பட்ட முறைமை சினிமாக் காட்சியை நினைவூட்டியது. 'சின்னக் குழந்தையின்..' என்ற பாடல் எத்தனை தடவை கேட்டாலும் இன்பக் களிப்பை ஏற்படுத்தக் கூடியது. இது மட்டுமன்றி, 'அன்புக்கினியவரே...' 'சரிய ஆற்றைக் கடந்து வந்து...' 'தென்காற்றே...' முதலிய பாடல்கள் தெவிட்டாத செவி நுகர் கனிகளே.



இவரைச் சுற்றியே நம் கவனம் குவிகிறது. இடையிடை தோன்றும் கவிஞரின் பாடல்கள் துறவியின் மனோபாவத்திற்கு மாறாக, அவரது கருத்தை மறுதலித்தும் வாழ்வின் சுகங்களை வலியுறுத்தியும் எதிர்வினை புரியும் காட்சிகளை மையக் கருத்துக்கு வலுச் சேர்ப்பதுடன் மகாகவி தாகூராகவே அவரை முன்னிறுத்துகின்றன. வரட்டுத் தத்துவம் பேசும் துறவி ஒரு புறமும் வாழ்வு மறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு வாழத் துடிக்கும் அன்புக்கு ஏங்கும் சிறுமி மறுபுறமுமாக இருக்கும் இரு துருவங்களை இடையிடை வரும் கவிஞர் எதிர்வினை புரிந்து தெளிவுபடுத்தி நாடகத்தின் மையப் புள்ளியை நோக்கி நகர்த்தும்

அவளது அருகாமையும் ஸ்பரிசமும் புயலையும் வென்ற துறவியை நிலைகுலைய வைக்கின்றன. தன்னை வெல்லத் துணிவின்றித் 'தொடராதே'. 'எங்கிருந்து வந்தாயோ அங்கு திரும்பிப் போய்விடு.' என அவளை விரட்டும் வார்த்தைகள் சீதையின் அர்த்தம் பொதிந்தவை. அவள் பலவாறு கூறி விம்மியழுதும் துறவி அவளை விட்டுப் பிரிந்து செல்கிறார். இசையின் குழைவு அவளுடன் கரைந்து எம்மைக் கசிய வைக்கிறது. 'தந்தையே...' பாடலும் அவளைப்போல் ஏங்கி எம் உயிரைப் பிசைந்து பிழிகிறது.

இசைக் கருவிகள், பாடல், ஒளி, ஒலி என அனைத்தும் ஒன்று திரண்டு உச்சத் துக்குச் சென்று உணர்ச்சிப் பிரவாகத்தில் ஆழ்மனதைப் புரட்டிப் போடுகின்றது. திடீரென வெடித்த தொடர்குண்டுகளின் அதிர்வால் நாமும் நாடகமும் உச்சத்தில் அந்தரத்தில் அலைவுறுகின்றோம் சில கணங்களில் துறவியைப் போலவே திடீரென்று நிலத்தில் கால் பதித்துச் செய்வதறியாது திகைக்கிறோம்.

“தாமரை மலர்ந்த அந்த நாளன்று எனது கூடை வெறுமையாய்க் கிடந்தது. கவனிப்பாரற்றுக் கிடந்தது அம்மலர்...” என்ற கீதாஞ்சலிப் பாடல் அத்தருணத்திற்கு அற்புதமாய்ப் பொருந்தி உணர்வழியச் செய்தது. பழக்கப்படாததோர் நறுமணம் ஒன்றின் இனிய தடமொன்றை உணரத் தொடங்குகிறார் துறவி. இடைச் சிறுவனது பாடலும் அவரது தாபத்தினை வெளிப்படுத்த உதவுகின்றது. துயிலகற்றிய சிறுதொடுகையும் பின்தொடர்ந்த விம்மல்களும் அவரை இவ்வுலகுக்கு மீள அழைக்கின்றன. தெய்வத் திருவினையொத்த அவள் ஸ்பரிசம் அவரைச் சுயதேடலுக்கு இட்டுச் செல்கிறது. பந்த பாசமற்ற தனிப் பெரும் ஒருவனாய்த் தலை நிமிர்த்தி நின்ற அவர், தான் தொலைத்த காலத்தை எண்ணித் துயருறுகின்றார். ஆர்ப்பரிக்கும் உரத்த வார்த்தைகள் வெளிவராது ஆழ்ந்த சிந்தனையுடன் 'அன்பே உண்மையானது. அவளே மெய்ப்பொருள்' என்பதை உணர்ந்து அவளைத் தேட முற்படுகின்றார். நாடகத்தின் சாராம்சம் பாலிடை வெண்ணெயாய் மேற்கிளம்பத் தொடங்குகின்றது. 'துறவு', 'வாழ்வு' என்பதன் அர்த்தங்கள் உயிர்பெற்று நடனமாடுகின்றன.

'ஒரு முறை போய்விட்டதை என்றுமே மீளப் பெற முடியாது.' என்பது தெளிவாக, அவர் மேலும் மேலும் விடாப்பிடியாய்த் தேடிக் கொண்டே செல்வது 'வாழ்க்கை இழக்கப்பட முடியாதது. அது வாழ்வதற்குரிய ஒன்று' என்ற கருத்தை அறுதியிட்டு நிறுத்துகிறது. 'வழியில் வரும் முதியவரிடம் விசாரிக்கிறார். ஊரை விட்டவள் போனதால் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் எங்கு சென்றாலும் அவளுக்கு ஒன்று தான் என்றும் மிகவும் அசட்டையாகக் கூறுகின்ற முதியவரின் வார்த்தைகள் மனித இருப்பும் இழப்பும் எவ்வாறு மலினப்படுத்தப்படுகின்றது என்ற சமூகத்தின் பொதுப் புத்திக்கும் அதற்கு மாறாக 'அவளிறந்தால் எல்லோருக்கும் அது மரணமாகி விடும்' என்றும் 'மோட்சங்கள் யாவினதும் பெருஞ் சிறப்பாகக்' கொண்டாடி மரணம்வரை இறுகப் பற்றிக் கொண்ட துறவியின் 'அளப்பருங்கருணை' அவ்வுயிருக்குக் கிடைத்த கௌரவமாகவும், இருப்பின் அடையாளமாகவும் வெளிப்படுகிறது. இவ்விடத்தில் நாடகம் தன் கருவுக்குள் மீண்டும் நுழைகிறது.

அறுசுவை விருந்தாய் அழகியல் ஆனந்தத்தை அள்ளி வழங்கியது 'அளப்பருங்கருணை'.

மலையின் குறியீடாக வரையப்பட்டிருந்த ஓவியம் உட்படக் காட்சிகளுக்கிடையே வந்த மூங்கில் காடு, நடுநிசி நட்சத்திரங்கள், துறவியின் துளிர்விடும் மெல்லுணர்வுக்கான பின்புல ஓவியங்கள்.. என எல்லாம் கலை முழுமைக்கான எத்தனங்களாகத் திகழ்கின்றன.


நாடகத்தின் பேசுபொருளை உட்செரித்து அளிக்கை செய்த கலைஞர்களாக இரு ஆண்கள் உட்பட நடன மாந்தரைக் கையாண்ட சாந்தினி மற்றும் தேவந்தி, இசையமைத்தும் பாடியும் குரல் கொடுத்த றொபேட் உட்பட அனைத்துப் பின்னணி இசைக் கலைஞர்கள், ஓவியங்கள் உட்பட காட்சி, அரங்கமைப்பு, உடையலங்காரம் முதலியவற்றுக்குப் பங்களிப்பாகவிருந்த து. சஞ்சனன் ஆகியோருடன் ஒளி, ஒலியமைப்பில் உதவியோரையும் இவ்விடத்தில் மறந்து விட முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக காட்சிக் கலைவடிவமான இந்நாடகத்தில் அத்தனை கலை ஆளுமைகளையும் ஒரு தளத்தில் ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்தி அரங்கின் அத்தனை நுணுக்கங்களையும் கூர்மையாக அவதானித்தது மட்டுமன்றிப் பார்வையாளர் நிலையிலும் உளவியல்பூர்வமாக அணுகி, சலிப்பேற்படாவண்ணம் இக கலைமுறைப் பரிமாற்றத்தில் சாந்தினியின் பணி அளப்பரியது.

தனிமனித, சமூகத் தவறுகளின் மௌன சாட்சியாய் விழிநீர் சொரிய சோகம் ததும்ப நிற்கும் அந்தச் சிறுமி யுத்தத்தின் விளைவாக வாழ்விழந்து, நிராதரவாய் நாதியற்று நிற்கும் பெண்களின் குறியீடாய் இறுதியில் முன்வந்து நின்றபோது வாயிழந்து சில கணங்கள் ஸ்தம்பித்திருந்தது அரங்கு.

ஒவ்வொரு கணமும் மரிக்கிறதுலகம்
ஆயினும் முடிவை எய்துவதில்லை.

-விமலாதாஸ்

# தொலைவு..!



## சிறுகதை

"பிள்ளை...பிள்ளை..."

முற்றத்தைப் பெருக்கியவாறு, நின்ற தாயின் குரல் அது.

"என்னம்மா?"

கண்களைக்கசக்கியவாறு முற்றத்திற்கு வந்தாள் அம்பிகா.

"விடிஞ்சு எவ்வளவு நேரமாய்ச்சு. எவ்வளவுவேலையள்செய்யக்கிடக்கு தங்கைச்சியாக்களையும் எழுப்பிக் கூட்டிக்கொண்டுபோய் அடுக்களை வேலைகளைச் செய்யனம்மா..."

தாய் பரபரப்பாக இருந்தாலும்... பரிவுடன் வந்த தாயின் ஒவ்வொரு வார்த்தையும்,.. அடிநெஞ்சில் பூத்திருந்த நெருப்பை தணிப்பதாய் இருந்தாலும்... அவளுக்கு இன்றைய ஆரவாரத்திலும் பெரிதாக ஈடுபாடு இருக்கவில்லை.

"சரியம்மா..." என்றுவிட்டு குசினுக்குள்நுழைந்தவள் அடுப்புக்குள் நீறாகிக் குளிர்ந்து கிடந்த சாம்பலை தட்டொன்றில் அள்ளியெடுத்தவளாய்...

"பிரியா! ஆரணி! எழும்பேலையோ இன்னும்... 6.00 மணி ஆகீட்டு.. எழும்புங்கோ."

என குரல்கொடுத்தவளாய் சாம்பலைக் கொட்டினாள்.

"அம்பி... அப்பா எழும்பப் போறார். சாம்பலை அள்ளீட்டால்... அடுப்பை மூட்டம்மா..."

என்றாள் தாய் கற்பகம்

"ஓம் மூட்டுறன்." என்றவாறு தாழ்வாரத்துள் அடுக்குப்பட்டுக் கிடந்த பன்னாடை இரண்டை கிழித்தெடுத்து அடுப்புக்குள் வைத்தாள்.

நெருப்பை மூட்டுவதற்குத் தீப்பெட்டி இருக்கவில்லை.

"அம்மா... நெருப்புப்பெட்டி இல்லையோணை..."

கற்பகத்தின் பதில் வருவதற்கு முன்பாக, தந்தை சிவம், "இஞ்சைவா மோனை.. இந்தப் பெட்டியுக்க பார். இரண்டோ மூண்டு குச்சுகளோட ஒரு தீப்பெட்டி கிடந்ததுபோல..." என்றார்.

தீப்பெட்டியை எடுத்துவந்து, ஒரு குச்சியை உரசி பன்னாடையில பற்ற வைத்துக்கொள்கிறாள் அம்பிகா.

அவளது ஆழ்மனதுள் எரிந்து கொண்டிருக்கும் ஆசைத் தீ உச்சத்தை அடைய முடியாமல் புகைந்து கொள்வது போல பன்னாடையும் புகைந்து புகைந்து மெல்லவே கனன்றது... அம்மாவும் அப்பாவும் ஏதோ நம்பிக்கையில் தான் இருக்கிறார்கள்... ஆனால், அவளுக்கென்னவோ... இன்டைக்கு நடக்கப்போகிற விசேஷத்திலும் முழுசா நம்பிக்கை வந்தமாதிரியில்லை...

அவள் அழகில குறைந்தவளில்லை. அறிவிலும் குறைந்தவளில்லை. பண்பிலும் குறைவில்லை. இருந்தாலும் அவளுக்கு வாழ்க்கை ஒன்றை அமைத்துக்கொடுப்பது என்பது சிவத்துக்கும் கற்பகத்துக்கும் கல்லில் நார் உரிக்கின்ற விடயமாகத்தான் இருந்தது.

அவளின் இளமைக்கனவுகள், ஆசைகள்... அது தன்பாட்டிற்கு கனல்வதும் அணைவதுமாய்... அந்த அடுப்பின் நெருப்பைப்போல... காலம் நகர்த்திச் செல்கிறது அதை.

சிவத்துக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவன் மத்தியகிழக்கு நாடொன்றில் பணிபுரிகிறான். போய் கொஞ்ச நாட்கள் தான்... அடுத்தது அம்பிகா. அதற்கடுத்ததும் இரண்டு பெண்குழந்தைகள்.

சிவம் சிறந்த ஒரு விவசாயி. கால நேரம் பாராது உழைத்து, உழைத்து தேய்ந்து போனவர். யுத்தம் தந்த பரிசு, அவரது உரமேறிய கரங்களும் ஓடித்திரிந்த கால்களும் இப்போ மூன்று சில் வண்டிக்குள் முடங்கிப்போய்விட்டது.

அண்ணன் ஒருவரது உழைப்பில் ஐவர் பசியாறவேண்டிய நிலை உருவானது.

தாய் கற்பகம், ஆடு, மாடு கோழி என வளர்த்து அவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தையும் கொண்டு சிக்கனமாக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தாள்.

உழைத்த கரங்கள் ஓய்ந்துகிடக்காது என்பதற்கு முன்னுதாரணமாய்... சிவம் விளக்குமாறு, தும்புத்தடி தயாரித்துக்கொடுக்க, கற்பகம் அதனை தலைச் சுமையாய் கொண்டு சென்று ஊர்க் கடைகளுக்குப் கொடுத்து வருவாள் அப்பப்போ.

நட்டுவைத்திருந்த இளம்தென்னம் பிள்ளையளை யுத்த முடிவில அவங்கள் கொண்டுவந்துவிட்ட யானைகள் அழிச்சுப்போட்டுதுகள்... நிண்ட ஒன்றிரண்டு பெரியபிள்ளைகளும் சோடையடிச்சுப்போய்.. ஒன்றிரண்டு ஒல்லிக் காய்களோட காற்றில ஆடிக்கொண்டிருக்கு.

முற்றத்தில நின்ற எந்தப் பழமரமும் இப்ப இல்லை...பங்குனி வெயில், அதுபாட்டுக்குக் கொழுத்தக்கொண்டிருக்கு. சிவம் ஞாபகங்களில் மூழ்கினார்.

கர்ப்பகம் கணவருக்கு ஞாபகப்படுத்தினாள்...

"என்னப்பா அந்தப் புரோக்கரை பிறகு இங்கால காணேல்லை...

இந்த புரட்டாதியோட அம்பிக்கு முப்பது வயது முடியப்போதப்பா... இப்பவும் எங்களாலலே ஒரு ஏற்பாடும் செய்யமுடியாமல் இருக்குதப்பா..."

"நானும் அதுதான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன்... சண்முகம் புரோக்கர்த்திணைகொண்டந்திட்டார். ஆனால்.. அவங்கள் கேக்கிற இவ்வளவுகாசை எப்படியப்பா புரட்டுறது...எனக்கு நித்திரையேவருகுதில்லை..."

'குமர் முத்திக் குரங்காகிறது' என்று சொல்லுறது... வீட்டில குமர் வாழாமல் இருக்க, எப்படி நித்திரை வரும். அம்பிகாவுக்கு எத்தனையோ குறிப்புகள் பொருந்திவந்தாலும், சீதனப் பிசாசு அவளது திருமணத்துக்குத் தடை போட்டது.

"இஞ்சர் சிவமண்ணை, நீங்களும் இந்த நிலைமையில இருக்க என்னாலையும் ஒண்டும் சொல்லேலாமல் இருக்கு. நானும் இயன்றவரை கதைச்சுப் பார்த்தன். இருபதைவிட ஒரு ரூபா குறைஞ்சாலும் வேணாமாம். தொடக்கத்தில முப்பது கேட்டவையள். நான், கதைச்சு ஒரு மாதிரியாக இவ்வளவத்துக்குக் குறைச்சு, சம்மதிக்க வைச்சனான். மாப்பிள்ளை பிறைவேற் கொம்பனியொன்றிலை வேலை."

கடந்த வாரம் வீட்டிற்கு வந்த புரோக்கர், சண்முகத்தைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள் அவை.

மகன் முரளியிடம் கதைத்த பொழுது, "அப்பா! ஒரு பத்துலட்சம் என்டால், என்னோட நிக்கிற சினேகித பெடியளிட்டை கேட்டு ஒழுங்குபண்ணலாம்... இருபது எடுக்கிறது இப்போதைக்கு முடியாது. நான் இந்த நாட்டை விட்டு சுவிஸ் அல்லது கனடாவுக்கு மாறலாம் என்றிருக்கிறன். அப்படி மாறினால் தானப்பா சாத்தியப்படும். அதுக்கும் பணந்தானேயப்பா செலவு.."

மகன் சொல்வதிலும் ஞாயமிருப்பதாகவே தந்தையும் தாயும் எண்ணிக் கொண்டனர்...

அடுத்து ஒருவழியையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை... அம்பியும் குடும்பகௌரவத்துக்குளுந்தப் பங்கமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பவள். தன்பாட்டுக்கு ஒரு வழிதேடி, சிக்கிச்சீரழிஞ்சு அதுக்குப்பிறகு அம்மா! அப்பா! என்டு வாறது... எல்லாம் அவளுக்கு சுத்தமாக பிடிக்கவில்லை...

"சிவமண்ணை! ஏதோ பார்த்துச் செய்யுங்கோ. அம்பிகாவுக்கும் வயசு போய்க்கொண்டிருக்குது. இப்ப அழகிருக்கேக்கை ஓமெண்டு சொல்லுறவையளும் பிறகு ஓமெண்ண மாட்டினம். ஏதோ உங்கடை முடிவு."

"நீ சொல்லுறதும் சரிதான் சண்முகம். என்னாலையும் ஒண்டும் செய்யேலாமல் இருக்கு... கிடந்த நகைநட்டை வித்துச்சுட்டுத்தான் முரளியை வெளி நாட்டுக்கு அனுப்பினது..."

"அது சரிதான் அண்ணை... அப்ப இப்படியே பொடிச்சியை வைச்சு என்ன செய்யப்போறியள்? எனக்கே கவலையாக்கிடக்கு... எத்தனை தடவை எத்தனை பேர் வந்துவந்து பார்த்துப் போற..."

வேலியோரமாய் சாத்திக்கிடந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு சண்முகம் புறப்பட்டுப் போய்விட்டார்.. அன்று வந்திருந்த புரோக்கர்.

அதன் பிறகு உதித்த ஞானத்தில தான் சிவமும் கற்பகமும் இந்த ஏற்பாட்டுக்கு வந்தவையள்.

குடியிருக்கும் காணியை ஈட்டில விடுவதுதான் அந்த ஏற்பாடு.

மாப்பிள்ளை பகுதிக்கு இந்தகிராமப் புறத்து சின்ன வீடுவளவு வேண்டாமாம் நகையும், இருபது லட்சம் பணமும் என்றால் சரியெண்டதில- குடியிருக்கிற காணியை ஈட்டில வைத்துவிட்டு, மகன் புரட்டித்தாற பணத்துல நகையை வாங்கி கல்யாணவீட்டுச்செலவையும் பாக்கிறது எண்டுதான் திட்டம்...

இன்றைக்குப் பெண்பாக்கும் படலம்... மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க சம்மதித்து, சிவத்தின் வீட்டிற்கு வருவதற்கு ஒப்புக்கொண்டதாக சண்முகம் கூறியிருந்தார்.

அதுதான் கற்பகம் பரபரப்பாய் இருக்கிறாள்.

சிவமும் உற்சாகமாய் இருக்கிறார்.

தடல்புடலாக வேலையில் இருந்த கற்பகம், முழுகித் தோய்ந்து வந்து நின்ற அம்பியிடம் "மச்சாளைக் கூப்பிட்டு கெதியாய் வெளிக்கிடு பிள்ளை" என்று அதட்டினாள்.

வெயிலும் ஏறிக்கொண்டுவந்தது. சண்முகம் தனது தொலைபேசியை வைத்து பேசுவதும் பிசைவதுமாக இருந்தார்.

"...என்ன சண்முகம் பத்தரைக்குள்ள வந்துவிடுவினம் எண்டீர்... நேரமும் பன்னிரண்டாகுது..." சிவத்தின் மனதில் ஒருவித சங்கடம். சிலசமயம் வருவதாகக் கூறிவிட்டு வராமல் விட்டால்...

"இல்லையண்ணை. மாப்பிள்ளை *ஒவ்வீசுக்கு* கட்டாயம் போகவேண்டியிருக்கு... பன்னிரண்டு மணிக்குள்ள வந்திடுவாராம் என்டுதான் பிறகு சொன்னவையள்...

வந்திடுவினம் பாப்பம்..."

"போனில கதையுமென் என்ன ஏதெண்டு.."

"மாப்பிள்ளையின்ரை போன் ஓவ்இல இருக்கு அண்ணை... தகப்பன்ரை போனுக்கு எடுத்துப் பார்ப்பம்...

*றிங்* போகுதண்ணை *ஆன்சரைக்* காணேல்லை..."

காத்திருப்புத் தொடர்கிறது...

சண்முகம் நேரில் சென்று பார்த்து வருவதாகப் புறப்பட்டார்.

சலிப்படைஞ்சு உட்காந்திருந்த அம்பிகாவோ...தாயை அருகில் அழைத்து, "அம்மா இனி எனக்கு கல்யாணம் வேண்டாம். நான் இப்படியே இருக்கிறன். ஆசைகள் அணைஞ்சுபோயிருக்கிற என்ரை மனசை கிளறிக்கிளறி எரியவிட்டு வேடிக்கை பார்க்கிற இந்த உலகத்தில... கன்னியாகவே இருந்திடுறது மேலம்மா...

ஒரு நல்ல வாழ்க்கை அமைகிறது என்பது ஏழைகளுக்கு கனவுதானம்மா..." சுற்றியிருந்த உறவினர் மௌனமாகினர்...

அழகுப் பதுமையாக வீற்றிருந்த அவளின் விழிகளில் இருந்து கசிந்த நீர்த்துளிகள் கன்னத்தை நனைக்க முன்பு, கைக்குட்டையால் அவற்றை அழுத்தித்துடைத்துக்கொண்டு அவள், சுவரோடு சாய்ந்துவிட்டாள்.

உதடுகள் பிரியாமல், அவள் நெஞ்சுக்குள் எவ்வளவோ கேள்விகள்.

'வருவார்கள்... பார்ப்பார்கள்.. போவார்கள்...?

சந்தைக்கடையில பார்வைக்கு அடுக்கப்பட்ட அழகுசாதனப் பொருட்களா? அல்லது விளையாட்டுப் பொருட்களா பெண்கள்?

இறைவா... பெண்களுக்கு மட்டும் தானே இந்தநிலை... தாலிக்கு ஏங்கும் கழுத்து... குங்குமத்துக்கு ஏங்கும் நெற்றி...

பணம் பெரிதாகிவிட்ட உலகத்தில் என்னத்துக்குத்தான் அர்த்தமிருக்கிறது?

எங்கேதான் அர்த்தமான வாழ்விருக்கிறது?

மனதுள் பல்லிகளின் நச்சரிப்பாய் நாளும் மனதை அழுத்தும் எத்தனை துயரங்கள்...

இப்படியொரு வாழ்வைவிட சாவு மேலானது என நினைத்துத் துடிக்கும் கணங்கள்...

எனக்காக இல்லையானாலும் என் குடும்பத்தாருக்காகவேணும் தோற்றுப்போகாமல் வாழவேணும் என்ற அற்புதமான சிந்தனை...' எல்லாம் அவளை வளையம்போட்டு ஆக்கிரமித்தன.

புரோக்கர்... வந்தார்.

"என்ன புரோக்கர் வருகினமோ இல்லையோ?" சிவத்தின் குரலில் சற்று கனதியிருந்தது.

அஸ்தமித்துக்கொண்டிருக்கும் இளமைக் கனவுகளை மீளுருவாக்கம்செய்ய இப்படி இன்னும் எத்தனை தந்தையர்கள் துடிப்பார்கள். பொம்பிளைப் பிள்ளைகளைப் பெற்றவனுக்குத்தான் அதுகளின்ரை அருமை பெருமை தெரியும். மனதுள் நொந்து கொண்டார் சிவம்.

புரோக்கர் மௌனமாய் கதிரையில் சாய்ந்தார்...

விடயத்தை எப்படி... சிவத்திடம் சொல்வது என்பதுதான் அவரின் தயக்கம்.

'மாப்பிள்ளை அலுவலகத்திலேயிருந்து இன்னும் வரவில்லை... அவரோடை வேலை செய்கிற யாரோ இன்டைக்குத்தான் வேறையொரு பெண்பிள்ளையின்ரை படம்கொண்டு வந்து காட்டினவையாம்.

அந்தப்பிள்ளை அம்பியைவிட வடிவாம் நிறமாம். காசும் ஐம்பது லட்சம் தாறனெண்டவையாம். பெண்ணும் அரசாங்க உத்தியோகம் பார்க்குதாம்...மாப்பிள்ளை தகப்பனோட போனில விடயத்தை சொன்னவராம்...'

'மாப்பிள்ளை அந்தப் பக்கம் விழுந்திட்டார்' என்று எப்படிச் சொல்லுறது...?

சண்முகம் ஒருவாறாக சிவத்தை நெருங்கினார்...

சின்னச் சின்னதான கோடுகளாய் முகிழ்ந்த ஆசைகள், முழு வடிவம் பெற்று, இன்றாவது ஒரு மலராக மலர்ந்துவிடும் என்ற காத்திருப்பு மெல்ல மெல்ல கலைந்து கொண்டிருந்தது.

அவன் எப்படி இருப்பான்? எதைக் கதைப்பான்? என்ன சொல்வான்- நிச்சயம் சம்மதம் சொல்வான்... இரங்காத கல்மனது அவனுக்கும் இருந்துவிடாது..

இவ்வாறு சிறகு கட்டிப் பறந்த சிட்டுக்குருவி சுவரோடு சாய்ந்து கிடந்தது. கண்ணீர்க்கோடுகள், அவள் கன்னங்களில், நெஞ்சக் கனலின் தீக்காயங்களை வரைந்துகொண்டிருந்தன...

அருகிருந்தவர்களது விழிகளோ படலையையும் தாண்டி தொலைவாய்.. இன்னும் மிகத்தொலைவாய்.. எங்கோ எதையோ ... தேடின..!

மல்லாவி கஜன்



# தனது மரணச் செய்தியை வானொலியில் சுபாஸ் சந்திரபோஸும் கேட்டார்..!

உத்தரப்பிரதேசத்தின் ஆசம்கர் மாவட்டம், முபாரக்பூர் வட்டம், டக்கோவா கிராமம். இங்கேதான் இருக்கிறார் சைபுத்தீன் என்கிற நிஜாமுதீன். அவர் வைத்திருக்கும் பழைய பர்மா பாஸ்போர்ட்டின்படி இப்போது அவருக்கு வயது 115. சுபாஷ் சந்திர போஸின் வாழ்க்கையோடு பயணித்தவர்களில் முக்கியமான நேரடி சாட்சியங்களில் ஒருவர். அவருடைய மெய்க்காவலர்களில் ஒருவர். போஸ் சம்பந்தமான ஆவணங்களை மம்தா பானர்ஜி அரசு வெளியிட்டது நாடெங்கும் பரபரப்பை உண்டாக்கியிருக்கும் சூழலில், நிஜாமுதீன் பகிர்ந்துகொள்ளும் செய்திகள் போஸ் தொடர்பான மர்ம முடிச்சுகளை மேலும் அவிழ்க்கின்றன.

**சுபாஷ் சந்திர போஸிடம் நீங்கள் பணியில் சேர்ந்தது எப்படி?**

பிழைப்புக்காக தம் குடும்பத்துடன் சிங்கப்பூர் சென்றுவிட்ட எனது தந்தை அங்கு ஒரு உணவு விடுதி நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கு ஆண்ட பிரிட்டிஷ் அரசு என்னுடன் சேர்த்து பல இளைஞர்களை பலவந்தமாக தம் படையில் சேர்த்து கொண்டது. அந்தப் பணியின் போது 1943ஆம் ஆண்டு ஒரு ஆங்கிலேய மேஜர் ஜெனரல், "படை வீரர்களில் எத்தனை பேர் இறந்தாலும் கவலை இல்லை. ஆனால், பொதி சுமக்கும் ஒரு கோவேறு கழுதை கூட பலியாகிவிடக்கூடாது. ஏனெனில், நம் சுமைகளை தூக்கும் அவை இந்தியர்களைவிட முக்கியமானவை!" என அறிவித்தது எங்கள் மனதை மிகவும் புண்படுத்தி விட்டது. இதற்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த எங்கள் முகாமினர் சில ஆங்கிலேயர்களை சுட்டு வீழ்த்திவிட்டு படையை விட்டு வெளியேறி விட்டோம்.

அப்போது சிங்கப்பூரின் கேத்தோ எனும் அரங்கில் இந்திய தேசியப் படையின் தலைவராகப் பதவி ஏற்ற சுபாஷ் சந்திரபோஸ் ஜியிடம் சென்று இணைந்து விட்டோம். அங்குதான் இந்தியாவின் சுதந்திர கீதம் முதன் முறையாக இந்தியில் பாடப்பட்டது. இதில் அவர் எனது ஆஜானுபாகுவான உடல் அமைப்பை பார்த்து என்னை தமது மெய்க்காப்பாளர்களில் ஒருவராக வைத்துக் கொண்டார். ஆங்கிலேயரிடம் இருந்து தப்ப வேண்டி, சைபுத்தீன் எனும் எனது பெயரை நிசாமுத்தீன் என மாற்றிக்கொண்டேன். பிறகு தம் படைக்கு ஆதரவு கேட்க வேண்டி நீர்மூழ்கி கப்பலில் ஜெர்மன் சென்று ஹிட்லரை சந்தித்தோம். அடுத்து ஜப்பான் சென்று அதன் ஜெனரல் தோஜோவையும் சந்தித்தோம். சிங்கப்பூரின் அருகிலுள்ள ஒரு தீவின் ராஜாவான சுல்தான் என்பவரை நேதாஜியுடன் சந்திக்க சென்றபோது அவர் 12 சிலிண்டர் கொண்ட லேங்கிங் ஜாபர் எனும் காரை பரிசாக அளித்தார். கப்பலில் பர்மாவின் காட்டுக்குக் கொண்டு வரப்பட்ட இந்த காரை முதன் முதலில் ஓட்டத் தொடங்கிய நான் அவரது ஆஸ்தான ஓட்டுநராகவும் ஆகி விட்டேன்.

**பர்மாவில் போஸ் தன் படை அமைத்த விதம் மீது உங்கள் நினைவில் உள்ள வற்றை கூறுங்களேன்?**

பர்மாவில் முதல் வேலையாக பல சுரங்கப்பாதைகளை அமைத்தார் போஸ். பல்வேறு வழிகள் கொண்ட இவற்றில் நுழைந்து பர்மாவின் அடர்ந்த காடுகளில் தப்பி விடும்படியாக அவை அமைக்கப்பட்டன. இந்த சுரங்கங்கள் வழியாக இரவு நேரங்களில் கிளம்பி ஆங்கிலேயர்கள் மீது திடீர் தாக்குதல் நடத்திவிட்டு அவர்கள் ஆயுதங்களைப் பறித்து வந்தோம். இவற்றில் எம்மை பொதுமக்கள் அடையாளம் கண்டால் ஆதரவு தர வேண்டி இந்திய தேசியப் படையின் சீருடைகளை அணிந்தோம். இதற்கு நாம் எதிர் பார்த்ததை விட அதிகமாக பொது மக்கள் பெரும் ஆதரவு அளித்து பல்வேறு வகையான உதவிகள் செய்தனர். அடர்ந்த காடுகள் நிறைந்த நாட்டின் எல்லையாகவும், அருகில் சீனாவும் இருந்தமையால் போஸ், தாய்லாந்துக்கு அடுத்தபடியாக பர்மாவையும் தம் படையின் தலைமையிடமாக அமைத்தார்.

**நீங்கள் நேதாஜியிடம் கண்ட சிறப்பான குணநலன்கள் என்ன?**

சாதி, மத பேதம் இன்றி நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வை முதலில் ஊட்டியவர் போஸ். இவர், தமக்கு எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டாலும், கவலைப்படாமல் புன்முறுவலுடன் அமைதி காப்பார். அவர் கோபப்பட்டதை நான் ஒருமுறை கூடப் பார்த்ததில்லை. எங்கள் படையிலும் ஆங்கிலேயர்களுக்காக உளவு பார்த்த சிலர் இடம் பெற்றிருந்தனர். இதில் ஒருவர் எங்களுக்கு தேநீர் அளிக்க வந்துவிட்டு எங்கள் பேச்சை ஒட்டு கேட்டதை நான் பார்த்து விட்டேன். அவரை உடனடியாக எனது துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தி விட்டேன். இதைக் கண்டு போஸ் அமைதியாக, ""நீ அவசரப்பட்டு விட்டாய்! உளவு பார்த்தவனை உயிரோடு பிடித்து பேசியிருந்தால் அவன் மனம் திருந்தியிருக்க வாய்ப்பு கிடைத்திருக்கும். அவன் வீணாக தன் உயிரையும் இழந்திருக்க மாட்டான்."" எனக் கூறினார்.. இந்த உளவாளி ஏற்கெனவே சில முறை நாம் தாக்குதல் நடத்து சென்றபோது "விசில்" அடித்து ஆங்கிலேயருக்கு காட்டிக் கொடுத்தான். இதனால், அங்கு நாம் தாக்கப்பட்டு பின்வாங்கிய போதும் அந்த உளவாளி, எதேச்சையாக விசில் அடித்திருக்கலாம் எனக் கூறி எங்களை அமைதி காக்க வைத்தார்.

நேதாஜி தினமும் மாலை 4.00 மணிக்கு தம் படை வீரர்கள் இடையே நிகழ்த்திய தேசபக்த உரை மிகவும் உணர்ச்சிகரமானது. நாங்கள் நடத்தும் தாக்குதலில் காயம்பட்ட அல்லது உயிரிழந்தவர்களை அக் களத்தில் இருந்து தூக்கிக் கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தவர். முழு இரவிற்கும் நேதாஜி ஒரே இடத்தில் உறங்க மாட்டார். பாதுகாப்பு கருதி, குறைந்த பட்சம் இரு இடங்களுக்கு மாறுவார். அவருடன் செல்லும் எங்களுக்கு உரிய நேரம் உறக்கம் கிடைக்கும்படி பார்த்துக்கொள்வார்.

**அவரிடம் பணி செய்த போது நீங்கள் இன்னும் மறக்காத நிகழ்ச்சி சிலவற்றை கூற முடியுமா?**

நேதாஜியுடன் படைகளில் உதவி புரிய வந்த ஜப்பானியர்கள் முக்கியமானக் கட்டங்களில் முன்னே சென்று போரிடாமல் பின் வாங்கி கொண்டனர். அங்கு இந்தியர்களே முன் வரிசையில் போரிட வேண்டியதாயிற்று. நேதாஜி இறுதியாகப் போரிட்ட மணிப்பால் போர் மறக்க முடியாதது. இதில் நதியைக் கடக்கும் போது ஏற்பட்ட மழையின் காரணமாக் நாம் அதிகம் பேர் பலியானோம். இத்துடன் எங்களுடன் போரிட்ட பெண் வீராங்கனைகளை காப்பதிலும் பாதிப்பு அதிகரித்தது. இவை அனைத்தையும் மீறி நாம் ஆங்கிலேயப் படையினரில் அதிகமானவர்களை வீழ்த்தி இருந்தோம்.

**போஸுடனான உங்கள் கடைசி சந்திப்பை நினைவு கூற முடியுமா?**

பதில்: கடைசியாக நேதாஜியை நான் 1947 ஆம் ஆண்டு, (மாதம் நினைவில் இல்லை) பர்மாவின் சித்தான் நதியில் தயாராக இருந்த படகில் ஏற்றி அனுப்பி வைத்தோம். இந்த நதியின் இருகரைகளிலும் வளர்ந்திருந்த அடர்ந்த மரங்கள் அதில் பயணம் செய்பவர்களை மேலிருந்து யாரும் பார்த்திடா வண்ணம் மறைத்து விடும். இதற்காக லேங்கிங் ஜாபர் காரில் கொண்டு சென்றதுதான் நாங்கள் அவருடன் நடத்திய கடைசி சந்திப்பு ஆகும். மிகவும் குறுகலான நதியான அது இந்திய எல்லையில் உள்ள கடலில் போய் கலக்கிறது. அங்கு அவரை எங்கோ அழைத்துச் செல்ல ஒரு நீர்மூழ்கிக் கப்பல் தயாராக இருந்ததாகக் கூறப்பட்டது. சித்தான் நதிக்கரையில் நேதாஜியை நாம் விட்ட சில நிமிடங்களில் நின்றிருந்த கார் மீது மேலே பறந்து வந்த போர் ஜெட் விமானம் குண்டு வீசிவிட்டு பறந்து சென்றது. இதனால், அந்தக் கார் வீணானதுடன், அதில் இருந்து ஒருசிலரும் உயிர் இழந்தனர். நாங்கள் மட்டும் அதிர்ஷ்ட வசமாக தப்பிவிட்டோம்.

**அப்போது போஸுடன் படகில் சென்றவர்கள் யார் எனக் கூற முடியுமா?**

அவரது மெய்க்காப்பாளராகவும், உதவியாளராகவும் பணியாற்றி வந்த சுவாமி என அழைக்கப்பட்ட ஒரு மதராஸி இருந்தார். சுமார் 10 ஜப்பானிய மற்றும் சில சீக்கிய வீரர்களும் அந்த படகில் போஸுடன் சென்றனர். நானும் அவருடன் வரும் விருப்பத்தை தெரிவித்தேன். இதற்கு மறுத்த போஸ், 'நீ என்னுடன் வர வேண்டாம். நான் மீண்டும் உங்களை வந்து சந்திப்பேன். நீ இங்குள்ள நம் படை வீரர்கள் அனைவரையும் பாதுகாப்பாக இந்தியாவுக்கு அனுப்புவதில் மற்றவர்களுடன் சேர்ந்து உதவியாக இரு. நம் படை மற்றும் போர்களின் மீதான அனைத்து ஆதாரங்களையும் அழித்து அப்பாவி பொதுமக்கள் போல் நடந்து கொள்ளுங்கள். இல்லையேல், இந்தியாவில் நீங்கள் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் உங்கள் அனைவரையும் கைது செய்து கொன்று விடுவார்கள்' என எச்சரித்து சென்றார்.

**போஸ் உங்களை விட்டுச் சென்றபின் நடந்தது என்ன?**

அவர் கூறியதை போலவே நாம் தலைமையிடத்தின் பெரும்பாலான தஸ்தாவேஜ்களை அழித்தோம். எங்களிடம் இருந்தவற்றையும் எரித்தோம். பிறகு பலரையும் கப்பலில் பாதுகாப்பாக இந்தியா அனுப்பி வைத்தோம். இதனால், நானும் எனது இந்திய தேசிய படையின் அடையாள அட்டை ஒன்றை தவிர அனைத்தையும் எரித்து விட்டேன். பிறகு, பர்மாவின் தலைநகரான ரங்கூனுக்கு வந்து அங்கிருந்த சீனா நாட்டு வங்கியில் ஓட்டுநர் பணியில் இணைந்து பணியாற்றி வந்தேன். பிறகு மண முடித்து எனது குடும்பத்தாருடன் 1965-ல் நான் சொந்த கிராமமான இங்கு குடும்பத்துடன் வந்து தங்கிவிட்டேன். ஆங்கிலேயருக்கு பயந்து நான் நேதாஜியின் படையில் செய்த பணி குறித்து முற்றிலும் மறைத்துவிட்டேன். பிறகு கான்பூரில் வாழ்ந்து வந்த எங்கள் படையின் முன்னாள் பெண் கமாண்டர் லஷ்மி சேகாலை 2005 ஆம் ஆண்டு சந்திக்க சென்றபோது எனது விஷயம் முதன் முறையாக வெளியாகிவிட்டது.

**சுதந்திரத்திற்கு பின் ஆங்கிலேயர்கள் உங்கள் படையினரை தேடும் முயற்சியில் ஈடுபட்டார்களா?**

பெரும் முயற்சியில் ஈடுபட்டனர். நாள தோறும் வீடு வீடாகச் சென்று ஒளிந்திருக்கும் எங்கள் படையினர் பிடிபட்டால் அவர்களைப் பிடித்து அடித்துக் கொன்று காட்டில் வீசினர். ஜப்பானியர்களை மட்டும் கொல்லாமல் சிறையில் அடைத்தும், துப்புறவுப் பணிகளிலும் ஈடுபடுத்தினர். பிறகு ஒரு கட்டத்தில் அனைவரையும் ஒரே சமயத்தில் விடுதலை செய்து ஜப்பானுக்கு அனுப்பி வைத்ததன் காரணம் இன்று வரை எனக்கு புரியாமல் உள்ளது. இதில், எனது சந்தேகம் என்னவெனில், நேதாஜிக்கு ஆதரவளித்து வந்த ஜப்பானின் பிரதமர் தோஜோவுடன் ஆங்கிலேயர்களுக்கு ஏதாவது ரகசிய உடன்படிக்கை ஏற்பட்டிருக்கலாம்.

**ஆகஸ்ட் 18, 1945-ல் போஸ் விமான விபத்தில் மறைந்ததாக வெளியான செய்தியைக் கேட்டு நீங்கள் எண்ணியது என்ன?**

இந்த தகவல் இந்திய வானொலியில் ஒலிபரப்பானபோது அதை போஸ்ஜியுடன் சேர்ந்து நாம் பலரும் பர்மாவின் காடுகளில் உள்ள முகாமில் கேட்டுக் கொண்டிருந்தோம். இதை கேட்ட போஸ்ஜி, 'பாருங்கள் நான் விமான விபத்தில் இறக்கடிக்கப்பட்டுவிட்டேன்.' எனக் கூறி புன்முறுவல் பூத்தார். அதில் போஸுடன் இருந்ததாக ஹபீர் ரஹ்மான் என்பவர் பெயரும் வெளியானது. இவர், போஸுடன் இருந்த வரையில் ஆங்கிலேயர்களுக்கு உளவு பார்த்ததாக எங்களுக்கு சந்தேகம் இருந்து வந்தது. இந்தியரான அவர் இடையில் காணாமல் போனார். பிறகு ஆங்கிலேயரிடம் "விலை" போனதால் அவரை சாட்சியாக வைத்து விமான விபத்து வெளியிடப்பட்டிருக்கலாம்.

**இதை கேள்விப்பட்ட போஸ், அந்த விபத்து பொய் என்றும் தாம் உயிருடன் இருப்பதாகவும் பொதுமக்களிடம் உண்மையைக் கூற முன்வராதது ஏன்?**

இதன் தெளிவானக் காரணம் எனக்கு தெரியவில்லை. ஆனால், 1945-க்கு பின் உலகம் முழுவதும் காலனி ஆதிக்கம் முடிவிற்கு வரத் தொடங்கியது. இதனால், நம் நாட்டில் இருந்தும் ஆங்கிலேயர்கள் வெளியேறி விடுவார்கள் பிறகு நாம் இந்தியா திரும்பலாம் என போஸ் காத்துக்கொண்டிருந்தார். ஆனால், அவரை திரும்பினால் தாம் பதவியில் அமர முடியாது என சில காங்கிரஸார் திட்டமிட்டு சதி செய்யத் துவங்கினர். நேரு, காந்திஜி மற்றும் ஆங்கிலேயர்களுக்கு இடையே சுதந்திரம் அளிப்பதற்கான ஒப்பந்தத்தில் நாடு திரும்பும் ஆங்கிலேயரிடம் போஸ்ஜியை ஒப்படைக்க வேண்டும் என்றானதாகவும் அவருக்கு ஒரு தகவல் கிடைத்திருந்தது. இதனால், வேறு வழியின்றி போஸ், பர்மாவில் இருந்து வெளியேறி தப்பும் முயற்சியில் இறங்க வேண்டியதாயிற்று. ஏனெனில், அதற்கு சற்று முன்பாக நடந்த இம்பால் போரில் போஸுக்கு ஏற்பட்ட படுதோல்விக்கு பின் ஜப்பானியர்கள் ஆங்கிலேயர்களிடம் சரண் அடைந்து விட்டனர். இதனால், இந்திய தேசிய படை கிட்டத்தட்ட முடிந்து போனது. பிறகு போஸுடன் நாம் பர்மியக் காடுகளில் தலைமறைவாகத்தான் இருந்தோம் எனக் கூறலாம். எனவே, அவர் தலைமறைவு வாழ்க்கைக்கான முடிவு எடுத்திருக்கலாம்.



*-இந்து*

# ஜனநாயகம், மதசார்பற்ற நிலையில் நேபாளத்தில் புதிய அரசியலமைப்புச்சட்டம்



நேபாளத்தில் கடந்த 1994-ம் ஆண்டு முதல மன்னராட்சிக்கு எதிராக மாவோயிஸ்டகள் ஆயுதப் போராடடம் நடத்தி வந்தனர். கடந்த 2006-ம் ஆண்டு அவர்கள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு அரசியலில் இணைந்தனர். இதன் காரணமாக 2008-ம் ஆண்டில் 239 ஆண்டு கால மன்னராட்சி முறைக்கு முடிவு கட்டபபட்டது.

தற்சமயம் இலங்கை எவ்வாறு சீனா, இந்தியாவின் பிடிக்குள் திண்டாடுகிறதோ அதைவிட பன்மடங்கு ஆதிக்கம் இரண்டு பிராந்திய வல்லாதிக்கப் போட்டியாளர்களால் செலுத்தப் பட்டு வருவதுதான் நேபாளம்.

அண்மைக்காலத்தில் பாரிய அடுத்தடுத தான நில நடக்கத்தினால், நினைத்துப் பார்க்க முடியாத அளவு அழிவுகளைச் நந்தித்த நாடு நேபாளம என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



நேபாளத்தில் புதிய அரசியலமைப்பு சட்டம் கடந்த 20-ம் தேதி அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. நேபாளத்தில் ஜனநாயக மற்றும் மதசார்ப்பற்ற நிலையில் புதிய அரசியலமைப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது.

கடந்த 16-ம் தேதி புதிய அரசியலமைப்பு மசோதா தொடர பாக 601 உறுப்பினர்களைக் கொண்ட நேபாள நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. மசோதாவை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், வாக்கெடுப்பில் பங்கேற்ற 532 உறுப்பினர்களில் 507 பேர் ஆதரவாகவும் 25 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.'இதனால் பெரும்பான்மை ஆதரவுடன் அரசியலமைப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டது. புதிய சாசனத்தின்படி நேபாளம் 7 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து புதிய அரசியலமைப்பு சாசனத்தில் **அதிபர் ராம்பரண் யாதவ** கையெழுத்திட்டு அதிகாரப்பூர்வமாக பிரகடனம் செய்தார். இதனால் மன்னராட்சி என்ற முறையில் இருந்து மாறி நேபாளம் மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசு நாடாக உருவெடுத்து உள்ளது.

நேபாளத்தில் புதிய அரசியலமைப்புக்கு எதிர்ப்பும் கிளம்பி உள்ளது. நேபாளத்தில் உள்ள மாதேஸிகளும், தாரஸ் சமூகத்தினரும் கடும் எதிர்ப்பை தெரிவித்து உள்ளனர். நேபாளத்தில் நேபாள காங்கிரஸ் (என்.சி.), நேபாள கம்யூனிஸ்ட் (சிபிஎன்-யு.எம்.எல்.), நேபாள மாவோயிஸ்ட் (யு.சி.பி.என்.) ஆகிய பெரிய கட்சிகள் உள்ளது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மாதேஸி, தாரஸ் சமூகத்தினரின் ஆதரவுபெற்ற பல்வேறு மாதேஸி கட்சிகளும் செயல்படுகிறது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மாதேஸி, தாரஸ் சமூகத்தினர் புதிய அரசியலமைப்பில் தங்களுக்கு உரிய இடம் அளிக்கப் படவில்லை என்றும், தாங்கள் இரண்டாம் தர குடிமக்களாக சித்தரிக்கப்பட்டு உள்ளோம் என்றும் குற்றம் சாட்டிஉள்ளனர்.

நேபாளத்தின் தென்பகுதியில் அதிகம் வசிக்கும் அவர்கள் அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக .போராட்டம் நடத்தி வருகின்றனர். புதிய அரசியலமைப்பு சட்டம் அதிகாரப்பூர்வமாக்கப்பட்ட பின்னர் போராட்டம், வன்முறை அதிரிகரித்தது. பிர்கஞ்ச் நகரில் பொலீசார் போராட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். வன்முறையில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த 40 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர். இன்னும் பதட்டம் தணியாத நிலையே காணப்படுகிறது.

**இந்தியா வரம்பு மீறக் கூடாது ஊடகங்கள் பாய்ச்சல்**

நேபாளத்தில் இத்தகைய நெருக்கடி ஏற்பட்டு உள்ள நிலையில் அண்டை நாடான இந்தியா தனது கவலையை தெரிவித்தது. நேபாள அரசியல் தலைவர்கள் கருத்தொற்றுமையை எட்டவேண்டும் என்று கோரிக்கை விடுத்த இந்தியா அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவர பரிந்துரைகளையும் செய்தது.

இதனிடையே, நேபாள நெருக்கடி குறித்து இந்தியா வெளியிட்டுள்ள கருத்துக்களை நேபாளம் ஊடகங்கள் கடுமையாக விமர்சித்து உள்ளன. நேபாளத்தில் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தள பயன்பாட்டாளர்களாலும் விமர்சிக்கப் பட்டு வருகிறது. அரசியலமைப்பில் மாற்றங்களை கொண்டுவர கூறிய இந்தியா மீது, வரம்பு மீறக்கூடாது என்று அந்நாட்டு ஊடகங்கள் பாய்ந்து உள்ளன. இந்தியா நேபாள விவகாரங்களில் தலையிடுவதாக அவை நேபாள ஊடகங்கள் சாடி உள்ளன.

நேபாளத்தின் முக்கிய பத்திரிக்கையான காந்திபூர், "நேபாள அரசியல் சட்டத்தை உருவாக்குகையில் நிச்சயமாக, பெரும் பிரச்சனைகள் நாட்டில் எழுந்திருக்கிறது. பிரச்சனைகளைத் தீர்க்கவேண்டியது நாங்கள்தான். அண்டைய நாடான இந்தியா இவ்விவகாரத்தில் மூக்கை நுழைப்பது அல்லது அந்நாட்டை நமது பிரச்சனைகளை தீர்க்க அழைப்பு என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியது கிடையாது." என்று குறிப்பிட்டு உள்ளது. காட்மாண்டு போஸ்ட் பத்திரிகை, "இந்தியா அதனது நோக்கத்திற்காக எல்லை தாண்டாமல் இருப்பது நல்லது" என்று குறிப்பிட்டு உள்ளது.

நேபாளத்தில் ட்விட்டர் மற்றும் பேஸ்புக் பயனாளர்கள், இந்தியா குறித்து ட்விட்டர் மூலம் கடுமையான விமர்சனங்களை எழுதிவருகிறார்கள்.

அமெரிக்காவுக்கான முன்னாள் நேபாளத் தூதர் ஷங்கர் ஷர்மா பேசுகையில், அண்டை நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதை இந்தியா மேற்கொண்டால், அது சர்வதேச சமுதாயத்துக்கு தவறான ஒரு செய்தியைத் தந்துவிடும், என்று கூறிஉள்ளார்.

**இந்தியாவைவிட சிறந்தது**

நேபாளத்தின் புதிய அரசியலமைப்பு சட்டம் தொடர்பாக இந்தியா கவலையை தெரிவித்து உள்ள நிலையில், இந்தியாவைவிட எங்களுடைய அரசியலமைப்பு சிறந்தது என்று நேபாளம் தெரிவித்து உள்ளது. இந்தியாவிற்கான நேபாளம் தூதர் தீப் குமார் உபாத்யாய் நேபாளத்தின் புதிய அரசியலமைப்பு சட்டமானது தெற்கு ஆசியாவிலே மிகவும் முன்னேற்றம் கண்டு உள்ளது என்று தெரிவித்து உள்ளார்.

இந்தியாவிற்கான நேபாள நாட்டின் துணைத் தூதர் கிருஷ்ணா பிரசாத் பேசுகையில், இந்தியாவைவிட எங்களுடைய அரசியலமைப்பு சிறந்தது, ஏனென்றால் அரசியலமைப்பு சட்டமானது சிறுபான்மையினர் மற்றும் பெண்களை பாதுகாத்துக் கொள்கிறது என்று கூறிஉள்ளார்.

**நேபாளத்தில் மன்னராட்சி ஒழிப்பு**

நேபாளத்தில் கடந்த 1994-ம் ஆண்டு முதல் மன்னராட்சிக்கு எதிராக மாவோயிஸ்ட்கள் ஆயுதப் போராட்டம் நடத்தி வந்தனர். கடந்த 2006-ம் ஆண்டு அவர்கள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு அரசியலில் இணைந்தனர். இதன் காரணமாக 2008-ம் ஆண்டில் 239 ஆண்டுகால மன்னராட்சி முறைக்கு முடிவு கட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கு புதிய அரசியலமைப்பை வரையறுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், கருத்து வேறுபாடுகள் காரணமாக தொடர்ந்து சிக்கல் நீடித்து வந்தது. இந்நிலையில் சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அரசியல் கட்சிகளிடையே கருத்தொற்றுமை ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்தே நேபாளத்தில் புதிய அரசியலமைப்பு சட்டம் கொண்டுவரப்பட்டு, அதிகாரபூர்வமாக்கப்பட்டுள்ளது.



நேபாள ஜனாதிபதி ராம் பரண் யாதவ்



நேபாள பிரதமர் சூர்ய பகதூர் தா

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: படித்தால் மட்டும் போதுமா
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடகர்கள்: பி.பி.ஸ்ரீனிவாஸ்,
ரி.எம்.சௌந்தரராஜன்
எழுதியவர்: கண்ணதாசன்



பொன் ஒன்று கண்டேன் பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
என்னென்று நான் சொல்லவேண்டுமா

பூ ஒன்று கண்டேன் முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்லவேண்டுமா

நடமாடும் மேகம் நவநாகரிகம்
அலங்கார கின்னம் அலை போல மின்னும்
நடமாடும் செல்வம் பணிவான தெய்வம்
பழங்கால சின்னம் உயிராக மின்னும்
துள்ளி வரும் வெள்ளி நிலா
துள்ளி வரும் வெள்ளி நிலா
துவண்டு விழும் கொடியிடையாள்
துவண்டு விழும் கொடியிடையாள்
விண்ணோடு விளையாடும்
பெண் அந்த பெண்ணல்லவோ
சென்றேன் அங்கே கண்டேன் இங்கே வந்தேன்

பெண் ஒன்று கண்டேன் பொன் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
என்னென்று நான் சொல்லவேண்டுமா

நான் பார்த்த பெண்ணை நீ பார்க்கவில்லை
நீ பார்த்த பெண்ணை நான் பார்க்கவில்லை
நீ பார்த்த பெண்ணை நான் பார்க்கவில்லை

உன் பார்வை போலே என் பார்வை இல்லை
நான் கண்ட காட்சி நீ காணவில்லை
நான் கண்ட காட்சி நீ காணவில்லை

என் விழியில் நீ இருந்தாய்
என் விழியில் நீ இருந்தாய்
உன் வடிவில் நான் இருந்தேன்
உன் வடிவில் நான் இருந்தேன்

நீ இன்றி நானில்லை
நான் இன்றி நீயில்லையே
சென்றேன் ம்ஹிம்
கண்டேன் ம்ஹிம் வந்தேன்

பொன் ஒன்று கண்டேன்
பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
என்னென்று நான் சொல்லவேண்டுமா
பூ ஒன்று கண்டேன்
முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்லவேண்டுமா

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

பத்மராசா குடும்பம்- அல்வாய், யோகலிங்கம் குடும்பம்-தெல்லிப்பழை, ஜெயா-உடுவில், சந்திரன்-மாவிட்டபுரம், கோமலேஸ்வரன் -மயிலிட்டி,பசுபதி, தவம்.

*அன்பு வாசகர்களே!*

காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1543**

எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## மௌன விழித்துளிகள் குறும்பட விமர்சனம்

எளிமையான ஒரு சிறுகதை 'மௌன விழித்துளிகள்' குறும்படத்தில் இருக்கிறது. பதுங்கு குழியின் இருண்மையான நேரத்தில் பெரும் சத்தத்துடன் குண்டுவீச்சு விமானங்கள் பறந்துதிரிகின்றன. குண்டுகள் வீழ்ந்து வெடிக்கும்போது தெறிக்கும் ஒளி பதுங்கு குழிக்குள் வீசியடிக்கிறது. அதிர்வுகளில் பதுங்கு குழி மண் உதிர்கின்றது.நீட்சியாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. பதுங்கு குழிக்குள் இருக்கும் கண்களை இழந்த பெண்குழந்தை தனது தகப்பனிடம் 'கடவுளுக்குத் தன்னைப் பிடிக்கவில்லையா? ஏன் என்னை இப்படிப் படைத்தார்?' எனக் கேட்கிறாள். 'கடவுளுக்குப் பிற எல்லோரையும் விட உன்னைத்தான் பிடிக்கும், சுற்றிலும் நடப்பதை நீ பார்க்க வேண்டாம் என்றுதான் இப்படி "உன்னைப் படைத்திருக்கிறார்"என்கிறார் தந்தை. "அம்மாவும் தம்பியும் எங்கே அப்பா?"என்கிறாள் மகள்."அவர்கள் பத்திரமாக இருப்பார்கள்"என்கிறார் அப்பா.

குண்டுகள் வெடிப்பு அடங்கிய நேரத்தில் அம்மாவையும் தம்பியையும் பார்க்க அப்பா பதுங்கு குழியை விட்டுச் செல்கின்றார். இப்போது அந்தச் சிறுமி அவளது தனிமைக்கு, அவளதும் அவளது தம்பியினதும் செல்லமான துணிப்பொம்மை அவளுடன் இருக்கிறது.




அதனை அவள் தழுவி கைகளினால் தடவத்தொடங்குகின்றாள். கொஞ்ச நேரத்தில் அப்பா வருகின்றார். அப்பாவின் கைகளில் தலைசாய்ந்து கிடக்கும் உடலெங்கும் இரத்தம் தோய்ந்த அவளது தம்பியின் உயிரற்ற உடல். பதுங்கு குழியின் இருளில் ஒரு புறம் தம்பி இறந்தது அறியாத விழிகளற்ற மகள். இடையில் சிறுவனின் உயிரற்ற உடல். மறுபுறம் வலிகள் நிறைந்த முகத்துடன் அழுகையை மகளிடம் இருந்து மறைக்க முயலும் தந்தை.

மறுகாட்சி தொடங்கும்போது தந்தை மணவெட்டியால் சவக்குழி வெட்டத் தொடங்க, மகள் 'என்ன சத்தம்?' எனக கேட்க, 'இருப்பது போதாது, நமக்கு இன்னும் பெரிய பதுங்கு குழி வேண்டும்' எனச் சொன்னபடி அழுகையை கடினப்பட்டு அடக்கி குழிவெட்டி, மகனைக் குழியில் இட்டு, அவனுக்கு மண்ணிடும்போது அவனது உடல் நோகாமல் இருக்க மென்மையான தனது மேல்சட்டையைக் கழற்றிப் போர்த்துக் கைகளால் மண்ணிழுத்து மூடும்போது, 'அப்பா, தம்பிக்கு விருப்பமான பொம்மை, இதைப் பத்திரமாக வைத்திருந்து தம்பிக்குக் கொடுத்து விடுங்கள்' என்கிறாள் மகள். மகளிடமிருந்து பொம்மைய வாங்கும் தந்தை அதனையும் மகனது உடலோடு புதைத்து, அடக்க முடியாத அழுகையுடன் அரற்றியபடி புதைகுழியை மூடத்தொடங்குகிறார். 'ஏனப்பா அழுகிறீர்கள்?' என்றபடி, நடப்பது எதுவும் தெரியாமல் பதுங்கு குழியின் மறுபக்கத்தில் சப்தத்தைத் துளாவியபடி அமர்ந்திருக்கிறாள் விழிகளற்ற பெண் குழந்தை. முகாரி ராகம் இசை சோகங்களைப் பொலிந்து ஒலிக்கின்றது:

எளிமையான நேர்கோட்டில் பயணிக்கும் சிறிய கதையில் தாங்கமுடியா மனவெழுச்சிகளை உண்டுபண்ணும் வகையில் நெகிழவைக்கும் இசையுடனும் காட்சியமைபுக்களுடனும்நடிப்புடனும் குறும்படம் மிளிர்கின்றது. எளிமையான லைட்டிங்கில் முழுவதும் பதுங்கு குழியில் மட்டுமே முழு குறும்படமும் படமாக்கப் பட்டுள்ளது. தமிழர்களின் வலிகளை பிரதிபலித்து நடித்துள்ள நடிகர்கள் அனைவரும் சிங்களவர்களாக இருப்பது இன்னும் கூடுதலான நெகிழ்ச்சிதரும் விடயமாக இருக்கின்றது.

பல்வேறு விருதுகளை மிகச்சரியான காரணங்களுக்காக தொடர்ந்தும் இக்குறும்படம் சர்வதேச தரத்தில் பெற்றுக்கொண்டு இருக்கின்றது. இக் குறும்படத்தை எழுதி இயக்கிய இளங்கோராமுக்கு இது முதலாவது குறும்படமாகவும் இருக்கின்றது.

**-அனோஜன் பாலகிருஷ்ணன்-**

## விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வக இல்லத்தின் உப தலைவர் மதிப்பார்ந்த திருமதி. மோகனவதனி ரவீந்திரன் அவர்களுடன் ஒரு நேர்காணல்



**செவ்வி கண்டவர்: வாழ்வக மாணவன்**
**திரு.வி.சு.விஜயலாதன்,**
**யாழ்.பல்கலைக்கழகம், உளவியற்றுறை**

**கேள்வி:** வணக்கம் ஆசிரியர் அவர்களே.

வாழ்வக அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் மறைவுக்குப் பின் வாழ்வக நிறுவனத்தின் வளர்ச்சியிலும் மாணவர்களின் நலனிலும் மிகுந்த அக்கறையோடு பணியாற்றி, தற்போதும் தளர்வேதுமின்றி, இப்பணியைத் தொடர்ந்துகொண்டிருக்கும் தங்களது ஐம்பதாவது ஜனன தினத்தை முன்னிட்டுத் தங்களோடு சில நிமிடங்களைப் பகிர்ந்துகொள்ளலாமென நினைக்கின்றேன்.

**கேள்வி:** உங்கள் ஆரம்பகால வாழ்க்கை பற்றிக் குறிப்பிட முடியுமா?

**பதில்:** முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் எனும் கிராமத்தில் தான் நான் பிறந்தேன். புகழ்பூத்த தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு அருகாமையில்தான் எங்கள் வீடு அமைந்திருந்தது. எனது ஆரம்பக் கல்வியை தண்ணீரூற்று சி.சி.த.க. பாடசாலையில் பெற்றேன். அப்போது நான் தணணீரூற்றிலுள்ள எனது அம்மம்மாவோடு வசித்தேன். பின், ஐந்தாம் வகுப்பினை ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள சின்னத்தம்பி வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் மேற்கொண்டேன். உயர் கல்வியை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் மேற்கொண்டு அங்கிருந்து பல்கலைக்கழகத்துக்கும் தெரிவானேன்.

**கேள்வி:** உங்கள் குடும்பம் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:** நான் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனக்கு ஒரு அண்ணனும் இரு தம்பிகளும் மூன்று தங்கைகளும் உள்ளனர். நான் முதலாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை எனது அம்மம்மாவுடனேயே தங்கியிருந்து கல்வி கற்றேன். இதனால் எனது பெற்றோர், சகோதரர்களின் அன்பையும் அரவணைப்பையும் இழந்துவிட்டேனே என எண்ணி நான் மனம் வருந்திய அந்த நாட்களை இப்போது நினைத்தாலும் சற்று வலிக்கத்தான் செய்கிறது.

**கேள்வி:** அப்படியானால், ஐந்தாம் வகுப்பிலிருந்து உங்கள் பெற்றோருடன்தானே இருந்தீர்கள்?

**பதில்:** ஆம். ஏறத்தாழ பத்து வயதிலிருந்துதான் நான் எனது பெற்றோருடன் இருந்து கல்வி கற்றேன். எங்கள் வீட்டில் எனக்கு எப்போதும் ஒரு தனியான மதிப்பும் மரியாதையும் இருந்தது. எல்லோரும் என்னில் அதிகமாக அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்கள்.

**கேள்வி:** சரி, உங்கள் பாடசாலை வாழ்க்கை எப்படியிருந்தது?

**பதில்:** இப்போதெல்லாம் பிள்ளைகள் பாடசாலை என்று சொன்னாலே அலுத்துக்கொள்கிறார்கள். ஆனால், என்னைப்பொறுத்தவரை பாடசாலை ஒரு மகிழ்வளிக்கும் இடமாகவே இருந்தது. சனிக்கிழமைகளில் பாடசாலை நடைபெற்றாலுங்கூட நானும் எனது தோழியரும் மகிழ்ச்சியுடனேயே செல்வோம். பாடசாலையில் நான் ஒரு நடுத்தர மாணவியாகவே திகழ்ந்தேன். பாடசாலையில் நடைபெறும் கலை நிகழ்வுகளில் மிகவும் ஆர்வத்தோடு பங்குகொண்டிருந்தேன்.

**கேள்வி:** உங்களது அப்போதைய இலட்சியங்கள் என்னவாக இருந்தன?

**பதில்:** மற்றவர்களுக்கு உதவவேண்டும். என்னிடமுள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற சிந்தனை என் ஆழ்மனதில் எப்போதுமே இருந்தது. மாணவர் சமுதாயத்துக்கு நான் கற்பிக்க வேண்டும். அன்பு காட்டி, இனிய மொழி பேசி அரவணைக்கவேண்டும் கற்றலில் ஏற்படுகின்ற இடர்பாடுகளைப் போக்க வேண்டும் குறிப்பாக வறிய மாணவர்களுக்கு உதவவேண்டும். நான் கற்கும்போது எனக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் மாணவர்களுக்கு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். என்றெல்லாம் நான் எண்ணியிருந்தேன்.

**கேள்வி:** உங்கள் பல்கலைக்கழக வாழ்க்கை பற்றிக் கூறுங்களேன்?

**பதில்:** பல்கலைக்கழக வாழ்க்கை மிகவும் இனிமையானது. பொதுக் கலைக் கற்கைநெறியை மேற்கொண்ட நான் இரண்டாம் ஆண்டிலிருந்து சமூகவியல் கற்கை நெறியை தெரிவுசெய்திருந்தேன். அப்போது அந்த அணியில் மிகவும் குறைந்த அளவு மாணவர்களே இருந்தார்கள். எனக்குச் சரியாக நினைவில்லை. மொத்தமாக பதினான்கு பேர் என்று நினைக்கின்றேன். நாங்கள் எல்லோராலும் சமூகவியல் குடும்பம் என்றே அழைக்கப்பட்டோம். அந்த அணியில் என்னோடு ஒரு சக மாணவராகக் கற்ற திரு ரவீந்திரனைத்தான் நான் காதல் மணம் புரிந்துகொண்டேன். அப்போது ஒரு தந்தை ஸ்தானத்திலிருந்து எங்களுக்கு வழிகாட்டிய விரிவுரையாளர் அமரர் செபஸ்தியாம்பிள்ளை அவர்களை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. அதுபோலவே இனிய சுபாவங்கொண்ட மதிப்பிற்குரிய கலாநிதி என். சண்முகலிங்கன் அவர்களையும் மறக்கமுடியாது. அவர் பாடிய சந்தனமேடை எம் இதயத்திலே உன் சதங்கையின் நாதம்தான் கேட்குதடி என்ற பாடல் இப்போதும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

**கேள்வி:** இந்த இனிய செவ்வியின் நிறைவாக நீங்கள் எமக்குக் கூற விரும்புவது?

**பதில்:** எனது மாணவர் ஒருவரே என்னைச் செவ்வி காண்பது எனக்கு மிக்க பெருமிதத்தைத் தருகின்றது. விழிப்புல வலுவிழந்த மாணவர்கள் தம்மிடமுள்ள திறன்களை நேர் மனப்பாங்கோடும் இதய சுத்தியோடும் பயன்படுத்தி வாழ்வில் முன்னேறத் தலைப்படவேண்டும். உங்களிடம் குறையைக்காட்டிலும் நிறைவுகளே அதிகமாக உள்ளன. அந்த நிறைவுகளை வெளிக்கொணருங்கள் உங்களால் எதுவும் முடியும். நிச்சயமாக முடியும். அறிவுக்கண் கொண்டு இந்த உலகத்தைப் பாருங்கள் நிச்சயமாக இந்த உலகமே உங்களைத் திரும்பிப் பார்க்கும்.

**நிறைவு:** ஐம்பதாவது அகவையைப் பூர்த்திசெய்துள்ள நீங்கள் எண்பதையும் கடந்து நூற்றாண்டு காணவேண்டும், வாழ்வக மாணவர்களின் கலங்கரை விளக்காய் திகழ வேண்டும் என வாழ்த்தி இந்த செவ்வியை நிறைவுசெய்கின்றேன்.

# ரஜனி - கமல் விஷாலை ஆதரித்தாலும் கவலை இல்லை - சரத்குமார் அதிரடி

நடிகர் சங்கத் தேர்தல் நெருங்கி வருவதால் சரத்குமார் அணியும், விஷால் அணியும் வாக்குகளை வாங்க கடுமையான போட்டியில் இறங்கியுள்ளன.



சரத்குமார் அணி மீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறது விஷால் அணி. இதனால் இவர்களும் பதிலுக்கு அவர்கள் மீது பணம் கொடுத்து வாக்கு வாங்க முயற்சிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டி வருகிறார்கள்.

மதுரையில் இருக்கும் நாடக நடிகர்களை சந்திப்பதற்காக சரத்குமார் அணியினர் மூன்றாவது தடவையாக மதுரை வந்தனர். இதில் சரத்குமார், ராதிகா, ராதாரவி, கே.என்.காளை, ராம்கி, பாத்திமாபாபு, பசி சத்யா ஆகியோர் வந்திருந்தனர்.

அதற்கு முன்பே மதுரை சங்கம் ஹோட்டலில் நாடக நடிகர்கள் குழுமி இருந்தனர். அவர்களுக்கு உணவு கொடுத்து வழிச்செலவுக்கு பணம் கொடுக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டை மதுரை ஆதீனம் ஏற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த சந்திப்பில் நடிகர் ராதாரவி பேசும்போது, எங்களுக்கு நிகரானவர்கள் கிடையாது. இவர்களுக்கு நீங்கள் வாக்கு போட்டால் நாடக நடிகர்களை நடிகர் சங்கத்திலிருந்து நீக்கி விடுவார்கள்.

எஸ்.வி.சேகர், கருணாஸ் எல்லாம் ஆளே கிடையாது. சரத்தை விட ஒரு தலைவர் யாருமில்லை. நடிகர் சங்கத்தில் வாரிசுகளை புகுத்துவதாக சொல்கிறார்கள். நடிகர் சங்கத்தில் என் மகனை சேர்க்காமல் உன் மகனையா சேர்க்க முடியும்.

அப்படி சேர்த்தால் அதை அசிங்கமாக சொல்லமாட்டார்களா? சரத்தும் நானும் மச்சான், மாப்பிளையாக இருக்கிறோம் என்று வெளியில் சொல்கிறார்கள்.

என் தங்கச்சியை கட்டினால் சரத் எனக்கு மச்சான்தானே. இது எப்படி தப்பாகும். அவர்கள் தரும் 500க்கும், 1000க்கும் விலை போய் விடாதீர்கள். அவனுங்களுக்கு மதுரை நாடக நடிகர் சங்கம், புதுக்கோட்டை சங்கமெல்லாம் இப்பத்தான் தெரியும். நீங்கள் எங்களுக்கு வாக்களிக்கவில்லை என்றால் எங்களுக்கு நல்லது. வாக்களித்தால் உங்களுக்கு நல்லது என்று மிகவும் ஆபாசமாகவும், ஒருமையிலும் பேசினார்.

சரத்குமார் பேசும்போது, எங்கள் மேல் தொடர்ந்து ஊழல் புகார் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நானும் இதற்கு பதில் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். ஆனால், பணம் கைமாறிவிட்டது என்று எஸ்.வி.சேகரும், விஷாலும் ஆதாரமில்லாமல் சொல்லி வருகிறார்கள்.

அவர்கள் மீது பத்து கோடி ரூபாய்க்கு மானநஷ்ட வழக்கு போட்டுள்ளேன். ரஜினி, கமல் அவர்களை ஆதரிப்பது பற்றி கவலை இல்லை. அவர்களுக்கு ஜனநாயகப்படி உரிமை உண்டு. இந்த சரத்குமார் நடிகர் சங்கத்துக்கு ஒன்றுமே பண்ணவில்லை என்று சொல்லும்போது மனது வலிக்கிறது.

நாளை தேர்தல் நடந்து முடிந்தாலும் இனி ஒற்றுமையாக முடியாது. என்னை பற்றி அவதுறாக பேசியவர்கள் முகத்தில் என்னால் முழிக்க முடியாது. இவ்வளவு நாள் ஷாப்டாக இருந்துவிட்டேன். இனி இருக்க மாட்டேன் நான் யாரென்பதை காண்பிப்பேன் என்றார்.

# இதுவரை இல்லாத அளவு பெரியவியாபாரம்?

## அஜித் பட ஆச்சரியம்



சிவா இயக்கத்தில் அஜித் நடிக்கும் வேதாளம் படத்தின் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தப்படத்தை நவம்பரில் வரவிருக்கும் தீபாவளி நாளில் வெளிக்கொண்டு வரத்திட்டமிட்டு வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதற்குள் படத்தின் வியாபாரம் பெரும்பகுதி முடிவடைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. தமிழகத் திரையரங்கு உரிமையில் மட்டும் சமார் நாற்பதுகோடிக்கு வியாபாரம் நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுவரையிலான அஜித் படவியாபாரங்களில் இதுவே அதிகம் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தப்படத்தின் பெயர் அறிவிக்கப்படுமுன்பே இந்தவியாபாரம் முடிவடைந்துவிட்டதாகச் சொல்கிறார்கள்.

தமிழகம் தவிர்த்து, ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட அண்டைமாநிலங்கள் வெளிநாட்டுரிமை மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புஉரிமை ஆகியன இந்தக் கணக்கில் சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கம் 3 தயாரிப்பாது யார்?

சூர்யா இப்போது விக்ரம்குமார் இயக்கத்தில் தயாராகும் 24 படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். அந்தப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடையும் நிலையில் இருக்கிறதாம். இந்தப்படத்தைத் தொடர்ந்து அவர் ஹரி இயக்கும் சிங்கம் 3 படத்தில் நடிக்கவிருக்கிறார்.


இந்தப்படத்தின் படப்பிடிப்பு அக்டோபரில் தொடங்கும் என்று சொல்லப்படுகிறது. 24 படத்தை முடித்துவிட்டு சூர்யா வந்ததும் படப்பிடிப்பைத் தொடங்கவேண்டும் என்று திட்டமிட்டு, இயக்குநர் ஹரியின் குழு தீவிரமாக இருக்கிறதாம.

இந்தப்படத்தை சூர்யாவின் 2டி நிறுவனம் தயாரிக்கிறது. அந்நிறுவனத்தோடு இன்னொரு புதியநிறுவனமும் இணைந்து தயாரிக்கப் போவதாகச் சொல்லப்பட்டது. அது எந்தநிறுவனம்?

வியாபாரத்துறையில் கொடிகட்டிப் பறக்கும் சரவணாஸ் ஸ்டோர்ஸ் திரைப்படத்தயாரிப்பில் இறங்க முடிவு செய்திருப்பதாகவும் 2 டி நிறுவனத்துடன் இணைந்து சிங்கம் 3 படத்தைத் தயாரிக்கப் போவதாகவும் சொல்லப்படுகிறது.

# கிருமி

## திரைவிமர்சனம்



ஊரில் நடக்கிற குற்றங்களைப் பற்றிக் பொலிஸாருக்குத் துப்புக் கொடுப்பவர்களை இன்பார்மர்கள் என்று சொல்வார்கள். அவர்களை மையப்படுத்தி எடுக்கப்பட்டிருக்கும் படம்தான் கிருமி.

ஒரு குழந்தைக்குத் தந்தையான பின்பும் பொறுப்பில்லாமல் ஊர் சுற்றிக்கொண்டிருக்கும் கதாநாயகன் கதிருக்கு ஏற்கனவே இன்பார்மராக இருக்கும் ஒருவர் மூலம் பொலிஸாரின் அறிமுகம் கிடைக்கிறது. சாலைகளில் தான்தோன்றித்தனமாக நிறுத்தப்படுகிற வாகனங்களை தூக்கி வாகனத்தில் ஏற்றுவது, பொலிஸ்க்காக நடை பாதைக் கடைக்காரர்களிடம் மாமூல் வாங்குவது போன்ற செயல்களைச் செய்கிறார் கதிர்.

சும்மா சுற்றிக்கொண்டிருந்தவருக்கு பொலிஸ் வாகனத்தில் பயணம் செய்வதே மிகப்பெரிய கௌரவமாக இருக்கிறது. நாம் இருப்பது, செய்வது ஆகியவை மிகவும் ஆபத்தான இடம் என்பதை உணராமல் அவர் செய்யும் செயலால் இவருக்கு வேலைகிடைக்கக் காரணமாக இருந்த இன்பார்மர் கொலை செய்யப்படுகிறார். அதன்பின் இவர் என்ன செய்கிறார் என்பதுதான் படம்.

நாயகனாக நடித்திருக்கும் கதிர், தனக்குக் கொடுக்கப்பட்ட வேடத்துக்குப் பொருத்தமாக இருக்கிறார். நண்பர்களிடம் கோபித்துக்கொள்வதும், ரவுடியிடம் அடிவாங்கி அவமானத்தில் குமுறுவதும் நன்றாகச் செய்திருக்கிறார். மனைவியாக நடித்திருக்கும் நாயகி ரேஷ்மிமேனன், அமைதியாகவும் அழகாகவும் இருக்கிறார். கணவன் பொறுப்பற்று இருப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அவன் மேல் அன்பாகவே இருக்கும் இப்படி ஒரு மனைவி அமைந்தால் எல்லோருக்கும் நல்லது. சார்லிக்கு நீண்ட இடைவெளிக்குப் பின் நல்லவேடம் அமைந்திருக்கிறது. பொருத்தமாக இருக்கிறார். தான் இருக்கும் இடம், செய்யும் வேலை ஆகியனவற்றை உணர்ந்திருப்பதை நடிப்பில் நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறார்.


பொலிஸ் அதிகாரியாக நடித்திருக்கும் டேவிட், மாரிமுத்து ஆகியோரும் சரியாக நடித்து அந்த வேடத்துக்குச் சிறப்புச் சேர்த்திருக்கிறார்கள். நாயகனின் நண்பராக வருகிற யோகிபாபு சிரிக்கவைக்கிறார். சார்லியின் மனைவியாக நடித்திருப்பவரும் கவனிக்கவைத்திருக்கிறார். இந்தப்படத்தின் கதை, திரைக்கதையை காக்காமுட்டை மணிகண்டனும் இயக்குநர் அனுசரணும் இணைந்து எழுதியிருக்கிறார்கள்.

படத்தில் வருகிற பொலிஸ் நிலையக்காட்சிகள் மிக எதார்த்தமாக இருக்கின்றன. பொலிஸாரும் ரவுடிகளும் வெவ்வேறல்ல அவை இரண்டும் இணைந்து இயங்கக்கூடிய ஒரே அமைப்பு, இது புரியாமல் இதற்குள் சிக்கிக்கொள்பவர்களை எச்சரிக்கும் விதமாக இந்தப்படத்தின் திரைக்கதையை எழுதியிருக்கிறார்கள் போலும். ஒளிப்பதிவாளர் அருள் வின்சென்டின் ஒளிப்பதிவு படத்தை இயல்பாகக் காட்ட உதவியிருக்கிறது.

படத்தொகுப்பு செய்து இயக்கியிருக்கும் அனுசரண், முதல்படம் என்கிற பொறுப்பை உணர்ந்து எடுத்திருக்கிறார். திரைக்கதையில் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். படத்தின் பெயரில் அவர் சொல்லவந்திருக்கிற விடயம் ரசிகர்களுக்கு முழுமையாகப் போய்ச் சேருமா என்பது சந்தேகம்தான். எடுத்துக்கொண்ட விடயத்தைச் சரியாக வெளிப்படுத்த முயன்றிருக்கிறார்கள்.

கடைசிக்காட்சி பொருத்தமாக அமையவில்லை, எதார்த்தம் என்றால் நாயகன் உயிருடன் இருந்திருக்கமுடியாது, திரைப்படநாயகன் என்றால், வில்லன்கள் உயிருடன் இருந்திருக்கக்கூடாது, இரண்டும் இல்லாமல் நாயகன் இயல்பு வாழ்க்கை வாழ்கிறார், அதை அவரால் சிக்கலுக்குள்ளானவர்கள் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது எதார்த்தத்தில் நடக்குமா?

# ஒரு உயிருக்காக 40,000 உயிர்கள்



## இந்தியா செய்தது நியாயம் தானா?







இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் 40 ஆயிரம் தமிழ் மக்களின் உயிரைக் காப்பாற்ற இந்தியா தவறிவிட்டது என்ற பகிரங்கக் குற்றச்சாட்டை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை சுமத்தியுள்ளார்.

இறுதிப்போரில் எத்தனை ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்று இதுவரை உறுதிப்படுத்தப்படாத நிலையில் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட முன்னைய அறிக்கையின் பிரகாரம் 40 ஆயிரம் பேர் எனவும் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் எனக்கணக்கிடப்பட்டுள்ளது.

போர் என்றால் உயிரிழப்புக்கள் இடம் பெறுவதை தவிர்க்க முடியாது என்று மகிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசிகளான அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் வாய்கூசாமல் கூறி சர்வதேச விசாரணை நடத்தப்படத் தேவையில்லை உள்ளக விசாரணையே போதுமானது என்ற நிலைப்பாட்டில் அதாவது போர்க்குற்றவாளியான மகிந்தவைக் காப்பாற்றுவதில் அக்கறையுடன் செயற்படுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க இறுதிப் போரில் போர்க்குற்றங்கள் நடைபெற்றிருக்கலாம். ஆனால் அது ஜனாதிபதிக்கு (முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு) தெரிந்து தான் நடைபெற்றிருக்கும் அல்லது அவர் தான் உத்தரவிட்டிருப்பார் எனக்கருதமுடியாது. இராணுவ உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் போர்க்குற்றங்கள் நடைபெற்றிருந்தால் அதற்காக மகிந்தவை எவ்வாறு சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த முடியும் என்று வாதிட்டுள்ளார் அமைச்சர் ராஜித சேனாரட்ன.

தமிழர் நலன்சார்ந்த விடயங்களை மகிந்த ஆட்சியில் அங்கம் வகித்து அமைச் சராக இருந்த போது எடுத்துக்கூறிய ராஜித சேனாரட்ன, ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன வருவதற்காக பல நெருக்கடிகளையும் எதிர்கொண்டிருந்தவர். ஆனால் தமிழர் நிலைப்பாட்டில் தற்போது நழுவல் போக்குடனும் போர்க்குற்றவாளி என்று உலக நாடுகளால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்தவைக் காப்பாற்றுவதிலும் அக்கறை காட்டுவதாக எண்ணத் தோன்றுகின்றது.

இந்நிலையில் ராஜித சேனாரட்ன அளித்த விளக்கத்தை நீதியரசர் நவநீதம்பிள்ளையிடம் கேள்விக்குட்படுத்திய போது அவர் அதனை மறுதலித்துள்ளார். மகிந்தவுக்கு தெரிந்தோதெரியாமலோ குற்றங்கள் இடம் பெற்றிருந்தாலும் அதனைத் தடுக்கத தவறியதற்காகஅவர் மீது விசாரணை நடததப்பட வேண்டும் என் றும் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் மட்டும் 40 ஆயிரம் தமிழ்மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை அறிக்கை மூலம் உலகிற்கு வெளிப்படுத்தி மகிந்த அரசை சர்வதேச நாடுகள் முன் தலைகுனிய வைத்தது மட்டுமின்றி சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும், போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் தனதுபதவிக்காலம் முடியும்வரை உறுதியுடன் இருந்தார். தற்போது இந்தியாவின் தந்தி தொலைக் காட்சிக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியின மூலம் தான் அந்தநிலைப்பாட்டிலிருந்து மாறவிலலை என்பதை உறுதிப்படுத்தி உள்ளார் நீதியரசர் நவநீதம்பிள்ளை.

## தொப்புள்கொடி உறவை காக்க தவறியது ஏனோ!

நவநீதம்பிள்ளை ஐ.நா. ஆணையாளராக இருந்தபோது இலங்கைக்கு வருகை தந்து போரால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்றிருந்ததோடு இறுதிப்போரில் இலங்கைப் படைகள் கோரத்தாண்டவமாடிய முள்ளிவாய்க்கால், வட்டுவாகல், புதுமாத்தளன் உள்ளிட்ட பகுதிகளில் மக்களுடன்மக்களாக இருந்து அவர்களின் வேதனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

தமிழீழவிடுதலைப்புலிகளையும்கடுமையாக விமர்சித்த நவநீதம்பிள்ளை புலிகளை அழிப்பதாகக்கூறிக்கொண்டு இலங்கை அரசு அப்பாவிப் பொதுமக்களைக கொன்று குவித்தது தவறு என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்திருந்தார். அதைத் தற்போதும் அவர் மறுதலிக்கவில்லை என்பதை அண்மைய பேட்டியின் மூலம் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார்.

இலங்கை அரசபடைகள் கண்மூடித்தனமாக தமிழர்களை இல்லாதொழித்துக் கட்ட வேண்டும் என்ற நோக்கோடு இனப்படுகொலையை அரங்கேற்றியுள்ளது என்பதையும் ஈழத்தில் தமிழினத்திற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போரில் இனப்படுகொலை நடைபெற்றது உண்மை என்பதை உலகநாடுகள் உணரவேண்டும். போர்க்குற்றங்கள், சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியோர் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வரும் நிலையில் ஐ.நாவின் முன்னாள் ஆணையர் நவிப்பிள்ளை அளித்துள்ள பேட்டி இந்திய அரசின் மனச்சாட்சியை கேள்விக்குட்படுத்தியுள்ளது. தொப்புள கொடி உறவு எனக் கூறிக் கொண்டு தொப்புள்கொடிகூட அறுக்கப்படாத நிலையில் எத்தனையோ பச்சிளம் குழந்தைகள் காவுகொள் ளக் காரணமாகயிருந்த இந்தியா, இலங்கையில் தமிழினத்திற்கு எதிராக சிங்களப் படைகள் அரங்கேற்றிய போர்க்குற்றங்களை தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

மாறாக இலங்கைத் தமிழர்களை காப்பாற்ற இராஜதந்திரநடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறி நம்ப வைத்து கழுத்ததறுத்தது இந்தியா. இவற்றுக்கெல்லாம் காரணம் ஒரு உயிர பலியெடுக்கப்பட்டதற்காக பழிக்கு பழி வாங்க இந்தியா முற்பட்டது என்பதை மறுக்கமுடியாது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றகுற்றச்சாட்டின் அடிப்படையில் புலிகளைஅழிக்க இலங்கை அரசுக்கு இந்தியா துணைபோனதன் விளைவே ஈழத்தில் 40 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்படவும் 29 ஆயிரம் தமிழ் விதவைப் பெண்கள் உருவாகவும் பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கங்களை இழந்து அவதிப்படவும் காரணமாக அமைந்தது.

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதற்கு இந்திய அமைதிப்படை இலங்கையில் சிங்களப் படைகளுடன் கூட்டுச் சேர்ந்து அரங்கேற்றிய தமிழருக்கு எதிரான அநீதிகள் காரணமாகயிருக்கலாம். அத்தோடு ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதி விசாரணைளுக்குட்படுத்தப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக தண்டனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் எதுவித பாவங்களையும் செய்யாத அப்பாவித் தமிழ் மக்கள் 40 ஆயிரம் பேரை ஒரு உயிருககாக இந்தியா பலியெடுக்க காரணமாகயிருந்ததை எதைக்கூறி நியாயப்படுத்த முடியும.

ஜனாதிபதி பதவியிலிருந்து மகிந்தவை இறக்கி மைத்திரியை அப்பதவியில் அமரவைக்க இராஜதந்திரரீதியாக செயற்பட்ட இந்தியாவிற்கு 40 ஆயிரம் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியாதா? ஒரு உயிருக்காக பழிவாங்க துடித்தவர்கள் 40 ஆயிரம் உயிர்கள் படுகொலை செய்யப்பட்டதற்காக காலங்கடந்தேனும் அமெரிக்காவினால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்டுள்ளதீர்மானத்தின் வாக்கெடுப்பின் போதாவது ஈழத்தமிழருக்கு ஆதரவாக வாக்களிக்கமுடியாதா?

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நடந்த தவறுகளுக்கு நாம் எவ்வாறு பொறுப்பேற்க முடியும் என்று பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு பதிலளிக்க முடியுமா? அவ்வாறு செய்வது நியாயம் என்றால் ஆட்சிமாறினால் அவர்கள் காலத்தில் இடம்பெற்ற அநீதிகளுக்கு நீதிமறுக்கப்படுவது நியாயம் தானா?.

இந்திய மத்திய அரசு இனியாவது ஈழத்தமிழர் நலன் சார்ந்த விடயங்களில் அக்கறை செலுத்தவேண்டும். 40 ஆயிரம் உயிர்களைப் பலியெடுத்து விட்டு 50 ஆயிரம் வீடுகளைகட்டிக் கொடுத்தால் பாவ விமோசனம் கிடைத்துவிடும் என்ற சோனியா காந்தி கண்ட கனவு பலிக்காது. செய்தபாவங்களுக்கு பரிகாரம் செய்ய முற்படவேண்டும்.

ஆட்சிக்கு வருவதற்காக அநீதிகளை எதிர்த்தவர்கள் ஆட்சிக்கு வந்தபின்னர் அநீதிகளுக்கு துணைபோனால் ஆண்டவன் தீர்ப்பிலிருந்து என்றும் தப்பிக்கமுடியாது.

இலங்கை இறுதிப் போரில் 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின உயிர்களை இந்தியா உரிய நேரத்தில் தலையிட்டிருந்தால் காத்தருளியிருக்கலாம் என்ற நீதியரசர் நவிப்பிள்ளையின் கூற்றை நன்குணர்ந்து செயற்படுவதோடு, உள்நாட்டுப் பிரச்சினை என்று உதறித் தள்ளாது தொப்புள கொடி உறவை இனியாவது பேணிப்,பாதுகாக்க வேண்டும் இந்தியா.

இந்தியாவையோ, தாய்த் தமிழகத்தையோ ஈழத்தமிழர்கள் என்றும் விட்டு விலகியதும் இல்லை இனியும் விலகப் போவதும் இல்லை. ஆனால் இலங்கை அரசு அவ்வாறில்லை. மகிந்த அரசு சீனா, பாகிஸ்தான் சார்புடையதாக இருந்தது. தற்போதைய மைத்திரி அரசு அமெரிக்கா, இந்தியா சார்புடையதாக இருக்கிறது.

அடிக்கடிமாறும் இலங்கை அரசின் வெளிவிவகாரக் கொளகைக்காக தொப்புள் கொடி உறவை வயிற்றுடன் கிழித்து விடாதீர்கள். ஈழத்தமிழர் இதயங்களில் இந்தியா ஏற்படுத்திய காயங்கள் இன்னும் ஆறவில்லை இனியும் வலிகளைச் சுமக்கும் மனநிலையில் ஈழத்தமிழர்களும் இல்லை. இழைக்கப்பட்ட அநீதிகளைத் தடுக்கும் வல்லமையிருந் தும் செய்யத் தவறியுள்ளீர்கள். அதற்கு நீதிகிடைக்க வாவது வழிவகைகளைச் செய்யுங்கள். தமிழினப் படுகொலையை தடுத்து நிறுத்துங்கள். சர்வதேச விசாரணைக்கு இலங்கை அரசை உட்படுத்த ஈழத்தமிழருக்காக குரல்கொடுங்கள். இதுவே ஈழத்தமிழரின் மன்றாட்டம்.

**காண்டீபன்**





# வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



**பாதை மாறிப்போகும் இன்றைய தலைமுறைக்கு நல்வழி காட்டுவது?**

**விசாரணை என்ற சொல்லிற்கே விசாரணை வைக்க வேண்டும் போலி...**

**போதை, வாள்வெட்டு கலாசாரம் இல்லாது போயும் துஷ்பிரயோகம்...**

கலா — உடுவில்

**போதை, வாள்வெட்டு கலாசாரம் இல்லாது போயும் துஷ்பிரயோகம் மட்டும் குறையவில்லையே?**

இருக்கும் சட்டங்களைவிட இன்னும் கடுமையான சட்டங்களை இயற்றவேண்டும். வழங்கப்படும் தண்டனைகள் இது போன்ற குற்றங்களை செய்ய எத்தனிப்பவர்களின் மனங்களை மாற்றும் அளவில் அமைய வேண்டும்.

மீனு — சங்கானை

**பாடசாலை முடிய ரீயூசன், ரீயூசன் மூடிய வீட்டில் மேலதிக வகுப்பு இப்படியென்றால் மாணவர்கள் எப்படி மன நிம்மதி அடைவது?**

இப்போதெல்லாம் பிள்ளைகளுக்குள் போட்டியுமில்லை, பொறாமையும் இல்லை. பிள்ளைகளை ரியூசனுக்கு அனுப்பிவிட்டு வெளியில் நின்று தங்கள் பிள்ளைகளின் மதிப்பெண் பற்றி பேசும் பெற்றோர்களிடம் தான் இந்த போட்டி, பொறாமை போன்ற கண்றாவிகள் இருக்கின்றன.

சி.சுகிர்தமலர் — உரும்பிராய்

**இன்றைய அரசியல் விஞ்ஞான, மெய்ஞ்ஞான உலகம் எதை நோக்கி செல்கிறது?**


அரசியல் - பணத்தை நோக்கி
விஞ்ஞானம் - புது இனத்தை நோக்கி
மெய்ஞ்ஞானம் - ஆன்மபலத்தை நோக்கி
இந்த மூன்று பயணத்தில் தற்போதுள்ள கருத்துக் கணிப்புப்படி அரசியல்வாதிகளே தங்களின் இலக்கை அடைகின்றார்கள்.

வேல்நந்தன் — புலோலி

**விசாரணை என்ற சொல்லிற்கே விசாரணை வைக்க வேண்டும் போலிருக்கிறதே?**

போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களை மின்சாரக் கதிரையில் இருந்து பாதுகாத்து விட்டோம் என கூறுவதற்குள் என்ன பொருள் இருக்கிறது.

சர்வதேசம் விசாரணை செய்தால் குற்றவாளிகளுக்கு மின்சாரக் கதிரை நிச்சயம். நாம் விசாரணை செய்தால் தண்டனை...? இதை ஐக்கிய நாடுகள் சபையின் வாசலில் வைத்து கூறுமளவிற்கு விசாரணைகளின் வீரியத்தைப் பாருங்களேன்.



சித்திரவேலாயுதம் — வட்டுக்கோட்டை

**அமைதிப்படைக்கும் கூட்டமைப்பிற்கும் ஓர் ஒற்றுமை சொல்லுங்க?**

வரும்போது இருந்த நோக்கம் வந்தபின்பு இருக்கவில்லை.


வேலியே பயிரை மேயும் என்பதற்கு நல்ல உதாரணம்.

ஜெயரூபன் — பருத்தித்துறை

**பாதை மாறிப்போகும் இன்றைய தலைமுறைக்கு நல்வழி காட்டுவது?**

வெளிநாட்டில் இருக்கும் அன்புச் சகோதரர்களே! நீங்கள் இரத்தத்தை உறைய வைக்கும் கடும் குளிரில் குடும்பத்திற்காக உங்களையே தியாகம் செய்கிறீர்கள்.

தயவுசெய்து உங்கள் பணத்தை பல்சர் மோட்டார் சைக்கிளுக்கோ, உயர் ரக தொலைபேசிக்கோ அனுப்பிவிடாதீர்கள். எங்கள் இளைஞர் அதனால் வழி தவறுகிறார்கள். உழைப்பை அவர்களுக்கு உணர்த்த முயற்சியுங்கள்.



"ஜெயம் ரவிக்கு உணவில்லை என்றால் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்!"

"என்ன... தலைவர் உளர்றார்?"

"உளரல, ஜெயம் ரவிதானே "தனி ஒருவன்?"

*அன்பு வாசகர்களே!*

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

வே. அகிலேஸ்வரன் — மருதங்கேணி

**இந்தக் காலத்தில் அமைதி காப்பது தகுமா?**

எப்போதுமே அமைதி காப்பது நல்லது தான். ஆனால் இறுதி யுத்தத்தில் இன அழிப்பு நடைபெறவில்லை. போர்க்குற்றம் நிகழவில்லை என ஆட்சியாளர்கள் அறிக்கை விடும் போது எதிர்க்க வேண்டிய கதிரையில் இருந்து கொண்டு எதிர்க்காமல் அமைதிகாப்பது தகுமா?

தரன் — கொடிகாமம்

**அறியாமை என்பது என்ன?**

கூலி வேலை செய்யும் தந்தை பெருமையாக கூறுகிறார் "எங்கள் பரம்பரையிலேயே முதன் முதலாக வெளிநாடு செல்வது என் மகன் தான். அவன் மூலமாக கூலி வேலை செய்யும் பரம்பரை என்னுடன் முடிவடைகிறது" என்றார். அவனும் அங்கே அதே வேலைதான் செய்யப் போகிறான் என்பதை அறியாமல்.

ரவிவர்மன் — மீசாலை

**சிந்திக்கும் படி ஒரு ஜோக் சொல்லுங்கள்?**

வேலையில்லா பட்டதாரிகள் சங்கக் கூட்டத்திற்கு வேலைத்தளத்தில் அரை நேர லீவு போட்டுவிட்டு சென்றான் அரவிந்தன்.

கோபி — மந்திகை

**வியாசரே நீங்க நல்லவரா கெட்டவரா?**

என் சில பதில்களை படித்துவிட்டு நான் நல்லவன் என நீங்கள் நினைப்பது தவறு. அதே நேரம் என் பல பதில்களை படித்துவிட்டு நான் கெட்டவன் என எண்ணுவது தவறிலும் தவறு.

க.நாகராசா — நுணாவில்


**குரங்கின் பரிணாம வளர்ச்சியே மனிதன் எனும் கூற்றை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

இந்தக் கேள்வி நீங்கள் கேட்பதை குரங்குகள் அறிந்தால் கோபித்துக் கொள்ளுமல்லவா?

தருண் — கோப்பாய்

**தியாகம் என்றால் என்ன?**

மூன்றாவது முத்தம் கொடுக்கும் போது அவளின் கன்னங்கள் சிவந்து அழ ஆரம்பித்து விட்டாள். முதலில் சேவ் எடுக்க வேண்டும் என் செல்ல மகளுக்காக.





# ஷெல்லி எனும் கில்லி!

சமீபத்தில் சீனாவில் நடந்து முடிந்த உலகத் தடகளப் போட்டியில், 100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாவது முறையாக தங்கம் வென்று, உலக சாதனையைச் சமன்செய்தார் உசேன் போல்ட். ஊடகங்களைச் சந்திக்க போல்ட் வந்தபோது அந்த அறை நிறைந்திருந்தது.

மறுநாள், அதே 100மீற்றர் ஓட்டம்... அதே மூன்றாவது முறை தங்கம்... அதே சாதனை. ஆனால், இதைச் சாதித்தது ஒரு வீராங்கனை. மீடியாவிடம் அவர் பேச வந்தபோது, அறையில் பாதிகூட நிரம்பி இருக்கவில்லை. ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த அந்த வீராங்கனை ஷெல்லி ஆன் ஃ பிரேசர் ப்ரைஸ்.

1986-ம் ஆண்டில் ஜமைக்கா நாட்டின் கிங்ஸ்டனில் பிறந்தவர் ஷெல்லி. கடும் வறுமைச்சூழலில் இருந்து வெடித்துக்கிளம்பி, ஒலிம்பிக், உலகத் தடகளப் போட்டிகள்... என அனைத்திலும் பதக்க வேட்டையாடியவர். உசேன் போல்ட்டுக்கு நிகராக களத்தில் சாதனைகள் புரிந்தவர். ஆனால், போல்ட்டுக்குக் கிடைத்த புகழ் வெளிச்சம், ஷெல்லிக்கு ஏனோ கிடைக்கவே இல்லை! போல்ட் பெற்ற விளம்பரம், வெளிச்சம், சம்பளம்... என எதுவும் ஷெல்லிக்கு இல்லை. இத்தனைக்கும் உலகின் வேகமான நான்காவது பெண் ஷெல்லி. தொடர்ந்து இரண்டு முறை ஒலிம்பிக் தங்கம் வென்ற மூன்றாவது பெண். ஒலிம்பிக் பதக்கம் மற்றும் உலகத் தடகளப் பதக்கம் இரண்டையும் வைத்திருக்கும் இரண்டாவது பெண். கடந்த ஏழு வருடங்களாக 100 மீ. தரவரிசையில் பல முறை நம்பர் 1 இடம் பிடித்தவர். இதனால் ஜமைக்கா நாட்டில் ஷெல்லியை "பாக்கெட் ராக்கெட்' என அழைப்பார்கள்.

நாட்டுக் கொடியை முதுகில் கட்டிக்கொண்டு வெற்றிக்குறி போஸ் கொடுப்பார் போல்ட். அதுபோல ஷெல்லியின் சிக்னேச்சர் ஸ்டைல், ஜமைக்கா கொடியைப் பின்னால் பிடித்தபடி விதவிதமான ஹேர்ஸ்டைலுடன் சிரிப்பது.

மஞ்சள் நிற டெய்சி பூக்கள் ஷெல்லிக்கு மிகவும் பிடிக்கும் என்பதால், அது பலமுறை அவர் கூந்தலை அலங்கரிக்கும். அதோடு பிங்க், மஞ்சள் என வெளிர் நிறங்களில் கூந்தலை கலரிங் செய்துகொள்வார்.

போல்ட் வென்ற மொத்த ஒலிம்பிக் பதக்கங்கள்... 6 தங்கம் ஷெல்லி வென்றது 4 பதக்கங்கள் (2 தங்கம் 2 வெள்ளி). உலகில் அதிகம் சம்பாதிக்கும் தடகள வீரர் உசேன் போல்ட். ஆனால், ஷெல்லிக்கு ஜமைக்கா நாட்டின் சில நிறுவனங்களைத் தவிர வேறு எந்த ஸ்பான்ஸர்களும் கிடைக்கவில்லை.

ஒருமுறை போட்டியில் பங்கேற்கச் சென்றபோது, ஊக்கமருந்து உட்கொண்ட சர்ச்சையில் சிக்கினார் ஷெல்லி. அவருடைய சிறுநீர் மாதிரியில் "ஆக்சிகோடன்' இருப்பது உறுதிசெய்யப்பட்டது. பல்வலி பாதிப்புக்காக வலிநிவாரணியாக எடுத்துக்கொண்ட மாத்திரைகள் சதிசெய்தன. விசாரணையில் அது தடைசெய்யப்பட்ட மருந்து என்றாலும், ஊக்கம் அளிக்கும் ரகம் அல்ல எனச் சொல்லப்பட்டு, ஆறு மாதத் தடை மட்டுமே கிடைத்தது. இதனால் சில சர்வதேசப் போட்டி வாய்ப்புகள் பறிபோயின. அந்தக் களங்கத்தை லண்டன் ஒலிம்பிக்கில் துடைத்தார் ஷெல்லி. அந்தப் போட்டித்தொடரில் 100 மீற்றரில் தங்கம், 200 மீற்றரில் வெள்ளி எனச் சொல்லியடித்தார். ஆனால் சோகம்... அங்கும், தொடர்ந்து 'இரண்டு முறை தங்கம் என உசேன் போல்ட் மீண்டும் பத்திரிகை பக்கங்களை ஆக்கிரமித்தார்.

2013-ம் ஆண்டு உலகத் தடகளப் போட்டியில் 100 மீ, 200 மீ, 400 மீ... என மூன்றிலும் தங்கம் வென்றார் ஷெல்லி. நம்புவீர்களா..? போல்ட்டும் மூன்று தங்கம் தட்டி, மீடியா கவனத்தை வளைத்துக் கொண்டார். இதேதான் சமீபத்தில் நடந்த கதையும்.

சீனாவின் பீஜிங்கில் நடந்த உலகத் தடகளப் போட்டியில் 100 மீ மற்றும் 400 மீ இரண்டிலும் தங்கம் வென்றார் ஷெல்லி, ஆனால், போல்ட்டும் மூன்று தங்கம் வென்று அங்கும் ஸ்கோர் செய்தார். ஒபாமா விருந்து, வெற்றி விழா என எது நடந்தாலும் போல்ட், ஷெல்லி இருவருக்கும் அழைப்பு இருக்கும். ஆனால், ஷெல்லியின் முகம் பத்திரிகைகளில் மின்னியது குறைவே. அதைப் பற்றி சின்ன வருத்தத்தையும் பகிர்ந்துகொள்ளமாட்டார் ஷெல்லி.

"உசேன் போல்ட் மட்டும் கொண்டாடப்படுகிறாரே?' என ஷெல்லியிடம் கேட்டால், "அவர் 9.6 நொடிகளில் ஓடுகிறார் நான் 10.7 நொடிகள் எடுத்துக்கொள்கிறேன். அந்தப் புகழ், பாராட்டுகளுக்கு அவர் தகுதியானவர்தான். என்னை ஏன் அவருடன் ஒப்பிடுகிறீர்கள்? என் உழைப்புக்கு ஏற்ற வெற்றி எனக்குக் கிடைக்கிறது அதுவே போதும். ஆனால், ஒரு விடயம் மட்டும் உண்மை. இது ஆண்களின் உலகம்' எனச் சிரிக்கிறார் ஷெல்லி.



உசேன் போல்ட்டுடன் ஷெல்லி...

